மே 01 – 07, 2005
May 01 - 07, 2005

16.00


24 பக்கங்கள்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI


வார மலர்



## புலனாய்வுத் துறையினரை அதிரவைத்த கடத்தல்









## அடிதடி மூலமாவது ஆட்சியை தக்கவைக்க ஜெயலலிதா கங்கணம்!

## பொதுக்கட்டமைப்பு விடயம் இழுத்தடிக்கப்படுமா?




### பதவி மாறுமா?

*வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் வெகுவிரைவில் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முடிவெடுத்துள்ளாராம். உடல் நலக் குறைவுதான் இதற்குக் காரணமாம். ஏற்கனவே பல தடவைகள் இந்த ஓய்வு குறித்து ஜனாதிபதியிடம் பிரஸ்தாபித்தபோது கொஞ்ச நாள் கடமையாற்றுமாறு கோரப்பட்டதாம்.*

*ஆனால் உடல்நிலை இப்போது மோசமாகிக் கொண்டுவருவதால் ஓய்வு பெறுவதில் விடாப்பிடியாக இருக்கிறாராம் அமைச்சர். அப்படியாயின் அமைச்சர் ஓய்வு பெற்றால் அந்த இடத்துக்கு யார் நியமிக்கப்படுவார்கள் என்பதுதான் பிரச்சினை. அரச சமாதான செயலகத்துக்குப் பொறுப்பாக இருப்பவரை அந்த இடத்துக்கு நியமிக்கலாமா என்பது பற்றி அரச தலைமைத்துவம் ஆராய்கிறது.*

*அவரை இந்தப் பதவியில் அமர்த்தினால் ஐ.நா. செயலர் பதவிக்கு போட்டியிடும் அவருக்கு இது பெரும் நன்மையாக இருக்குமென அரச உயர்மட்டம் கருதுகிறதாம்.*

### நிம்மதி இல்லை

*தனிப்பட்ட விடுமுறையை மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அங்கும் நிம்மதி இல்லையாம். தனது மகள் யசோதாவின் 25ஆவது [illegible] பிறந்த தினத்தை கொண்ட[illegible] ஜனாதிபதி இங்குள்ள அரசி[illegible] நிலைமை குறித்து தினமும் [illegible]து ஆலோசகர்களுடன் தொலை[illegible] பேசியூடாக கேட்டறிந்து கொண்டிருந்தாராம்.*

*பொதுக்கட்டமைப்பு விவகாரம் குறித்து ஜே.வி.பியின் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் மேல் மாகாணசபை முதலமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் ஜே.வி.பி. நடந்துகொள்ளும் விடயம் குறித்து ஜனாதிபதிக்கு விலாவாரியாக விளக்கப்பட்டபோது இதனை கேட்டு ஆத்திரமடைந்தாராம் ஜனாதிபதி. என்ன செய்ய? எல்லாம் காலம் கடந்த ஞானம்.*

### ஆனந்த சங்கடம்

*ஜனாதிபதி வெளிநாட்டிலிருந்தபோது அவருக்குப் பதிலாக செயற்பட்ட சிரேஷ்ட அமைச்சர் விக்ரமநாயக்க ஊடகவியலாளரொருவருக்கு வழங்கிய பேட்டியின்போது ஆனந்த சங்கரியாரை பற்றித் துதிபாடினாராம்.*

*சிரேஷ்ட தலைவன், தமிழர்களின் பிரதிநிதி [illegible]றெல்லாம் ஆனந்த சங்கரிக்கு புகழாரம் சூட்டப்பட்டது. இந்[illegible]ரம் தான் சங்கரியார், அரசாங்கத்துக்கு அனுப்பிய 'இரகசியமான கடிதம்' குறித்தும் அமைச்சர் குறிப்பிட்டார். அதுமட்டுமா? சங்கரியார் அனுப்பிய அந்தக் கடிதத்தின் பிரதியை ஊடகவியலாளருக்கும் வழங்கினாராம் அமைச்சர்.*

*இனவாதம் பேசினாலும் கூட தமிழ்த் தலைவர்களை எப்படிக் காப்பாற்றுகிறார்கள் பார்த்தீர்களா? கடிதம் விடயம் வெளிவந்தது பற்றி தன்னைத்தானே கடிந்து கொள்கிறாராம் சங்கரி. இது ஆனந்த சங்கடம்.*

### வேண்டாமே!

*எஸ்.பி. திஸாநாயக்கவை சிறைச்சாலையில் சந்திப்பவர்களின் பட்டியலில் அண்மைக்காலமாக முக்கியமானவர்கள் இடம்பெற்று வருகின்றனராம்.*

*கடந்த வாரம் வடமத்திய மாகாணத்தின் முதலமைச்சர் பேர்ட்டி பிரேம்லால் திஸாநாயக்க, தேசிய வைத்தியசாலையில் வர்த்தக வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் எஸ்.பி.யை சந்தித்தார்.*

*முக்கியமான அரசியல் விவகாரங்கள் இந்த விடயத்தில் ஆராயப்பட்டன. ''ஜனாதிபதியிடம் பொதுமன்னிப்பைக் கோருங்களேன்'' - என்று எஸ்.பி.யிடம் முதலமைச்சர் கேட்டுக்கொண்டபோது அன்பாக அதனை நிராகரித்தாராம் எஸ்.பி.*

### சட்டமில்லை?

*ஜனாதிபதி லண்டனில் கடந்த வாரம் இருந்த அதேநேரத்தில் பிரதமர் இந்தோனேஷியா செல்லவேண்டி ஏற்பட்டது. நாட்டின் முக்கியமான இருவர் இல்லாத காரணத்தினால் இந்த விஜயத்தை மேற்கொள்ள முன்னர் பதில் பிரதமராக ரட்னசிறியை நியமித்தால் என்ன என்று தனது ஆலோசகர்களை வினவினார் மகிந்த. ஆனால், இதனை ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டுமென ஆலோசனை கூறப்பட்டது. இதுபற்றி ஜனாதிபதியின் செயலாளர் ஜனாதிபதியிடம் கூறியபோது ஜனாதிபதி இதனைப்பற்றி ஒன்றுமே கூறவில்லையாம். அது ஏன் என்றுதான் தெரியவில்லை. இது ஒரு தேவையற்ற விடயமெனக் கருதினாரா?*


### பாவம் எரிக்

*சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹேய்ம் தனது கடைசி இலங்கை விஜயம் குறித்து அதிருப்திப்பட்டுக் கொண்டாராம். முக்கிய முன்னாள் அமைச்சரொருவரிடம் எரிக் இப்படிக் கூறினாராம். '' புலிகள் விரும்பினால் ஜே.வி.பி. எதிர்க்கிறது; ஜே.வி.பி. விரும்புவதை புலிகள் ஏற்கமாட்டார்கள். அரசு விரும்பினால் அதையும் ஜே.வி.பி. எதிர்க்கிறது. ஜே.வி.பியின் பிடிவாதம் எங்குபோய் முடியுமோ?'' என்றாராம்.*

# புலனாய்வுத் துறையினரை அதிர வைத்த கடத்தல்

கல்கிசை பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப்பிரிவின் பொறுப்பதிகாரி ரி.ஜெயரட்ணம் என்பவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20ஆம் திகதி இரவு இரு இளைஞர்களுடன் ஹோட்டல் ஒன்றில் இருந்து வாகனம் ஒன்றில் சென்ற இந்த பொலிஸ் புலனாய்வுத்துறை அதிகாரி பின்னர் வீடு திரும்பவில்லை. இவர் புலிகளால் கடத்திச்செல்லப்பட்டிருக்கலாம் என பாதுகாப்பு தரப்பு கருதுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.


ரி.ஜெயரட்ணம்

புலிகளுக்கெதிரான புலனாய்வு நடவடிக்கைகளில் மிகவும் நுட்பமாகச் செயற்பட்டவர் இவர். தலைநகர் கொழும்பில் புலிகளின் பல நடவடிக்கைகளை கடந்த காலங்களில் முறியடிப்பதற்கு முனைப்புடன் செயற்பட்டவர்.

20 ஆண்டுகளாக பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றி வரும் இவர் கடந்த 10 ஆண்டுகளாக குற்றப்புலனாய்வுப் பணியகத்திலும் பின்னர் பயங்கரவாத ஒழிப்புப் பணியகத்திலும் கடமையாற்றி வந்தார்.

புலிகளின் நடவடிக்கைகளை முனைப்புடன் முறியடிப்பதில் தீவிரமாகச் செயற்பட்ட தமிழரான இவருக்கு புலிகளால் அச்சுறுத்தல் இருந்ததாகவும், புலிகளே இவரைக் கடத்தியிருப்பதாகவும் இவரின் மனைவி சரளா குற்றம் சுமத்துகிறார்.

## கடத்தல் இடம்பெற்றது எப்படி?

எவ்வாறு இக்கடத்தல் இடம் பெற்றது என்பது பற்றிய பல்வேறு தகவல்கள் வெளியாகிவருகின்றன.

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் காணித்துண்டு ஒன்றை வாங்குதவற்கு வவுனியாவில் புளொட் அமைப்பில் இருந்தவர் என்று கூறப்படும் மனோ என்பவரின் உதவியை பொலிஸ் அதிகாரியான ஜெயரட்ணம் பெற்றிருந்தார். இதன் மூலம் மனோவுக்கும் இந்த பொலிஸ் அதிகாரிக்கும் இடையில் நெருக்கமான உறவு ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்தவருட பிற்பகுதியில் வவுனியாவில் வைத்து புளொட்டின் ஆரம்பகால உறுப்பினரான இடியன்செல்வம் என்ற செல்வராஜாவுடன் மேற்படி மனோவும் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

சிறிது காலத்தின் பின் திடீரென தோன்றிய மனோ, தான் புலிகளின் பிடியில் இருந்து தப்பி வந்துவிட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இதன்பின்பு கடந்த நான்கு மாதங்களாக அடிக்கடி கல்கிசையில் உள்ள பொலிஸ் அதிகாரி ஜெயரட்ணத்தின் வீட்டுக்கு வந்து செல்ல ஆரம்பித்தார் மனோ.

கடந்த வாரம் ஜெயரட்ணத்தின் வீட்டுக்குச் சென்று தமது உறவினர் ஒருவர் லண்டனில் இருந்து வந்துள்ளார் என்றும் அவரை அறிமுகம் செய்து வைப்பதாகவும் கூறிச் சென்றார்.

அத்துடன் கடந்த 20ஆம் திகதி (புதன் கிழமை) கல்கிசையில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு ஜெயரட்ணத்தின் குடும்பத்தை இரவு விருந்து ஒன்றுக்கு அழைத்துச் சென்றிருந்தார் மனோ. லண்டனில் இருந்து வந்ததாகக் கூறப்படும் குமார் என்பவரும் மனோவுடன் வந்திருந்தார்.

இரவு விருந்தின்போது அளவுக்கு அதிகமான மது மயக்கத்தில் ஜெயரட்ணம் காணப்பட்டார்.

அவர் தனது குடும்பத்தினரை வீடு செல்லுமாறும் தான் மனோவுடன் அலுவல் நிமித்தம் செல்வதாகவும் மறுநாள் காலை 6 மணியளவில் தாம் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையம் செல்லவேண்டும் எனவும் கூறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. மனோவும் குமார் என்பவரும் ஜெயரட்ணத்துடன் வாகனம் ஒன்றிலேயே அங்கிருந்து சென்றனர்.

ஜெயரட்ணம் இவ்வருடமே பம்பலப்பிட்டி பொலிஸ் களப் படைத்தலைமையகத்துக்கு மாற்றலாகி வந்திருந்தார். ஆனால், குடும்பத்தினருடன் கல்கிசை பொலிஸ் விடுதியில் (உயர்பாதுகாப்பு மிக்கது) வசித்து வந்தார்.

மறுநாள் காலையே மனைவி பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது அவர் அங்கு வராதது தெரியவந்தது. இதையடுத்து அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் பறந்தது. புலிகளின் பகுதிக்கு செல்லும் பாதைகள் பொலிஸாரினால் உஷார்படுத்தப்பட்டன.

ஹோட்டலில் இருந்து நேரடியாகவே புலிகளின் பகுதிக்கு ஜெயரட்ணம் கடத்தப்பட்டுவிட்டார் என பாதுகாப்புத் தரப்பு தெரிவிக்கிறது. அதற்கான ஆதாரம் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலனறுவைக்கும், திருகோணமலைக்கும் இடையிலான காட்டுப்பகுதியில் வைத்து புலிகளின் தொலைத்தொடர்பு (வோக்கி டோக்கி) உரையாடலை இடைமறித்து ஒட்டுக்கேட்டபோது, அதில் ''தமிழ் ஐ.பி. புலனாய்வுத்துறை அதிகாரியை அழைத்து வருகிறோம் பாதையை கிளியர் பண்ணுங்கள்'' எனக் கூறியமை பதியப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு கூறுகிறது.

கிழக்கு நோக்கி அவர் அழைத்துச்செல்லப் பட்டதால், அண்மைக் காலங்களில் புலிகளுக்கு எதிரான கருணாகுழு — ஈ.என்.டி.எல்.எப். குழுக்களை பயன்படுத்தும் நிழல்யுத்தத்துக்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

அண்மைக்காலமாக அரச படைத்துறையின் சகல புலனாய்வுப் பிரிவுகளும் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளமையால் அதில் இவரின் பங்கும் இருக்கலாம் அல்லது இவருடனான நேரடித்தொடர்புகள் குறிப்பாக இத்துணைப்படைக் குழுக்களின் கொழும்புச் செயற்பாடுகளுக்கு உறுதுணை புரிந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கருணாவின் பிரச்சினையின் பின் கிழக்கிற்கு புலிகளால் அனுப்பப்பட்ட புலனாய்வுத்துறை முக்கியஸ்தரும் தமிழீழ தேசிய புலனாய்வுத்துறை பொறுப்பாளருமான நியூட்டன் என்பவர் (நவம்பர் விஸ்கி என்ற சங்கேத பெயரில் அழைக்கப்படுபவர்) அண்மையில் கொழும்பில் நடமாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் பிரசன்னத்தின் பின்பே இக்கடத்தல் நடந்திருப்பதாகவும் இவரின் நடமாட்டங்கள் இலங்கை இராணுவ புலனாய்வு துறையால் இனம் காணப்பட்டு அவதானிக்கப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்புத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே பாணியில்தான் கடந்த வருடம் நவம்பர் மாதம் இந்தியாவில் இருந்து வந்திருந்த ஈ.என்.டி.எல்.எப். முக்கியஸ்தரும் கருணா குழு – ஈ.என்.டி.எல்.எப். இணைப்பாளருமாகச் செயற்பட்டவருமான மனோமாஸ்டர் எனப்படும் இராஜரத்தினம் கொழும்பில் வைத்து கடத்திச் செல்லப்பட்டார். அவர் நீர்கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கடல்வழியாக வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரிடம் இருந்து பல முக்கிய தகவல்கள் புலிகளால் கறக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதேபோல்தான் பொலிஸ் புலனாய்வு அதிகாரி ராஜரட்ணமும் கடத்தப்பட்டு புலிகள் பகுதிக்கு (கிழக்கு) கொண்டுசெல்லப்பட்டுள்ளார் என்று படைத்தரப்பு நம்புகிறது.


சரளா

இவரின் சகோதரர் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிளாக இருந்த சமயம் 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் வைத்து புலிகளால் கொல்லப்பட்டிருந்தார்.

ஜெயரட்ணம் கொழும்பில் சில புலி உறுப்பினர்களைக் கைது செய்த அதேவேளை பல அப்பாவிகளையும் கைதுசெய்து சித்திரவதை செய்ததுடன் கைதுசெய்த பல பெண்களையும் முறைகேடாக பயன்படுத்தினார் என்றும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கின்றன.

ஜெயரட்ணம் கடத்தலை அடுத்து ஆறு பொலிஸ் குழுக்களும், விசேட இராணுவக் குழுக்களும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

**சலன்**

ஜெயரட்ணத்துக்கு முன்னர் கடமையாற்றிய குற்றத் தடுப்புத் திணைக்களத்தின் தலைமை அதிகாரியான நிலாப்தீன் தற்போது வெளிநாட்டில் உள்ளார்.

அரச புலனாய்வுத்துறை ஆரம்ப காலம் முதல் தமிழ் அதிகாரிகளை விடுதலைப்போராட்டத்துக்கு எதிராக பயன்படுத்தி வருகிறது.

# புதுவருட சுபநேரத்தில் முடிசூட்டப்பட்ட மினிமுத்து குமாரர்களும், குமாரிகளும்

தமிழ், சிங்கள புதுவருடப்பிறப்பின் போது நம்நாட்டில் ஐந்து இடங்களில் பிறந்த குமாரர்களுக்கும், குமாரிகளுக்கும் மினிமுத்து புதுவருடக் குமாரர்கள், குமாரிகள் என முடிசூட்டப்பட்டார்கள்.



## குமாரர்களுக்கும், குமாரிகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| புதுவருடக்குமரி<br>தாய் - விரோஷனி பெர்ணாண்டு.<br>தந்தை - அருண சம்பத் | புதுவருடக்குமரி<br>தாய் - சஞ்ஜீவனி வாசனா<br>தந்தை - சாமர குணரத்ன | புதுவருடக்குமரி<br>தாய் - ஜயங்கனி ஹேரத்<br>தந்தை - அமல் புத்திக்க | புதுவருடக்குமரன்<br>தாய் - நிஷானி நதிஜா ஹெட்டியாராச்சி<br>தந்தை - ஜகத் பியசேன லியனஹேவகே | புதுவருடக்குமரி<br>தாய் - கோமதி<br>தந்தை - பொன்னன் தேவேந்திரன் |
| புதுவருடக்குமரன்<br>தாய் - சீதானி இனோகா<br>தந்தை - சுதத் பெரேரா | புதுவருடக்குமரன்<br>தாய் - ஸ்வர்ணலதா ஜயசிங்க<br>தந்தை - எம். பி. கருணாரத்ன | புதுவருடக்குமரன்<br>தாய் - சிரானி பத்மலதா<br>தந்தை - உபாலி ஜயதேவ | புதுவருடக்குமரி<br>தாய் - பிரியாணி கஞவாராச்சி<br>தந்தை - சரத் அல்விஸ் வீரசிங்க | புதுவருடக்குமரன்<br>தாய் - சுரேகா<br>தந்தை - கருணாணந்தன் |

உங்கள் குழந்தைக்கும் மினிமுத்து பரிசு

உங்கள் குழந்தை ஏப்ரல் மாதம் 14ம் திகதி பிறந்திருப்பின் கீழே கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்பி பெறுமதியான பரிசொன்றை பெறுங்கள்.

தாய்/தந்தை பெயர் - ______________________

விலாசம் - ______________________

குழந்தை பிறந்த மருத்துவமனை - ______________________

வைத்தியரின்/ சுகாதாரசேவகி/ மருத்துவமனை முத்திரை - ______________________

உங்கள் கூப்பனை பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

MARKETING DIVISION, SRI LANKA INSURANCE, NO: 21, VAUXHALL STREET, COLOMBO 02.

SLI

மினிமுத்து

இணைந்த குடும்பத்திற்கு

ஸ்ரீ லங்கா இன்ஷவரன்ஸ்

# சுடர் ஒளி

மே 01 – 07, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com


## தொடரும் பலப் பரீட்சை

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை, பொதுக்கட்டமைப்பு, அரச உடமைகளை தனியார் மயமாக்குதல் உட்பட பல பிரச்சினைகளில் ஜே.வி.பியினருக்கும், சுதந்திரக்கட்சிக்கும் இடையில் நிலவிவந்த முரண்பாடுகள் ஆளும் தரப்பைச் சேர்ந்த மாகாணசபை முதலமைச்சர் ஒருவரைப் பதவி கவிழ்க்கும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளன.

நாடாளுமன்றத்தில் உள்ள தனது பலத்தை பயன்படுத்தி சுதந்திரக்கட்சியை ஆட்டிப்படைத்துவரும் ஜே.வி.பி, தனது பலப்பரீட்சையின் களமாக மேல் மாகாண சபையை பயன்படுத்த முற்படுவது சமீப கால சம்பவங்கள் மூலம் புலனாகிறது.

''ஜே.வி.பியினர் ஆளும் தரப்பில் இருந்து கொண்டு எப்படி எதிர்க்கட்சிக்கு சார்பாக வாக்களிக்க முடியும்? விரும்பினால் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலேயே போய் அமர்ந்து கொள்ளட்டும்'' என்று சவால் விடுத்த ஜனாதிபதி தற்போது — வழமை போன்று — ஒரு படி கீழே இறங்கி மேல் மாகாணசபையின் அமர்வுகளை மூன்று வாரகாலத்துக்கு ஒத்திவைத்துள்ளார்.

அந்த மூன்று வார காலத்துக்குள் ஜே.வி.பியினரை தனது வழிக்குக் கொண்டுவர முடியும் அல்லது முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேயை ராஜினாமாச் செய்ய வைக்க முடியும் என்று ஜனாதிபதி நம்புகிறார் போலும்.

அதுவும் சரிவராவிட்டால் இந்தக் குறுகிய காலத்துக்குள் — நாடாளுமன்றத்தில் தான் 'சாதித்தது' போன்று சில உறுப்பினர்களை விலைபேசி தனது பக்கம் இழுத்துக் கொள்ளலாம் என்ற நப்பாசையும் ஜனாதிபதிக்கு இருக்காமல் போகப் போவதில்லை.

மேல்மாகாணசபை மொத்தம் 104 உறுப்பினர்களைக் கொண்டது. ஐ.தே.க சார்பாக 39 பேரும், பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பாக 36 பேரும், ஜே.வி.பி சார்பாக 23 பேரும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக 4 பேரும், ஜனநாயக ஐக்கிய முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி சார்பாக தலா ஒவ்வொருவரும் அங்கம் வகிக்கிறார்கள்.

முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேக்கும் ஜே.வி.பி உறுப்பினர்களுக்கும் இடையில் நீண்ட நாட்களாக நிலவி வந்த கசப்புணர்வு, இதனை சாதகமாகப் பயன்படுத்தி முதலமைச்சருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகியவையே இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குக் காரணம்.

முதலமைச்சர் மீது பதினொரு குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து ஐ.தே.க நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

''முதலமைச்சர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை; ஆகவே முதலமைச்சர் பதவி விலகவேண்டும் — பதவி விலகத் தவறினால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்போம்'' என்று ஜே.வி.பி மிரட்டிவந்தது.

இது தொடர்பான வாக்கெடுப்பு 26 ஆம் திகதி நடைபெறவும் இருந்தது. ஜே.வி.பியினரை எப்படியும் தமது வழிக்குக் கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கையுடன் அவர்களை அழைத்துப்பேச்சு நடத்தினார் ஜனாதிபதி. ஜே.வி.பி இணங்கிப் போக மறுத்ததை அடுத்தே மாகாணசபை அமர்வுகளை ஒத்தி வைக்கும் யுக்தியை ஜனாதிபதி கையாண்டுள்ளார்.

ஆகவே, மாகாணசபையிலேயே தங்களுக்குள் அதிகாரப் பகிர்வு விடயத்தில் எழுந்துள்ள சர்ச்சையை சமரசமாகத் தீர்த்துக் கொள்ள முடியாது திணறுகிறது சுதந்திரக்கட்சி.

இத்தகைய நிலையில் இந்தக் கட்சி பொதுக் கட்டமைப்பு போன்ற விடயத்தில் சிறிதளவாவது நியாயமாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது.

# பொதுக்கட்டமைப்பு விடயம் இழுத்தடிக்கப்படுமா?

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையில் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கும் விடயத்தில் இழுபறிநிலை நீடிப்பதன் பின்னணியை சர்வதேச சமூகமே அறிந்துள்ளது.


சந்திரிகா

கடந்த இரு வாரங்களுள் இலங்கையில் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகளைப் பார்க்கும்போது பொதுக்கட்டமைப்பு விடயமென்பது எட்டாக்கனியாக ஆகிவிடும் என்ற அர்த்தத்தையே தருகிறது.

கடந்தவார முற்பகுதியில் கொழும்பு வந்த நோர்வே விசேட சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹேய்ம் மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா ஆகியோர் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் அழுத்தங்களை வழங்குவதற்கு எடுத்த முயற்சிகள் அர்த்தமில்லாமற் போயின.

பொதுக்கட்டமைப்பு விடயமென்பது மிகவும் முக்கியமானதும், அவசரமானதுமென்று அரசாங்கம் உண்மையாகவே கருதுகிறதா? இல்லை என்பதே இந்தக் கேள்விக்கான பதிலாகும். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. சந்திரிகா அரசாங்கமானது இந்த விடயத்தை மிகவும் சாதாரணமாகவே கையாளுகிறது. அரசியல் ரீதியாக அல்லாமல் வெறுமனே நிர்வாக ரீதியாக இந்த விடயத்தை நோக்குவதுதான் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

சந்திரிகா அரசாங்கம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைத்த காலகட்டத்தில் அமைதி முயற்சிகளை முன்னெடுத்த அடிப்படையில்தான் இந்த பொதுக்கட்டமைப்பு விடயத்தையும் கையாள்வதற்கான முயற்சி எடுக்கப்படுகிறது. அன்று அமைதி முயற்சிகள் நடைபெற்றபோது அரசாங்க பிரதிநிதிகளாக அரச நிர்வாக அதிகாரிகளை அனுப்பிய சந்திரிகா இன்றும் அதைத்தானே செய்ய முனைகிறார்.

எரிக் சொல்ஹேய்ம் ஒரு வாரகாலம் கொழும்பில் தங்கியிருந்தார். ஆனால், ஆக்கபூர்வமான பலனை அவர் அடையவில்லை என்பதுதான் உண்மை. கொழும்பில் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களை அவர் சந்தித்தாலும் கூட உறுதியான முடிவைத் தரக்கூடிய பிரதிநிதி ஒருவரை அவரால் சந்திக்க முடியாமற்போனது. கொழும்புப் பயணத்தின்போது ஜனாதிபதி சந்திரிகாவை சந்திப்பதற்கு அவர் கொண்டிருந்த கனவு நனவாகவில்லை. அமைதி முயற்சிகளைப் பொறுத்தவரை சந்திரிகாவின் அமைச்சரவையில் உள்ளவர்கள் அரசாங்க அதிகாரிகளுக்கு சமமானவர்கள். அவர்களால் ஒரு விடயத்தைப் பற்றி கதைக்கலாமே யொழிய உறுதியான பதிலைக் கூற முடியாது. பிரதமரின் நிலையும் கிட்டத்தட்ட அப்படித்தான்.

புலிகளுடனான பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி. கொழும்பில் கடுமையாக எதிர்த்து தென்னிலங்கை அரசியலை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த நிலையில் லண்டனில் ஜனாதிபதி சந்திரிகா அரசியலை மறந்துவிட்டு தனது குடும்பத்தினருடன் கூடியிருந்தார். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் வீரவசனங்களுக்கும், வாய்ப்பேச்சுக்கும் அப்பால் சந்திரிகாவினால் ஒன்றுமே செய்ய முடியாத காரணத்தினால்தான் கொழும்புக்கு வந்து எரிக்சொல்ஹெய்மை சந்திப்பதையும் தவிர்த்தார் அவர்.

உண்மையில் ஜனாதிபதி கொழும்பில் இருந்தால்கூட ஆகப்போவது ஒன்றுமில்லையென்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக இருக்கிறது. ஜனாதிபதி இல்லாமல் இருந்தமை பிரச்சினைகள் பலவற்றை தவிர்த்திருக்கின்றது என்பதும் பலரின் அபிப்பிராயமாகும். உண்மையில் எரிக் சொல்ஹேய்ம் மற்றும் கிறிஸ்ரினா ரொக்கா ஆகியோர் கொழும்பில் இருந்த சமயம் ஜனாதிபதியும் இருந்திருப்பாரானால் இலங்கை அரசியலுக்குள் சிக்குண்டு அவர்கள் மேலும் குழம்பிப் போயிருக்கக்கூடும்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதியின் கருத்துக்கு நேரெதிரான கருத்துக்களை ஜே.வி.பி கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும். எனவே, நிலைமையை அறிந்துதான் ஜனாதிபதி வரவில்லையா? அல்லது இதன் பின்னணியில் வேறு காரணங்கள் இருக்கின்றனவா என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம். இலங்கை அரசியலில் உள்ள இவ்வாறான தந்திரோபாய போக்கு ராஜதந்திர ரீதியில் இலங்கைக்கு உருப்படியான நன்மையைத் தரப்போவதில்லை.

### அர்த்தமில்லாப் பயணம்

அடுத்ததாக, பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அழுத்தத்தை வழங்குவதாக கூறி இறுமாப்புடன் இலங்கை வந்த கிறிஸ்ரினா ரொக்கா, இந்த முயற்சியில் தோல்வி கண்டுள்ளார். திரும்பிய பக்கமெல்லாம் அவர் இது விடயத்தில் எதிர்ப்பை [illegible] கண்டார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், [illegible] ஜே.வி.பி ஆகிய கட்சிகளை ரொக்கா சந்தித்தபோது பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லாமற் போய்விட்டது.

கொழும்புக்கு வருவதற்கு முன்னரே ரொக்கா கொழும்பிலுள்ள அ[illegible] தூதுவருடன் தொலைபேசியில் [illegible] இலங்கையின் அரசியல் நிலைவரங்களை நன்கு அறிந்திருந்தார். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி எதிர்ப்புத் தெரிவிப்பதை அறிந்த ரொக்கா தாம் ஜே.வி.பியினருடன் இதுபற்றிக் கதை[illegible] தால் ஜே.வி.பி. இணங்கிப்போகும் [illegible] என்று எண்ணினார். ஆனால், அமெரிக்க [illegible] தூதரகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தை[illegible] யின் ஆரம்பத்திலேயே ஜே.வி.பி முன்வை[illegible] ரொன்று ரொக்காவை வாயமூடி[illegible] யாக்கிவிட்டது. ரொக்காவிடம் [illegible] நிலைப்பாட்டை தெட்டத்தெளிவாக [illegible] கிய ஜே.வி.பி உலகப் பொலிஸ்காரன் [illegible] ரில் வாலாட்ட முடியாதென்று கூறி[illegible] தமது விஜயத்தின் பலன் கிடை[illegible] விரக்தியை ரொக்காவின் சில உரை[illegible] காணமுடிந்தது. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசாங்கம் ஒரு குரலில் பேச[illegible] மென ரொக்கா கூறியதும் இதன் அடி[illegible] யில்தான்.



விடுதலைப்புலிகளுடனான பொதுக்கட்டமைப்பு விடயத்தைப் பொறுத்த[illegible] சந்திரிகா அவசரப்பட்டுவிட்டார் [illegible] கூறத் தோன்றுகிறது. ஏனெனில், இதனை ஆளுங்கட்சிக்குள் ஒரு குழு எதிர்ப்பதுடன் சிங்கள மேலாண்மைக் கட்சிகளும், முஸ்லிம் அரசியற் பிரமுகர்களும் பகிரங்கமாகவே எதிர்க்கத் துணிந்துவிட்டனர். சந்திரிகா சற்றுப் பொறுமையாக இருந்திருந்தால் பொதுக்கட்டமைப்பு என்ற விடயத்தைக் கூறி மாட்டியிருக்கத் தேவையில்லை

**சிவன்**

இப்போதிருக்கும் அரசியல் சூழ்நிலையில் இந்தவிடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படாது. இழுபறி நிலைதான் தொடரும். ரொக்கா கூறியதுபோல் ''அரசு ஒரு குரலில் பேசவேண்டும்.''

# நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் அவலம் நீடிப்பு

ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு, மீள்கட்டுமானப்பணிகள் தொடர்பாக அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்று அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட்டாக குற்றம் சாட்டியுள்ளன.

அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து, உறவுகளை பறிகொடுத்து நலன்புரி நிலையங்களில் தங்கி இருந்தபடி சொல்லொன்னாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவர்கள், தமது இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கு அரசு உதவிபுரியும் என்று நம்பி இருந்தது தற்போது பலத்த ஏமாற்றத்துக்கு உள்ளாகி இருக்கின்றனர். வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கே அரசின் நிவாரண உதவிகள் இதுவரை சென்றடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் காரணமாக உயிரிழந்தவர்களது குடும்பங்களுக்கு கிடைக்கவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையோ, இருப்பிடங்களை இழந்தவர்களுக்கான மறு வீடுகளை அமைப்பதற்கான தொகையோ பெருமளவு பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று மேலும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

அரசின் சுகாதார அமைச்சினால் நலன்புரிநிலையங்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை சுகாதார வசதிகள்கூட வடக்கு கிழக்கு நலன்புரிநிலையங்களுக்கு வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் நலன்புரிநிலையங்களில் தங்கியிருப்பவர்கள் நுளம்புக்கடி, அசுத்த நீர் என்பவற்றால் பல்வேறுபட்ட தொற்று நோய்களுக்கு இலக்காகி அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் தொடர்பில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்படவேண்டிய பொதுக்கட்டமைப்பும் ஏற்படுவது போல்தெரியவில்லை. சிங்கள தேசிய இனவாதிகளாக ஜே.வி.பி., ஹெல உறுமய போன்றவை இதைக்கடுமையாக எதிர்ப்பதே இதற்கு காரணமாக உள்ளது.

இயற்கையின் கொடூர அழிவில் சிக்கி சின்னாபின்னமாகியிருக்கும் அப்பாவி மக்கள் மத்தியிலும் இனவாதக் கூச்சலிட்டு இலாபம் தேடமுயலும் இவர்களின் அடாவடித்தனம் நீண்டு கொண்டே செல்கிறது.

அரசு உறுதியான முடிவு எடுத்து அவசர தேவை[illegible]க உள்ள மனிதாபிமான பணிகளை முன்னெடுத்து வடக்கு கிழக்கு மக்களின் அவலத்தை தீர்ப்பதற்கு முயல்வதாகத் தெரியவில்லை.




## பேர்த்துக்குள் போட்ட ஆட்டமும் அப்பாவி பெண்ணின் பரிதாப முடிவும்

ரயில் ஒரு குலுக்கலுடன் பொல்காவலை ரயில் நிலையத்தில் வந்து நின்றது. நண்பர் சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்து பிளாஸ்க்கில் இருந்த கோப்பியை ஊற்றிக் கொண்டே பிள்ளையை எழுப்பிவிட்டார். இருவரும் கோப்பியைக் குடித்ததும் பழைய கலகலப்பான நிலைக்கு வந்துவிட்டனர்.

''அடேய் பிள்ளை! ஏதோ வெளிநாடு செல்லப் போவதாகக் கூறினாயே! எப்போது பயணம்?'' என்று மீண்டும் கதைகேட்கத் தயாரானார் நண்பர்.

''அதுவா மச்சான்; மகன் பேப்பர் எல்லாம் அனுப்பிவிட்டான். 'எம்பஸி'யில் கொடுத்துப்போட்டன். இன்டர்வியூ எல்லாம் சக்சஸ். இன்னும் இரண்டொரு வாரங்களில் விசா கிடைத்துவிடும் போல் கிடக்கு''

''ரொம்பச் சந்தோசம் மச்சான். நீண்ட நாட்களுக்குப் பிறகு பிள்ளைகளை பார்க்கப் போகின்றாய். நாங்களும் எல்லோரையும் கேட்டதாகச் சொல்லு.''

''என்னடா மச்சான்; நான் என்னமோ இன்றைக்கே கனடாவுக்குப் போறமாதிரி விடைகொடுக்கப் பார்க்கின்றாய்!''

''இல்லையடா பிள்ளை! நீ இப்ப பிஸியான ஆளாகிவிட்டாய். இப்ப பார் எத்தனை வருசத்துக்கு அப்புறம் இன்றைக்கு நாங்கள் சந்திச்சிருக்கிறோம்?''

''நீ மட்டும் என்னடா! பெரிய ஜேர்னலிஸ்ட். எப்பவும் அரசியல் வாதிகளோடயே மோதிக் கொண்டிருக்கிறாய். எப்ப டெலிபோன் செய்தாலும் உன்ர லைன் ஒரே பிஸி. பேசவும் முடிவதில்லை''

''பிள்ளை இந்தா இது என்னுடைய செல்போன் நம்பர். இதுக்குப் பேசு'' என்று செல்போன் நம்பரைக் கொடுத்த நண்பர் ''அதுசரியடாபிள்ளை; ஏதோ இன்னும் ஒரு சங்கதி இருக்கு, சுவையாக இருக்கும் என்று சொன்னாய். அதை இப்ப சொல்லேன்'' என்றார் நண்பர்.

''எனக்குத் தெரியும் பேப்பர் காரன் அல்லவா நீ; விடமாட்டாயே! உனக்கு 'மெட்டர்' தேவைதானே! சொல்லுறன் கேளு'' என கதை சொல்ல ஆரம்பித்தார் பிள்ளை.

''மச்சான் உனக்கு இப்ப அந்த உரும்பராய்ச் சம்பவத்தைச் சொல்றன்.''

''அது என்ன மச்சான் உருப்பராய்ச் சம்பவம்?''

''ஆமாம் ஆமாம் உனக்கு தெரியாது தான். நீ தான் கொழும்பு ஆள் ஆகிவிட்டாயே!'' உனக்கு நினைவு இருக்கா எங்கட எக்கவுண்டன் மாமா.''

''ஆமாம் ஆமாம்''

''அவர் அடிக்கடி சொல்லுவார்; பாவம் இந்தப் பெண்; நல்லாய்ப்படிச்சவ. வாத்தி வேலை செய்து கொண்டிருந்தா. ஆனால் கடைசியில அவ தற்கொலை செய்து கொண்டா என்று''

''என்னடா பிள்ளை வாத்தி வேலை செய்யும் ஒரு படித்த பெண் ஏன் இப்படி தற்கொலை செய்து கொண்டாவாம்?''

''மச்சான் வாத்தி என்றால் அவரும் மனிதர் தானே! வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டால் அந்த நொடியில் தங்கட வாழ்க்கையை முடித்துக் கொள்ளுவினம் தானே!''

''என்ன மச்சான் பாவப்பட்ட கதையா இருக்கு?''

''உனக்குத் தெரியுமே அந்தச் சங்கதி? அந்த உரும்பிராய் வாத்தியை கலியாணம் முடிச்சி இருந்தவர் இந்த ஆனந்தமானவர் தான். அங்கேயும் இங்கேயும் அலையா அலைஞ்சி அரசியல் வாதியானவர் இந்த ஆனந்தமானவர். இவருக்கும் இரண்டு மூன்று தம்பிமார். தம்பிமார் மட்டும் என்ன அண்ணன் எப்படியோ தம்பிமாரும் அப்படித்தானாம்.''

''அப்படி என்டால் எல்லாரும் மன்மத ராசாக்கள்தான் என்று சொல்லும்''

''சரியாச் சொன்னாய் மச்சான். பொண்ணு பிடிக்கிறதில அண்ணன்தம்பிக்குள்ளேயே போட்டியாம்.''

''என்னடா இது புதுக்கதையா இருக்கு?''

''இந்த வாத்தியாரம்மாவும், தான் ஒரு அரசியல் வாதியை கட்டிக்கொண்டதில கொஞ்சம் சந்தோஷமாகத்தான் இருந்தாவாம். ஆனால் காலம் போகப் போக இந்த ஆனந்தமானவரின் கூத்துக்கள் மெல்ல மெல்ல வாத்தியாரம்மாவுக்கும் தெரியவந்து விட்டனவாம். சாடை மாடையாகத் தான் கேள்விப்பட்ட விடயங்களை ஆனந்தமானவரிடம் கேட்டால் அடி உதைதானாம்.

நாளுக்கு நாள் ஆனந்தமானவரின் கிறுக்குத் தனமான கூத்துக்கள் வெளிக் கிளம்பவே வாத்தியாரம்மாவுக்கு வெளியில் செல்ல முடியாத நிலை.

''பாவம் என்ன மச்சான் செய்யும் அந்த வாத்தி! மானம் உள்ளவ, கௌரவமான குடும்பத்தில பிறந்து வளர்ந்தவ, பெற்றோரும் சகோதரங்களும் கிளியை வளர்த்து பூனைக் கிட்ட கொடுத்தது போல் இந்த ஆனந்தமானவரிடம் ஒப்படைத்துவிட்டனர்.''

''மரியாதைக்கும் கௌரவத்துக்கும் பயந்த அந்த வாத்தியாரம்மா சித்திரவதை தாங்காமல் தற்கொலை பண்ணிக் கொண்டா. ஆனா இந்த மானம் கெட்ட சாதிகள் இப்பவும் கூத்தடிக்குதுகள்'' என்று நிறுத்தினார் பிள்ளை.

''மச்சான் என்னதான் இருந்தாலும் இதுகளை திருத்தவே முடியாது. இதுகளை திருத்துவது நாய்வாலை நிமிர்த்தும் கதை தான். நாய்வாலும் நிமிராது, இந்த இரண்டு கால் நாய்களும் திருந்தாது'' என சபித்தார் நண்பர்.

''அடே மச்சான்! உனக்கு இன்னுமொரு சங்கதி தெரியுமோ! நம்ப தாடித்தம்பி இப்ப வீணை வாசித்துக்கொண்டிருக்கிறார் அல்லோ! அந்த நாடகத்துக்கும் இப்ப திரைக்கதை வசனம் எழுதித் தாரேன் என்று தானாகவே கேட்டுத் திரியிறாராம் ஆனந்தமானவர். அது மட்டும் இல்ல மச்சான், இவர் தான் முன்பு தாடித்தம்பிக்கு நேர்விரோதமாகப் பிரசாரம் செய்தவர். வீர சிவாஜியின் கால் உடைந்தபோது இவருடைய கால் உடைந்ததுபோல் குதித்தார். இப்ப வன்னித் தம்பியை வசைபாட ஆரம்பித்தவுடன் வசதி வாய்ப்புகளும் அதிகமாம். இந்த ஆனந்தமானவர் இப்ப படைபலம் சூழ ஐம்பருடன் குட்டியும் புட்டியுமாக காலம் கழிக்கின்றாராம். அதுதான் லேட்டஸ்ட்'' என்று கூறிமுடித்தார் நண்பர்.

ரயிலும் கொழும்பு கோட்டையை அடைந்தது.

''மச்சான் பிள்ளை, நான் அவசரமாக கந்தோருக்குப் போகிறேன். கண்டிப்பாக மாலையில் வீட்டுக்கு வா'' என்று தனது விசிட்டிங் கார்டை கொடுத்துவிட்டு பறந்தார் நண்பர்.

பாவம் என்ன செய்வது இந்த ஆனந்தமானவர் ரயில் பேர்த்துக்குள் போட்ட ஆட்டம் ஓர் அப்பாவி வாத்தியம்மாவின் உயிரையே பறித்துவிட்டதாம். இது உரும்பிராயின் பழைய கதை.


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250300 Col. Cms) | | |


# NATIONAL CHILD PROTECTION AUTHORITY


NO. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka.
Telephone: 94-2778911-14, Fax: 94-2778915, E.mail: ncpa@childprotection.gov.lk
Website: http://www.childprotection.gov.lk


unicef

# தத்துவங்களும் பணிகளும்:

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிகளை பின்வருமாறு ஒரு பொழிப்பாக முன்வைக்கலாம்.


தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா

* சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல், துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுவர்களைப் பாதுகாத்தல், அத்தகையவர்களுக்குச் சிகிச்சையளித்தல் முதலிய விடயங்கள் தொடர்பான தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைப்பதற்காக அரசாங்கத்துக்கு மதியுரை வழங்குதல்:
* சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து விடுபட்டிருப்பதற்கான உரிமை குறித்தும், சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் அறிவூட்டுதல்.
* தொடர்புபட்ட அமைச்சுக்கள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றுடன் உசாவுகை நடவடிக்கைகளையும், கூட்டிணைப்பையும் ஏற்படுத்திக்கொள்ளலும், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல், அதன் மூலம் பாதிப்புக்கு உள்ளானவர்களைப் பாதுகாத்தலும் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
* தேசியக் கொள்கையை வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கான சட்டம் சார்ந்த, நிருவாகம் சார்ந்த பிற மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விதந்துரைத்தல்.
* சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழிப்பதற்கான தேசியக் கொள்கையைப் பயனுறுதிவாய்ந்த விதத்தில் செயற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டம் சார்ந்த, நிருவாகம் சார்ந்த பிற ஏற்பாடுகளை விதந்துரைத்தல்.
* சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய சட்ட வினைப்படுத்துவதையும், சகல விதமான புலனாய்வு நடவடிக்கைகளினதும், குற்றவியல் வழக்குவிசாரணை நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.
* குற்றப் புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு விசாரணை நடவடிக்கைகளின்போது சிறுவர்களின் பாதுகாப்புக்கும், ஆதரிப்புக்கும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* ஆயுதப் போராட்டங்களால் பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் பாதுகாப்பு, புனர்வாழ்வு, மீள அவர்களை சமூகத்துடன் இணைத்தல் ஆகியவற்றுடன் தொடர்பான வேலைத்திட்டங்களை விதந்துரைத்தல்.
* சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்களிடமிருந்து கையேற்றல்.
* சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராகக் கூட்டிணைந்துள்ள ஒரு கூட்டுக்காக, உள்நாட்டு அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு மதியுரை வழங்கலும், உதவுதலும்.
* சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான ஆய்வுகளைக் கூட்டிணைப்புச் செய்தலும், முன்னேற்றுதலும், முன்னெடுத்தலும்.
* சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகளையும், கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்தலும், அனுசரணை வழங்குதலும்.
* சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்காகச் சுற்றுலாக் கைத்தொழிலுடன் கூட்டிணைப்பொன்றை ஏற்படுத்திக்கொள்ளல்.
* சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான தேசியத் தரவுத்தளமொன்றை உருவாக்குதலும், முன்னெடுத்துச் செல்லலும்.
* சிறுவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான அமைப்புக்களைக் கண்காணித்தல்.
* சிறுவர் துஷ்பிரயோகத்தை வெளிக்கொணர்வதுடன், தடுத்தல் தொடர்பில் வேறு அரசுகள், சர்வதேச அமைப்புக்களுடன் நல்லுறவு, கூட்டிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளலும், பரிமாறிக் கொள்ளலும்.

### பரிசுக்கான இவ்வாரக் கேள்வி

1. சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களை எவ்வாறு பாதுகாத்தல்?

* அனுப்பப்படும் சரியான விடைகளில் பத்து விடைகள் தெரிவுசெய்யப்பட்டு சிறுவர்பாதுகாப்பு அதிகார சபையினால் பரிசில்கள் வழங்கப்படும்.
* விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஊடகப்பிரிவு
தேசிய சிறுவர் பாதுகாப்பு
அதிகாரசபை
330, தலவத்துகொட வீதி,
மாதிவெல, பிடகோட்டே.

மேற்போந்த பணிகளை முக்கிய 7 தலைப்புக்களின் கீழ் ஒரு பொழிப்பாக முன்வைக்கலாம்.

* அறிவுறுத்தல்.
* தொடர்புபட்ட தொழில் சார்ந்தவர்களைப் பயிற்றுவித்து ஆற்றல்களை விருத்திசெய்தல்.
* பாலியல் துன்புறுத்தலுக்கு இலக்கானவர்களின் பாதுகாப்பும், புனர்வாழ்வும்.
* சட்டச் சீர்திருத்தங்களை விதந்துரைத்தலும், சட்ட வினைப்படுத்துகையும்.
* ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
* கூட்டிணைப்பை மேற்கொள்ளல்.
* உட்கட்டமைப்பு வசதிகளை விருத்திசெய்தல்.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,
தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா
குறிப்பு : கு முதுமாலி மத்துமகே

# அடிதடி மூலமாவது ஆட்சியை தக்கவைக்க ஜெயலலிதா கங்கணம்!

நேர்மையான தேர்தல் நடந்தால், தான் ஆட்சியில் நீடிக்க முடியாது என்று தெரிந்து கொண்ட தமிழக முதல்வர் ஜெயலலிதா இப்போது அடிதடியைக் கொண்டு தேர்தலை குழப்பி ஆட்சியில் தொடரும் முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

சமீபத்தில் சென்னை மாநகராட்சியின் இரண்டு வட்டாரங்களுக்கு நடந்த இடைத்தேர்தலில் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு வாக்குமோசடி நடத்தி ஒருவழியாக அ.தி.மு.க. வெற்றி பெற்றிருப்பது இந்த எண்ணத்தையே காட்டுகிறது.

சென்னை தி.மு.கவின் கோட்டை; அதில் அ.தி.மு.க. வன்முறையைப் பயன்படுத்தி வெற்றியைத் தனதாக்கி இருக்கிறது.

இதே நடைமுறையை அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தலிலும் பின்பற்ற ஜெயலலிதா கங்கணம் கட்டியிருப்பதாகத் தெரிகிறது. இது தொடர்பான உத்தரவுகள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ''என்ன செய்தாவது வெற்றி கிடைக்கவேண்டும், இல்லாவிடில் உங்கள் தலை உருளும்'' என அமைச்சர்களை அவர் மிரட்டி வைத்திருக்கிறார்.

அடுத்தமாதம் காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி ஆகிய சட்டசபைகளுக்கும் இடைத்தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதிலும் தி.மு.க. கூட்டணி சார்பில் தி.மு.கவும் எதிர்த்தரப்பில் அ.தி.மு.கவும் நேருக்குநேர் மோதவுள்ளன. வன்முறை மூலம் வெற்றிபெற ஜெயலலிதா முடிவு கட்டிவிட்டார்.

பெண் தலைமையில் இப்படி அட்டகாசமா என்று திகைத்து கதிகலங்கிப்போய் நிற்கிறது தி.மு.க.



தமிழக் அரசியல் வரலாற்றிலேயே இல்லாதவகையில் இரத்தக்களரி மூலம் தேர்தலை தனக்கு சாதகமாகும் போக்கு ஜனநாயகத்தை எள்ளிநகையாடும் வகையில் அமைந்துள்ளது.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை அடுத்த சட்டசபைத் தேர்தலில் தோற்பது அவரது அரசியல் வாழ்வையே முடித்துவிடும். சென்றமுறை அதாவது 1996 இலும் அவர் தோற்றபோது அவர் மீதான வழக்குகள் அவரை முடிவுகட்டிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தி.மு.க. அசமந்தமாக இருந்ததாலும், மத்தியில் ஆண்ட தி.மு.கவின் கூட்டாளியான பாரதீய ஜனதாவின் சில தலைவர்கள் ஜெயலலிதாவுக்கு மறைமுகமாக ஆதரவு தந்ததாலும் வழக்குகள் முழு வேகத்தில் நடக்கவில்லை. மேலும் கர்நாடகாவிக்கு வழக்குகளை மாற்றியதால் தமிழில் இருந்து கோப்புகளை மொழிபெயர்க்க வேறு 2 ஆண்டுகள் சென்று விட்டன. இவற்றால் அதிஷ்டவசமாக ஜெயலலிதா தப்பிப்பிழைத்தார். ஆனால், இந்த முறை தோற்றால் தப்புவது மிகக்கஷ்டம். மத்தியில் ஆளும் காங்கிரஸின் தலைவி சோனியாவை வசைபாடியதால் ஜெயலலிதாமீது கடுங்கோபமாக உள்ளார் சோனியா.

இது தவிர கர்நாடகா நீதிமன்றில் ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகள் தொடங்கிவிட்டன. இரு அமர்வுகள் முடிந்தும் விட்டன. ஜெயலலிதா அவற்றுக்கு ஆஜராகாதது குறித்து நீதிபதி கண்டனமும் வெளியிட்டுள்ளார். இந்த நிலையில் அடுத்த ஆண்டு மே மாதம் சட்டசபைத் தேர்தலில் தோற்றால் ஜெயலலிதாவின் கதி அதோகதிதான்.

இந்தக் காரணங்களால் குத்துவெட்டு, கொலைகள் செய்தாவது தேர்தலில் வென்றே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு. தி.மு.க. தலைமையிலான கூட்டணி வேறு உடையாமல் உறுதியாக உள்ளது. பாண்டிச்சேரிக்கு பா.ம.க.வும் காங்கிரஸும் போட்டியிடுவதால் ஒருவேளை கூட்டணி உடையலாம். மற்றப்படி ம.தி.மு.க. கட்டாயம் தி.மு.க. அணியிலேயே இருக்கக்கூடும். ஆக தி.மு.க. கூட்டணிக்கே வெற்றி வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

வெற்றி வாய்ப்பை தனது பக்கம் திருப்புவது ஜெயலலிதாவுக்கு மிகச் சிரமமே. தலைக்கு மேல் வெள்ளம் போன பின்பு சாண் என்ன முழம் என்ன என்பதுபோல் தோல்வி தோல்விதானே! எனவே அடிதடியை ஒருகால் பிரயோகித்துத்தான் பார்ப்போமே என்ற எண்ணம் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இடைத் தேர்தல் என்பது குறிப்பிட்ட ஓரிரு பிரதேசங்களில் மட்டுமே நடப்பது. சட்டசபைத் தேர்தலோ மாநில முழுவதும் ஒரே நேரத்தில் நடப்பது. இடைத் தேர்தலில் ஆட்பலம், ஆயுதபலம், பொலிஸ் பலம் பிரயோகிப்பது போல் சட்டசபைத் தேர்தலிலும் பாவித்து வெல்லமுடியுமா என்பது முக்கியமான கேள்வி. குறிப்பாக கடந்த ஆண்டு லோக்சபாத் தேர்தலுக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பு நடந்த சட்டசபை இடைத்தேர்தல்கள் சகலவற்றிலும் அ.தி.மு.கவே வென்று வந்தது.

-எஸ். சுரேந்திரஜித்-

அதைவைத்து லோக்சபா தேர்தலிலும் அ.தி.மு.கவே வெல்லலாம் என பலர் தப்புக்கணக்குப் போட்டனர். ஆனால், சகல 40 தொகுதிகளிலுமே அ.தி.மு.க மண் கவ்வியது.

அவ்வாறுதான் இப்போது இடைத்தேர்தல்களில் அட்டகாசம் போட்டு அ.தி.மு.க. வென்றாலும் மாநிலமுழுவதும் நடக்கும் சட்டசபைத் தேர்தலிலும் அக்கட்சி வெல்லும் என நினைத்தால் அது வெறும் பகற்கனவாகவே முடியும்.

# தொழிலாளர்களின் தியாகத்தாலேயே உலகம் இயங்குகிறது

தொழிலாளர்கள் கடுமையாக உழைத்தால் மட்டும் போதாது, ஒற்றுமையாக இயங்கவும் வேண்டும். அதனால்தான் உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள் என்ற தாரக மந்திரம் உழைப்பாளிகளுக்கு பல வெற்றிகளைத் தேடித் தந்திருக்கிறது. மே தினத்தின் சிறப்பே இதுதான்.

உழைக்கும் பாட்டாளிகளின் தியாகத்தால் தான் உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தவகையில் தொழிலாளர் வர்க்கத்தினர் ஆற்றும் பங்கு அளவிடற்கரியது.

உலகம் இயங்குவதற்கு மாபெரும் உந்து சக்தியாக இருப்பவர்கள் தொழிலாளர்கள். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த அயராது பாடுபடும் தொழிலாளர் வர்க்கமே உலகை இயக்குகின்றது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

தொழிலாளர் ஆற்றும் பங்கு ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு மிகவும் அத்தியாவசியமானது. தொழிலாளர்களின் அயராத உழைப்பு மாபெரும் வெற்றிகளைத் தேடித்தரும் என்பதை உலக நாடுகள் யாவும் உணர்ந்துள்ளன. அதனால் தான் மேதின விழா உலகெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தொழிலாளர்களின் உரிமைக்கான குரல் 19 ஆம் நூற்றாண்டில் ஒலிக்கத் தொடங்கியது. உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுக்குரல் எழுப்பி மே மாதம் முதலாம் திகதியை மேதினமாகக் கொண்டாடுவதற்கு வழிவகுத்தது அமெரிக்கத் தொழிற்சங்கப் பின்னணியே ஆகும். அமெரிக்காவில் 1869 முதல் 1870 வரையான காலத்தில் தொடர்ந்து நிகழ்ந்த தொழிலாளர் குமுறல்களின் விளைவு 1878 இற்குப் பின் பேரியக்கமாக வெடித்தது என்பது தொழிலாளர் உரிமை போராட்டத்தின் முக்கிய பதிவு.

தொழிலாளர்களின் உரிமைக்கான குரல் 1800 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலேயே ஒலிக்கத் தொடங்கிவிட்டது. அந்த வகையின் அதன்வரலாறு, உலக தொழிற்சங்கங்களின் தோற்றங்கள் பற்றிய தகவல்கள் மிகவும் முக்கியமானவை.

சூரியன் உதிக்கும் முன்னரே வேலையை ஆரம்பித்து நள்ளிரவுவரை வேலை செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்கள் 18, 19 ஆம் நூற்றாண்டின் தொழிலாளர்கள். அவர்களின் பரிதாப நிலையைக் கண்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று குரல் கொடுத்தார்கள் அக்காலத்திலும் சில நல்ல இதயம் கொண்டவர்கள். அவர்களில் சில முதலாளிகளும் அடங்கியிருந்தார்கள் என்பதுதான் சிறப்புவாய்ந்தது.

ஸ்கொட்லாந்து தேசத்தின் ஆலை முதலாளியான றோபர்ட் ஒவன் என்பவரே உலகின் முதன்முறையாக தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் கொடுத்த முதலாளி என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் ஒரு சிறிய கூட்டத்தைக் கூட்டி இதனை வெறும் வார்த்தை ஜாலமாகக் கூறவில்லை. 1818 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்து வல்லரசுகளின் மாநாட்டில் அவர் தொழிலாளர் நலனுக்காகக் குரல் கொடுத்தார். சர்வதேச தொழிலாளர் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால், அவரது குரல் செவிடன் காதில் ஊதிய சங்குபோல வீணாகிவிட்டது.

இதன்பின் இருபது வருடங்களின் பின்னர் இதே கருத்தை ஜேரோம் அடொல்ப் பிளாக்கி எனும் பெருமனது படைத்த பிரபு ஒருவர் முழங்கினார், அதுவும் பலனளிக்கவில்லை.

அடுத்துவந்த ஒன்பது வருடங்களின் போது எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. இந்நிலையில் 1847 ஆம் ஆண்டு டேனியால் கிராண்ட் என்னும் பிரான்ஸ் தேசத்து ஆலைகளின் முதலாளி ஒருவர் தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்தார்.

தொழிலாளர் நிலவுரிமைச் சட்டத்தினை பிரகடனப்படுத்தும்படி பிரெஞ்சு அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார். காரியம் நடக்கவில்லை. இந்நிலையில் அவர் உலக நாடுகளுக்கு விண்ணப்பம் செய்தார். இறுதியில் பிரான்ஸ், இத்தாலி, சுவிஸ்லாந்து ஆகிய நாடுகள் தொழில் உடன்படிக்கைகள் செய்து கொண்டன.

முதலாளிகளில் சிலர் தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்ததால் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபட்ட போராளிகளுக்கு அது ஒரு உந்து சக்தியாக இருந்தது. 1847 ஆம் ஆண்டு 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்றும் கோஷம் வானுயர எழுந்தது. உழைப்பாளிக



ளின் உற்ற தோழர்களான கார்ல் மார்க்ஸும், பிரட்ரிக் எங்கல்ஸும் இந்த உரிமை கீதத்துக்கு அடிநாதங்களாக விளங்கினர்.

1866 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தொழிலாளர் காங்கிரஸ் மாநாடு, உடனடியாக தொழிலாளர் நலச்சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் என வாலியுறுத்தியது. இதன் விளைவாக 'பிரான்ஸ் சர்வதேச குழு' உதயமானது. அதுவே சர்வதேச தொழிலாளர் நலவுரிமை பாதுகாப்பு சட்ட அமைப்பினை உருவாக்கியது.

தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்ட பின்பு நாட்டுக்கு நாடு தொழிலாளர்களின் ஒருமைப்பாடு வளர்ந்து அடக்கு முறைகளில் இருந்து விடுதலை பெற தொழிற்சங்க இயக்கங்கள் பாடுபட்டன.

உலகத் தொழிற்சங்க வரலாற்றில் குறிப்பிடக் கூடிய முக்கிய நிகழ்வுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

முதன்முதலாக 1802 ஆம் ஆண்டில்தான் தொழிற்சாலைச் சட்டங்கள் இங்கிலாந்தில் கொண்டுவரப்பட்டன. எனினும் 31 ஆண்டுகளின் பின்னரே 1833 இல் பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் அமுல்படுத்தப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் இருந்துதான் இன்றுள்ள முறையில் தொழிற் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

அமெரிக்கத் தொழிலாளர்களின் தந்தை சாமுவேல் சேம்வர்ஸ் 1876 இல் அங்கு முதலாவது தொழிற்சங்கத்தை நிறுவினார்.

ரஷ்யாவில் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தே தொழிலாளர் கிளர்ச்சிகள் இடம் பெற்றுவந்தன, எனினும் 1905 ஆம் ஆண்டில் தான் விவசாயிகள் சங்கம் ஏற்பட்டது. 13 ஆயிரம் வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. அதையடுத்து 1906 ஆம் ஆண்டில் தொழிற்சங்கங்களை ரஷ்யா ஆதரித்தது, அங்கீகரித்தது.

அல்ஜீரியாவில் 1876 ஆம் ஆண்டிலேயே தொழிற்சங்கம் நிறுவப்பட்டது. சில நாடுகளில் 1909 ஆம் ஆண்டில் தொழிற்சங்கம் நிறுவப்பட்டது.

இவ்வாறு தொழிலாளர்களின் உரிமை போராட்டத்தினை நினைவுகூரவும், தொழிலாளர்களின் ஒற்றுமையை வெளிக்காட்டவுமே மே தினம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. இம் மேதினம் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, உரிமைக்காகப் போராடும் அனைவருக்குமே பொதுவானது. அதனால்தான் தமிழர்களாகிய நாமும் தொழிலாளர் உரிமையுடன் தேசத்தின் விடுதலை என்றகோஷத்துடனும் எழுச்சியுடனும் ஒற்றுமையுடனும் அதனை இன்று சிறப்பாகக் கொண்டாடுகின்றோம்.

-பின்கலின்-

# விடுதலை



தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை - பக்கத்தை - அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை - வெளிப்படுத்துகிறது 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.

3

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

# மனிதனைத் தேடும் மனிதன்

முதலாளித்துவம் என்ற பொருள் உற்பத்தி நாடகத்தில், முதலாளி என்றும், தொழிலாளி என்றும், விற்பவன் என்றும், வாங்குபவன் என்றும் எண்ணில்லாப் பாத்திரங்களைத் தாங்கி மனிதர்கள் மேடையேறுகிறார்கள். அந்தந்தப் பாத்திரங்களை அவனவன் தேர்ந்து கொள்வதில்லை. அந்தப் பாத்திரங்களில் அவனவன் அமர்த்தப்படுகிறான். முதலாளித்துவம் ஒரு ராட்சத இயந்திரமாக, மனிதனுக்குப் புறம்பான ஓர் அசுர சக்தியாக, மனிதனை அடிமை கொள்கிறது. தனி மனிதத்தைச் சிதைத்துவிடுகிறது. மனித முகத்தை அழித்துவிடுகிறது.

உழைக்கும் மனிதன், முதலாளியச் சந்தையில் ஒரு விலைப்பொருள் ஆகிறான். தனது வயிற்றை நிரப்ப தனது உழைப்பை விற்கிறான், தன்னை விற்கிறான். முதலாளிய ஆதிக்க சக்தி, தொழிலாளியின் ஆக்க சக்தியை விழுங்கிக் கொள்கிறது. அவனது உழைப்பு சக்தியைப் பிழிந்து எடுக்கிறது. தொழிலாளியின் உதிரத்திலிருந்து முதலாளி உபரி லாபத்தை எடுத்துக் கொள்கிறான்.

உழைக்கும் மனிதன் வியர்வை சிந்தி உழைக்கிறான். அவனது உழைப்புசக்தி பொருள்வடிவம் எடுக்கிறது. மனிதனின் சாரம் பொருள்களில் பொதிந்து பொருள்மயமாகிறது. உழைப்பில் மனிதன் பொருளாகமாறும் விந்தையொன்று நிகழ்கிறது. அந்தப் பொருள்களிலிருந்து பண்ட உலகம் தோன்றுகிறது. உழைப்பு சக்தியால் உருவாக்கம் பெறும் இந்தப் பண்ட உலகம் உழைப்பவனுக்கே அந்நியமானதாக, ஒரு சுதந்திரமான பொருளுலகமாகத் தோற்றப்பாடு கொள்கிறது. இந்த முதலாளியப் பொருளுலகில் உழைக்கும் மனிதன் தனது ஆக்கத்தின் அடையாளத்தை இனம் காண முடியாது. அவனது ஆக்கம், அவனது படைப்பு, அவனுக்கு அந்நியமாகி, அவனிடமிருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, லாபமாகி, இன்னொருவனின் செல்வமாகி, கூடுவிட்டுக் கூடு பாய்கிறது. முதலாளியப் பொருளுலகில் உழைக்கும் மனிதன் தன்னை இழந்துவிடுகிறான். தனது மனிதத்தை இழந்து விடுகிறான்.

முதலாளியப் பொருள் உற்பத்தி முறைமையில் மனிதசிதைவு (dehumanisation) நிகழும் சூத்திரத்தை கார்ள் மாக்சின் 'மூலதனம்' பிட்டுக் காட்டுகிறது.

மாக்சிய தரிசனத்தில், சமூகத்திற்கு வெளியாக, சமூக இயக்கத்திற்குப் புறம்பாக மனிதனைக் கண்டுகொள்ள முடியாது. மனிதவாழ்வு சமூகவாழ்வாக, சமூக உறவுகளால் பின்னப்பட்ட வாழ்வாக, சமூக முரண்பாடுகளால் சிக்குப்பட்ட வாழ்வாக, சமூக சக்திகளால் நிர்ணயிக்கப்பட்ட வாழ்வாக, சமூக இயக்கத்திற்கு உட்பட்ட வாழ்வாக இயங்குகிறது. தனி மனிதன், தனித்த ஒருவனாக, சமூகத்திற்கு வெளியாக நின்று, தனது வாழ்நிலையை நிர்ணயிக்க முடியாது. சமூகத்தை மாற்றியமைக்காமல் தன்னை மாற்றியமைக்க முடியாது. சமூகத்திற்கு உள்ளே நின்று, சமூகப் பிறவியாக நின்று, சமூக உறவுகள் ஊடாகவே மனிதன் தன்னை உருவாக்கிக் கொள்ளமுடியும். காலம் காலமாக மனிதன் படைத்த சமூக உலகங்கள் மனித விடுதலைக்கு வழி கோலவில்லை. மனித முரண்பாடுகளைக் களைந்து விடவில்லை. பொருண்மிய சமத்துவத்தை உருவாக்கவில்லை. வரலாற்றுப் பிரக்ஞையின்றி, வரலாற்று அசைவியக்கம் பற்றிய விழிப்புணர்வு இன்றி, மனிதன் வரலாற்றைப் படைத்திருக்கிறான். வரலாற்றைப் படைக்கும் சக்தியாகிய உழைக்கும் மனிதன், ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, அடிமைப்படும் மனிதன், முதலாளித்துவத்தின் இரும்புப்பிடிகளால் மனித சரக்குகளாக மிதிபடும் பாட்டாளி வர்க்க மனிதன் சுய விழிப்புணர்வோடு, வரலாற்றுப் பிரக்ஞையோடு, வரலாற்றைப் படைக்க வேண்டும். அந்த வரலாற்றுப் படைப்பாக உருவாக்கம் பெறும் புதிய சமூகத்தில், பொருளிய பொதுமை நிலவும். அந்த சமத்துவ சமூகத்தில், யுகம் யுகமாக மனிதர்கள் மத்தியில் நிலவி வந்த முரண்பாடுகள் நீங்கிய சூழலில் 'சோசலிச மனிதன்' பிறப்பு எடுப்பான். ஒரு புதிய யுகத்தின் புதிய மனிதனான சோசலிச மனிதன் திகழ்வான். அகத்திலும், புறத்திலும் விடுதலை பெற்றவனாக, தனது ஆக்க சக்திக்கு ஆக்கபூர்வ வெளிப்பாடு காண்பவனாக, முழு மனிதனாக அவன் உருவாக்கம் பெறுவான். இந்த 'சோசலிச மனிதனின்' பிறப்புடன், வர்க்க முரண்பாட்டில் சுழலும் வரலாற்றுச் சக்கரம் தனது அசைவியக்கத்தை நிறுத்திக் கொள்ளும்.

முதலாளித்துவத்தின் கொடுமையை வெறுத்து, முழு மனித விடுதலையை விரும்பிய கார்ள் மாக்ஸ், இப்படியாக ஒரு தீர்க்கதரிசனம் சொன்னார்.

சோசலிச மனிதன் பிறப்பு எடுத்தானா? பொதுமையின் சமத்துவம் புது மனிதனை, முழு மனிதனை தோற்றுவித்ததா? என்ற கேள்வி பற்றி பிறிதொரு கட்டுரையில் பார்ப்போம். இங்கு இது ஆய்வுப் பொருள் அல்ல.

கார்ள் மாக்ஸ் கனவுகண்ட மனிதன் வேறு, கண்டுகொண்ட மனிதன் வேறு. அவர் கண்டுகொண்ட மனிதனைப் பற்றியே நாம் இங்கு கவனம் செலுத்துகிறோம்.

'மனிதன் யார்?' என்ற கேள்விக்கு மாக்சியத்தில் விடை காணமுடியாது என்பது சில நவமாக்சிய தத்துவாசிரியர்களின் கருத்து. மாக்சியமானது சமூக உறவுகள் பற்றியும் சமூக அசைவியக்கம் பற்றியும் ஆழமாகப் பார்க்கிறதே தவிர மனிதம் பற்றியோ, மனிதன் பற்றியோ தேடுதலை நடத்தவில்லை என்பது இவர்களது வாதம். இந்தக் கருத்தை முன்வைப்பவர்களில் அல்துரசர் முக்கியமானவர்.

கார்ள் மாக்சின் சிந்தனை உலகை இரு கூறுகளாக வகுத்துக் காட்ட முனைகிறார் அல்துரசர். ஒன்று இளம்பிராய தத்துவார்த்த எழுத்துக்கள். மற்றையது, முதிர்ந்த மாக்சின் 'மூலதனம்'. இளம்பிராய எழுத்துக்கள் தத்துவகருத்துநிலை சார்ந்தவை என்பதும், 'மூலதனம்' அறிவியற் கோட்பாடுகளைக் கொண்ட வரலாற்று விஞ்ஞானமாக அமையப் பெற்றிருக்கிறது என்பதும் அவரது கருத்து. இளம்பிராய தத்துவ எழுத்துக்களில் மனிதத்துவம் பற்றி (humanism) மாக்ஸ் கூறியவை எல்லாம் கருத்து நிலை சார்ந்த சித்தாந்தவாதம் என ஒதுக்கிவிடும் அவர், மூலதனத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்.

மாக்சின் சிந்தனை உலகை, சித்தாந்தம் என்றும், விஞ்ஞானம் என்றும் இருவகைப்படுத்தி மனிதத்துவத்திற்கு சாவு மணி அடிக்கும் அல்துரசரின் வாதத்தை நிராகரிப்பவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். மாக்சின் எழுத்துக்களில் ஒரு தொடர்ச்சியான படிநிலை வளர்ச்சி இருக்கிறது என்பதும், முதிர்ந்தவயதில் நிகழ்ந்த சிந்தனை முறிவு (epistemological break) என்ற அல்துரசரின் கருத்து தவறானது என்பதும் இவர்களது நிலைப்பாடு. மாக்சின் தத்துவார்த்த எழுத்துக்கள் முற்று முழுதாக மனிதத்துவம்பற்றியே குறிப்பிடுகிறது என்பதும், 'மூலதனத்திலும்' முதலாளித்துவத்திற்கு எதிரான தார்மீகப் பிரகடனங்கள் நிறையவுண்டு என்பதும் இவர்களது வாதம். சர்ச்சைக்குரிய இந்த வாதப் பிரதிவாதங்களை இங்கு விபரித்துக் கூறுவது அவசியமில்லை.

கார்ள் மாக்ஸ் ஒரு மனிதாபிமானி. மானிடத்தின் விடுதலையை விரும்பியவர். முழு மனிதனைக் கனவு கண்டவர். மனித உலகத்தை மாற்றியமைக்க விரும்பியவர். மனித செயற்பாடு மூலம் அது சாத்தியமாகும் என நம்பியவர். அவரது தார்மீக இலட்சியம் நெருப்பு வரிகளாக அவரது எல்லா எழுத்துக்களிலும் சுடர்விடுகிறது.

மனிதன் யார்? என்ற விசாரணையை அவர் நடத்தவில்லை. அது அவரது ஆய்வுப் பொருளும் (analytical object) அல்ல. ஆனால், மனிதன் பற்றியும், மனிதத்துவம் பற்றியும் மனித வளர்ச்சி பற்றியும் அவர் அக்கறையோடு எழுதியிருக்கிறார்.

மனிதா சாரம் (human essence) என்ற பதம் அவரது தத்துவார்த்த சிந்தனையின் மையமாக அமைகிறது. மனித ஆக்க சக்தியை, சிருஷ்டி சக்தியை, அந்தச் சொல் குறித்து நிற்கிறது. சாராம்சத்தில், மனிதனை ஒரு சிருஷ்டி கர்த்தாவாக ஒரு படைப்பாளியாக அவர் பார்த்தார். பொருளுலகத்தைப் படைப்பவனாகவும் வரலாற்றை சிருஷ்டிப்பவனாகவும் மனிதனை அவர் சித்திரித்தார்.



இந்த மனித சிருஷ்டி சக்தியையே தொழிலாக்க சக்தியாக (labour power), பொருட் படைப்பின் மூலசக்தியாக 'மூலதனத்தில்' வர்ணிக்கிறார். இந்தத் தொழிலாக்க சக்தி மனிதனிடமிருந்து அந்நியமாதலையே மனிதச் சிதைவு எனக் குறிப்பிடுகிறார்.

முதலாளியம் மனித தொழிலாக்க சக்தியால் கட்டியெழுப்பப்படுகிறது. மனிதன் கட்டிய அக்கோட்டைக்குள் மனிதனே சிறைப்படுகிறான். படைப்பாளியைப் படைப்பே விழுங்கிக் கொள்கிறது. முதலாளியத்தின் அநீதியான சமூக உறவுகளால் விலங்கிடப்பட்டிருக்கும் மனிதனையே கார்ள் மாக்ஸ் கண்டார். எனவே, 'மூலதனத்தில்' சித்திரிக்கப்படும் மனிதன், முழு மனிதன் அல்லன். அவன் தன்னையிழந்த, தனது சுயத்தை இழந்த, தனது சுதந்திரத்தை இழந்த மனிதன். பொருண்மிய குறியீடாக, பொருண்மிய சக்திகளால் ஆட்டிப்படைக்கப்படும் ஒரு பொம்மை மனிதன்.

பொருளிய வாழ்விற்கும் பொருண்மிய உறவுகளுக்குமே கார்ள் மாக்ஸ் முக்கியத்துவம் கொடுத்தார். மனித மனம், வாழ்க்கையை நிர்ணயிப்பதல்ல. பொருளிய வாழ்வே மனித மனதை நிர்ணயித்து விடுகிறது என்று அவர் எழுதினார். சமூக உறவுகள் என்பது, அவரது ஆய்வில் உற்பத்தி உறவுகளால் உருவாகும் வர்க்க உறவுகளையே குறிக்கிறது. இந்த வர்க்க உறவுகளைத்தாங்கிநிற்கும் வர்க்க மனிதனையே அவர் சமூக மனிதனாகக்கண்டார். எனவே, மாக்சின் சமூக மனிதன் பொருளாதாரக் கட்டுமானத்தின் வரம்பிற்குள் முடங்கிக் கிடக்கிறான்.

சமூக உறவுகள் என்பது சிலந்திவலை போன்று சிக்கலானது. பல்முகப் பரிமாணங்களைக் கொண்டது. சமூக உறவுகள் அனைத்தையும் பொருளாதார உறவு என்ற வட்டத்திற்குள் வரையறுத்துவிட முடியாது.

சமூக உறவுகள் என்ற முடிச்சுகள் பல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானவை. தாய் பிள்ளை உறவு, சகோதர உறவு, தாம்பத்திய உறவு, குடும்ப உறவு, நட்புறவு, காதலுறவு, கல்வியுறவு, கட்சி உறவு, சமய உறவு, சாதி உறவு, கலை உறவு, பண்பாட்டு உறவு என்பவையும், இன்னும் எண்ணில்லாதவையுமாக சமூக உறவுகளால் மனிதர்கள் பிணைந்து கிடக்கிறார்கள். இந்த சமூக உறவுகளும், அவை விளைவிக்கும் தாக்கங்களும் மனித சுயத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏதுவாகின்றன. மனித உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றன.

வர்க்க உறவுகளை மட்டும் பிரதிபலிக்கும் வெறும் பொருண்மிய மனிதனை முழுமையான சமூக மனிதனாகக் கொள்ளமுடியாது.

மனிதன் வெறும் உழைக்கும் இயந்திரம் அல்ல. மனிதனின் சாரத்தை வெறும் உழைப்பு சக்தியாக, படைப்பாற்றல் சக்தியாக மட்டும் சித்திரித்து விட முடியாது. மனிதனிடம் உள்ளமுண்டு; உணர்வுகள் உண்டு; சமூகக் கலாசார வாழ்வில் பெறப்பட்ட பண்புகளுண்டு. இவை எல்லாம் ஒன்றுதிரண்ட மனிதமுண்டு, சுயமுண்டு, ஆளுமையுண்டு, ஆழ்மனமுண்டு.

மாக்சிய தத்துவம் தனி மனிதனை ஒதுக்கிவிட்டதால் முழு மனிதனைத் தரிசித்து நிற்கவில்லை.

சமூக அறிவியலுக்கு மனிதத்துவம் பற்றிய விசாரணைகள் அவசியமில்லை என்பது சில மாக்சியத் தத்துவாசிரியர் களின் கருத்து. மாக்சியம் சமூகவியலாக மட்டுமன்றி மனிதவியலாக முழுமை பெறுவதற்கு மனிதன் பற்றிய ஆழமான பார்வை தேவை என்பது வேறு சிலரது வாதம். மாக்சியத்தில் தனி மனிதனின் மனிதத்துவமும் உதாசீனம் செய்யப்பட்டதால்தான், மாக்சிய சித்தாந்தத்தை தழுவிக்கொண்ட சோசலிச அரசுகள் சர்வாதிகாரத்தை நிலைநிறுவி, தனி மனித சுதந்திரங்களை நசுக்க முயன்றன என்பதும் இவர்களது நிலைப்பாடு.

மாக்சியத்திலுள்ள இந்தக் குறைபாட்டை எப்படி நீக்குவது? மனிதனுக்கு முழுமையான விளக்கம் எவ்விதம் அளிப்பது?

மாக்சிய சமூகவியல் கோட்பாடுகளையும், பிராய்ட்டின் மனப் பகுப்பியல் கோட்பாடுகளையும் ஒன்றிணைத்துப் புதிதாக ஓர்அறிவியல் தத்துவத்தை உருவாக்கினால் மனிதன் பற்றி விஞ்ஞானபூர்வமான ஓர் ஆழமான தரிசனம் கிட்டலாம் என்பது சில அறிஞர்களது கருத்து. மாக்சிய சமூகவியலையும், பிராய்ட்டின் உளவியலையும் கோட்பாட்டு ரீதியாகத் திருமணம் செய்து வைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இரண்டு, வெவ்வேறான ஆய்வு இலக்குகளைக் கொண்ட அறிவியல் உலகங்களை ஒன்றிணைப்பது சுலபமான காரியமல்ல. நவ பிராய்ட்டிய சிந்தனையாளர்களான லக்கான் (Lacan) போன்றவர்கள் உளப்பகுப்பியலை மொழி அமைப்பியலாக (linguistic sturcturalism) உருமாற்றம் செய்ய முனைவதால் இந்த இணைப்பு முயற்சிகள் மேலும் சிக்கலடைந்துள்ளன. ஆயினும், மனிதனைத் தேடும் மனிதனின் முயற்சி தொடர்கின்றது.

இந்த உலகம் மாறிவருகிறது. மாறிவரும் இந்த உலகத்துடன் மனிதனும் மாறி வருகிறான். காலம் என்ற காற்று அடித்துச் செல்லும் மாற்றம் என்ற படகில், ஒரு முடிவில்லாப் பயணத்தைத் தொடரும் மனிதன், தன்னை நோக்கிப் பார்க்கிறான். அந்த சுய தரிசனத்தில், அவனது முகம் அவனுக்குப் புலப்படுவதில்லை. அது சதா மாறிக் கொண்டிருக்கிறது. இறந்த காலத்தின் சுவடுகளும், எதிர்காலத்தின் நம்பிக்கைகளுமே அவனுக்குத் தென்படுகின்றன.

ஆனால், மனிதன் தன்னைத் தேடுகிறான். முடிவில்லாத் தொடர் கதையாக அந்தத் தேடுதல் தொடர்கிறது.

**(அடுத்தவாரம் 'கருத்துலகமும் வாழ்வியக்கமும்')**

# கவிதைப் புனல்

## இறுகிய இதயங்கள்

தூங்குகிறேன் கூட்டில்
காண்கின்றேன் கனவு
என்ன தெரியுமா?
அம்மா வருவார் கூட்டிப்போவார் என்று
எப்போது வருமோ விடிவு!
வருகுது சித்திரை
எத்தனை சித்திரை இங்கு
போய்விட்டது.
அன்று போல்தான்
இன்னும் இந்த — கூட்டில்
எனக்குத்தான் விடிவு இல்லை!
விடிவைத் தேடும் உள்ளங்கள்
சிறையினுள் கிடக்கும்
நாம் மாத்திரமல்ல
சுனாமிப் பேரலையடித்து
தம் எதிர்காலத்தை
அகதிமுகாம்களினுள்
தொலைத்துக் கொண்டிக்கும்
மாணவ மாணவிகளுக்கு
விடிவு இல்லையா?
யார் யாருக்குச் சொல்வது
கேட்க யார் இருக்கிறார்?
கேட்டால் எம் நிலமைவேறு!
வேண்டாம் மௌனமாகவே இருங்கள்
காலம் பதில் சொல்லும்.

*நீலாவணை ம.புவியரசு,*
*களுத்துறை சிறை.*

## வாழ்ந்தால் உன்னோடு இல்லையேல் மண்ணோடு

எப்படியடி உனக்கு மனம் வந்தது
இவ்வளவு இலகுவாய்
சொல்லிவிட்டாய்
நீ சாய்ந்த மார்பில் இன்னொருத்தியா?
உன்னை சுமந்த இதயத்தில்
வேறு ஒருத்தியை சுமப்பதா?
நமது பண்பாட்டில் மனைவி மட்டும்
ஒன்றல்ல, காதலி கூட ஒன்றுதான்
என்று நினைப்பவன் நான்.
என் வாழ்க்கை உன்னோடு
இல்லை மண்ணோடு.
ஒருத்தியை நினைத்து மற்றவளோடு
வாழ்வதை விட ஒருத்தியின்
நினைவோடு இறப்பதே மேல்.

*இ.யூட்,*
*யாழ்ப்பாணம்.*

## முடியவே இல்லை

ஆகாயத்தில் பறக்க ஆசைதான்
பறக்க முடியவில்லை.
காற்றை ஒரு கணம் காண
ஆசைதான்
காண முடியவில்லை.
பூவுடன் ஒரு வார்த்தை பேச
ஆசைதான்
பேச முடியவில்லை.
கடலை அணைக்க ஆசைதான்
அணைக்க முடியவில்லை.
நெருப்பை நெருங்க ஆசைதான்
நெருங்க முடியவில்லை.
உன்னுடன் சில
மணித்துளிகளாவது வாழ
ஆசைதான்
ஆனால் வாழ முடியவில்லை.

*எஸ்.புஸ்பா, வவுனிக்குளம்.*

## நிபந்தனை

பலன் பார்த்துப் பலதும்
பொருத்தமென்றே
பெற்றோரும் உற்றோரும்
பெருமையுடன் பேசி நிற்க
பேதையவள் போட்டாளே
போடு...
கொஞ்சம் குடிச்சாலும்
பரவாயில்லை
கொஞ்சம் கூட கறுப்பு
வேண்டாம்
சிகரெட் பத்தினாலும்
சினிமா நடிகரைப்போல்
வேண்டும்
என்ன வேலை செய்தாலும்
மணமகனோ!
வெளிநாட்டிலிருந்து
வரவேண்டும்.
வெளிநாடென்றாலும்
ஐரோப்பிய நாடுதான்
வேண்டும் என்றாள்.

*கோபி,*
*கோப்பாய்.*

## கவி அல்ல காதல்

உவமைகளால்
உயர்த்தி
உதாரணங்களால்
உணர்த்தி
வார்த்தைகளால்
வர்ணித்து
வரிகளால்
வடிவமைத்து
வர்ணங்களால்
அலங்கரிக்க
கவிதையல்ல
பெண்ணே நீ
"காதல்"

*எஸ்.யசோ, ஒட்டுசுட்டான்.*

## பாதுகாப்பு

மக்களுக்கல்ல
சிறையில்வாழும்
வீரர்களுக்கு அது.

## உடம்பு

கவலைகள் காணும்
மைதானம் இது.

## இதயவினை

வேட்டைக்காய் அலையும்
வேறப்பல நாய்கள்
மாமிச வேட்கையால்
வட்டமிடும் கழுகுகள் அவை

*ஆ.ஜூசியாமேரி,*
*புளியங்குளம்.*

## பனித்துளிகள்

ஓ.... நிலவே
உனக்குமா? உனக்குமுறல்
ஊமையாய் அழுகிறாயே...
பின்னிரவில் பொழியும்
தூறல்கள் !!
சோலைப் பூக்களில்
குடிகொள்ளும் நீர்துளிகள் !!!

## இலஞ்சம்

ஒப்பந்தம் கைச்சாத்திட
கனப்பொழுதில்
காரியம் முடிக்கும்
கரன்சி நோட்டுக்கள்

## ஒற்றுமை

ஒன்றாய்ப் பிறந்து
ஒரு கூட்டாய் வளர்ந்து சீப்புச்
சீப்பானது — குலையில்...
வாழைப்பழம்...

*திருமலை நதார்,*
*ஜின்னாநகர்.*

## சுடுகாட்டுவாசம்

உன் செவ்விதழ்
அசைவிடை
செவ்வரத்தம் பூவும்
உன் முத்துப்பல்
வரியிடை
நேர் கோட்டின்
நேர்த்தியும்
உன் புன்னகையின்
பூரிப்பில்
பூக்களின் மகிழ்ச்சியும்
உன் நடை அழகின்
வடிவில்
அன்னங்களின்
அணிநடையும்
ஒன்றாக ஒத்துவர
உன் மனசில் மட்டும்
ஏன் சுடுகாட்டு வாசம்?

*றோம்ஜெனி, மன்னார்.*

## காதல்!

விழியில் மலர்வது
மொழியில் புலர்வது
ஒட்டிக் கிடப்பது
கைபற்றி நடப்பது
இதழ் பற்றிச் சுவைப்பது
சொன்னால் இனிப்பது
சுகமாய்ச் சிரிப்பது
வீணாய் எழுவது
இறக்கையின்றிப் பறப்பது!

*இ.பவாணி, தொட்டியாடி.*

## காத்திருக்கும் உறவு

வளர் பிறையாய் வளரும்
உன் நினைவுகளால்
தேய்பிறையாய் நான்
தேய்கின்றேன்
பௌர்ணமியான உன்
முகஒளி காண
அமாவாசையாய் நான்
காத்திருக்குகிறன்
நிறைமதியே உன்
நிழல் பட்டே
நிம்மதி நான் காண்கின்றேன்
வான்மதியே உன்
வருகை கண்டு
வண்ணரோஜாவாய்நான்
மலருகின்றேன்
வளர்மதியே உன்
கைப்பிடிக்க — நான்
வாஞ்சையுடன் வாழ்கின்றேன்.

*எ.கே.ஜீவா, நல்லூர்.*

## வாழ்க்கை

பாசம் என்னும் கடலிலும்
உறவு என்னும் துடுப்பிலும்
வாழ்க்கை என்னும் படகினிலே
பயணிக்கிறேன்.....
ஆனால் என் படகிற்கு
துவாரம் வந்திடுமா....!
அல்லது என் கண்ணீர்
நிறைந்து படகை தாக்கிடுமா..
என் மனதிற்குள் நினைக்கிறேன்
படகு கரை வரைக்கும்
செல்லும் என்று....
ஆனால் இறைவா — பாசம்
என்னும் கடலும்
உறவு என்னும் துடுப்பும் — நான்
பயணிக்க துணையாக வேண்டும்.

*ர.ரவிக்குமார்,*
*நானாட்டான்.*

## மனம்

உடலினுள்ளே இருந்து கொண்டு
உலகைச் சுற்றி வரும்,
சிறகு இல்லாப் பறவை...!

## அன்னை

உருவம் தந்து உயிர்கொடுத்து
உலகை காண்பித்த
உத்தம பிறவி!

## வானவில்

சூரியனின் ஒளிக் கீற்றுக்களால்
ஆகாயத்தில் வரையப்பட்ட
வர்ண ஓவியம்!

## கவிதை

எண்ணங்களின் சிதறல்களால்
பேனை முனைகளால்
வரையப்படும் கிறுக்கல்கள்!

## காதல்

இரண்டு மழைத்துளிகள்
ஒன்றாக விழுந்து கலக்கையில்
தோன்றும் நீர்க்குமிழ்

*க.நகுலேஸ்வரன்,*
*முள்ளியவளை.*

## காதலனே

என்னை பூவாய் மாறி
புயலைச் சந்திக்கச் சொல்!
மீனாய் மாறி
வலையைச் சந்திக்கச் சொல்!
மானாய் மாறி
கணையைச் சந்திக்கச் சொல்!
இலையாய் மாறி
உதிர்வைச் சந்திக்கச் சொல் —
ஆனால்
உன் காதலியாய் உருவெடுத்த பின்
உந்தன் பிரிவை மட்டும் சந்திக்கச்
சொல்லாதே
அதை நொடிப்பொழுதேனும்
சந்தித்தால்
மறுகணம்
என் இதயம் நிரந்தர ஓய்வினை
நிச்சயம் -- சந்திக்கும்!

*வதனி, பூநகரி.*

## காதல் கொண்டு!

கண்களால் காதல் கொண்டு
காலமெல்லாம் காத்திருந்து
இமைக்காமல் வாடி நின்றேன்
என்னவளே ஏன் இன்னும் — மௌனம்
கல்வி கற்று — நீ
என் மனதை கற்க ஏன் மறந்தாய்
பாவப்பட்ட என் ஜீவன் — இன்னும்
உனக்காக தவிப்பதும் ஏனோ!
இருவரும் ஓர் உயிர் என்று — அன்று
நீ உரைத்தாய் — இன்று
நான் யாரோ என நீ உரைப்பதோ!
எனை நீ வெறுத்தாலும் — என்
ஜீவன் உனை விட்டு விலகாது.

*ரி.ஆர்.யுகன்,*
*மயிலம்பாவெளி.*

## உனக்குத்தான் தெரியும்

நீ
என் இதயத்தை
யாசிக்கவோ
இல்லை
உன் பொழுதுகளை
போக்குவதற்கோ
இல்லை
எத்தனையோ
காரணங்களுக்காகவோ
நீ
என்னை
பின் தொடர்ந்திருக்கலாம்
எதுக்காகவென்று
அது உனக்குத்தான்
தெரியும்
ஆனால்
நீ என்னை
பின் தொடர்ந்ததால்
நான் சமூகத்தால்
கேட்கப்பட்ட
கெட்ட பெயர்கள் பற்றி
நிச்சயம்
உனக்குத்
தெரிந்திருக்காது
நீயாகவே வந்து
என்மீது
மோதினாய்
இருந்தும்
உடைத்தாதன்னவோ
நான்தான்
இது இயற்கையின் சதி
அது தெரிந்திருந்தமையால் தான்
என்மீது வந்து
மோதிக் கொண்டாயோ
தெரியவில்லை
ஆனால்
நான் தான்
உன் மீதுமோதி
உடைந்து கொண்டேனே
சமூகம் என்னை
குற்றவாளிக் கூண்டில்
ஏற்றியுள்ளது
என்னை
நிரபராதியாக்க
உன்னால் மட்டும்தானே
முடியும்
அதையாவது
செய்வாயா
இல்லை
என்
கண்ணீர்த்துளிகளுக்கெல்லாம்
காலாகாலமாய்
காரணமாய்
இருப்பாயா?
இது கூட
உனக்குத்தான் தெரியும்.

*ரம்யா,*
*மருதங்கேணி.*

## காதலின் உயர்வு

எனக்கென்று — பூத்த
பெண்பூவே....
எந்த மாவட்டத்தில்
நீ பூத்தாய்...
யாரையும் நான்
காதலிக்க வில்லை காரணம்
என் மனம் தூங்கிக்
கொண்டிருக்கின்றது
காதலித்து தோற்றுவிட்டால்
மீண்டும் இன்பத்தில் — வர
முடியாது என்கின்றார்கள்
காதலுக்காக உயிரை
விட்டவர்கள் முட்டாள்கள்
துணிவும் இல்லை திடமும் இல்லை
காதலில் தோற்றுவிட்டால்
இறந்துதான் உண்மையை
வெளிபடுத்த வேண்டுமா...?
உண்மையாகவே கடைசிவரை
மனதில் அவளை காதலித்து...
காட்ட முடியாதா....
தாடி வளர்த்து தண்ணி அடித்துத்தான்
காதலின் சோகத்தை காட்ட
வேண்டுமா....?
உன்
உயிரானவளின் நினைவை
உனது கண்ணீரில் கரைத்து
உனது கனவுகளில் கதைபேசி
வாழவைக்க முடியாதா?
இப்படியானவர்களை நினைக்கும்
போது சிரிப்புத்தான் வரும்
காதல் உண்மை — அது
மனித இனத்தில் மட்டும்
உயர்ந்திருப்பதும் உண்மை
அப்படிப்பட்ட உன்னதமான
உண்மைக் காதலை...
அவசரப்பட்டுக் காதலித்து — ஏன்
பொய்யாக்க வேண்டும்...
அவளைக் கைபிடித்தபின்
காதலிப்போம்
உண்மையுடன்
காதலின் உயர்வை
அறிந்திடுவோம் இன்புறுடன்

*பி.செ,*
*நானாட்டான்.*

# ஒரு நாள் ஒரு கனவு

''நாவேந்தன்... நான் வந்து சரியா நாற்பது நிமிஷமாயிடுச்சி. நீங்க இன்னமும் பேசாம இருந்தா என்ன அர்த்தமாம்.''

''[illegible]ம் நாள் முழுதும் தான் பேசிக்கிட்டிருக்கோம். இன்றைக்கு ஒரு நாள் பேசாமத்தான் இருப்போமே....''

''என்ன நீங்க... ரொம்ப சாதாரணமா பேசிக்கிட்டிருக்கீங்க. தலைக்கு மேலே வெள்ளம் போகப் போகுது. உள்ளம் பதறாம இருக்கீங்க... உங்களால மட்டும் எப்படி இப்படியிருக்க முடியுது?''

''பதறினா எல்லாமே சிதறிப்போயிடும் என்று எனக்குத் தெரியாதா? நான் மட்டும் நிதானம் தவறி அவசரப்பட்டிருந்தா என்றைக்கோ உன்னை இழந்திருப்பேன். வங்கியில வேலை செய்யிற மாதச் சம்பளக்காரனான எனக்கும் கோடீஸ்வரன் மகளான உனக்கும் காதல் வந்தது கூட அதிசயமில்லை. ஆனா, அது இவ்வளவு இறுக்கமாகி இப்போ எதிர்ப்புகளுக்கு மத்தியில சுருக்கமா பதிவுத் திருமணத்தோட முடியப் போகுதுன்னா அதுக்கு உண்மையான அன்பும், தன்னம்பிக்கையும்தான் காரணம்...''

''அப்படின்னா பதிவுத்திருமணம் என்றே தீர்மானிச்சிட்டீங்களா.''

''வேற என்ன செய்யிறது. உங்கப்பாதான் இந்த விஷயத்துல பிடிவாதமாகவே இருக்காரே?''

''இல்லையில்லை... நீங்க நாளைக்கு எங்கப்பாவை வந்து பார்த்துப் பேசுங்க...''

''இதெல்லாம் சரிவர்ற காரியமில்லை தாரிணி....''

''எங்கப்பா ஒரே பெண்ணான என்மேல உயிரையே வச்சிருக்காரு. நானும் பிடிவாதமாச் சொல்லிட்டேன். சரி வந்து சந்திக்கச் சொல்லு பார்ப்போம் என்டிட்டாரு. எனக்காக நீங்க அவரைச் சந்திக்கத்தான் வேணும்.''

''நீ சொல்லுறியே என்று வாரேன். ஆனா நான் தன்மானமுள்ளவன். தாறுமாறா ஏதாவது பேசினா அப்புறம் நான் ரொம்பவும் பொல்லாதவனாயிடுவேன்....''

''என்ன கொலையே செஞ்சிடுவீங்களோ....?''

''சில நேரம் அதையும் செய்ய வேண்டியிருக்கும்...''

''ஆமா கட்டெறும்பைக் கண்டாலே கருணையோட பார்க்கிற நீங்களாவது ஒருத்தரை கொலை செய்யிறதாவது....''

''சரி... இருந்தாலும் சாது மிரண்டால் தெரியும்தானே....''

''அதெல்லாம் மிரள வேணாம். ஒழுங்கா புதுமாப்பிள்ளையா வருங்கால மாமனார் கிட்ட மனம்விட்டுப் பேசுங்க. எல்லாம் சரியாயிடும்...''

''ஒகே... நேரமாகுது தாரிணி... தங்கச்சியோட கல்யாணவிஷயமா மாப்பிள்ளை வீட்டுக்குப் போகணும். அக்காவுக்கு ஆண்பிள்ளை பிறந்திருக்கு மருத்துவமனைக்கு வேற போயாகணும்.. நான் மறுபடியும் இரண்டு நாள் கழிச்சி உன்னைப் பார்க்கிறேன்...''

''அப்பாவை சரியான நேரத்துக்கு சந்திக்க மறந்துடாதீங்க. அவருக்கு எல்லாமே நேரத்துக்கு நடக்கணும் சரிதானே....''

அவன் புன்னகையுடன் தலையை ஆட்டியவாறு அந்தப் பூங்காவை விட்டு நடந்தான். அதேசமயம் - இவ்வளவு நேரமும் அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததை மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்த அந்த உருவம் மெதுவாக அந்த இடத்தைவிட்டு வெளியேறியது.

அடுத்தநாள்-

இரவு பத்துமணியிருக்கும் நாவேந்தன் வெகு நேரம் படித்துக் [illegible]கொண்டிருந்தான். கல்கியின் 'பொன்னியி[illegible] செல்வன்' நாவலை மூடிவைத்துவிட்டு[illegible] [illegible]ங்குவதற்கு தயாரானான். அப்போது அ[illegible] வீட்டு வாசலில் ஏதோ வாகனமொன்று வ[illegible] நிற்கும் சத்தம் கேட்டது. நாவேந்தன் மு[illegible] அறைக்கு, வந்து, மின்விளக்கைப் போட்[illegible].

''நாவேந்[illegible] என்னப்பா...''

அவன் தாய் கமலம்பாள் உள் அறையிலிருந்து கேட்டாள்.

''ஒண்ணுமில்லையம்மா நீங்க தூங்குங்க....''

அப்போது கதவைப் படபடவென யாரோ தட்டினார்கள்.

''யாரது...?''

''நாங்க பொலிஸிலிருந்து வந்திருக்கோம்.- கொஞ்சம் க[illegible]வைத் திறக்க முடியுமா?''

''பொலிஸா...'' நாவேந்தன் எதுவும் புரியாமல் கதவைத் திறந்தான்.

வெளியே நாலைந்து பொலிஸ்காரர்களுடன் தலைவிரி கோலமாக தாரிணியும் நின்றிருந்தாள்.

''தாரிணி... என்ன இந்த நேரத்துல.. இவங்க எல்லாம் எதுக்கு.....?''

''பேசாதீங்க.. கடைசியில சொன்னமாதிரி செஞ்சிட்டீங்களே இன்ஸ்பெக்டர். இவர்தான் நான் சொன்னவரு... தாறுமாறா பேசினா கொலையே செஞ்சிடுவேன்னாரு. சொன்ன மாதிரியே செஞ்சிட்டாரு....''

நாவேந்தன் அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்.

''தாரிணி.. நீ.... நீ.... என்ன சொல்லுறே....''

''ஒண்ணும் தெரியாதமாதிரி நடிக்காதீங்க. எங்கப்பாவை பார்த்து பேச வந்த நீங்க... அவரு உங்களை தவறா பேசினார் என்னுறதுக்காக அவரை கழுத்தை நெரிச்சிக்கொன்னுட்டீங்க...''

''ஐயோ கடவுளே பொய்.... நான் போன போது அவர் என்கிட்ட நால்லாத்தான் பேசினாரு. கல்யாணத்துக்கும் சம்மதம் என்று சொன்னாரு...''

''தயவு செஞ்சி திரும்பத் திரும்ப பொய் பேசாதீங்க நாவேந்தன். உங்களைத் தவிர அப்பாவை வேறு யாருமே சந்திக்கல்ல. எனக்கு நிச்சயமா தெரியும், அநியாயமா எங்கப்பாவை கொன்னது நீங்கதான். நீங்களேதான்....''

நாவேந்தன் எதுவோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் - இரண்டு பொலிஸ்காரர்களுடன் இன்ஸ்பெக்டர் தயாளன் முன்னே வந்தார்.

''மிஸ்டர் நாவேந்தன். நீங்க எது பேசுவதாயிருந்தாலும் கோர்ட்டில பேசிக்கங்க. நீங்க குற்றம் செஞ்சீங்களோ இல்லையோ உங்களுக்கெதிராக சாட்சி இருக்கிறதால சட்டப்படி உங்க மேல நடவடிக்கை எடுக்கிறதை தவிர வேறு வழியில்லை. வந்து வாகனத்துல ஏறுங்க...''

அப்போது கமலாம்பாள் பதற்றத்துடன் வாசலுக்கு வந்தாள்.

''ஐயோ நாவேந்தன்.. என்னப்பா இதெல்லாம்...''

''ஒண்ணுமில்லையம்மா.. நீங்க கதவை மூடிக்கங்க நான் போயிட்டு உடனே வந்திடுவேன்.''

அவன் பொலிஸ் வாகனத்தில் தலை குனிந்தவாறு ஏறினான். அது புகையைக் கக்கியவாறு விரைந்தது.

ஒரு வாரம் சென்றது. நாவேந்தன்தான் தாரிணியின் தந்தை மதிஒளியை கொலை செய்தான் என்பதற்கு போதுமான ஆதாரங்கள் இருக்கவே இன்ஸ்பெக்டர் தயாளன் மிக எளிதாக அந்த வழக்கை முடிக்க நினைத்தார். அவருக்கு ஏற்கனவே வேறொரு ஊருக்கு இடமாற்ற உத்தரவு வந்திருந்தது. இந்த வழக்கை சரியாக முடித்துவிட்டால் பதவி உயர்வும் கிடைத்துவிடும். தாரிணியின் பலமான சாட்சியுடன் மதிஒளியின் அறையிலிருந்த நாவேந்தனின் கைவிரல் அடையாளங்களும் முக்கிய சாட்சியாக இருந்தமையினால் ஒன்றும் ஒன்றும்இரண்டு என மிக இலகுவாக கணக்குப் போட்டு முடித்துவிட்டார் தயாளன். நாவேந்தன் இனி தப்புவதற்கு வழியே இல்லையென்றளவுக்கு அவன் மேல் வழக்கு மிகக் கடினமாக இருந்தது. அவனால் தனிமையில் மௌனமாக அழுவதைவிட வேறெதுவும் செய்ய முடியவில்லை. ஏழை சொல் எந்தக் காலத்தில்தான் அம்பலமேறியது?

தயாளன் மாற்றலாகிப் போகவும் அடுத்து பொலிஸ் இன்ஸ்பெக்டராக அந்த இடத்துக்கு வந்தவர் செழியன். செழியன் திறமையானவர். நேர்மையான பொலிஸ் அதிகாரி. அவருக்கு எப்போதுமே எல்லாமே சட்டப்படி நடக்கவேண்டும். நீதிக்கு முன் யாராக இருந்தாலும் சமமாக மதிக்கப்பட வேண்டும். நீதி காக்கப்பட வேண்டுமென்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

நாவேந்தனின் வழக்கு விபரங்களை செழியன் மிகக் கவனமாக வாசித்தார். நாவேந்தனை சிறைச்சாலை சென்று சந்தித்தார். அவன் தான் குற்றமற்றவன் - நிரபராதி என்பதையே திரும்பத்திரும்பச் சொன்னான். செழியனுக்கு மனதில் ஏதோ ஒரு பொறி தட்டியது. நாவேந்தன் குற்றமற்றவன் என்று அவரின் அடிமனம் கூறியது.

செழியன் - அந்த வழக்கை மறுபடியும் ஆராய்ந்து பார்க்க முடிவு செய்தார். அடுத்த நாளே மதிஒளியின் மாளிகையை அடைந்தார். தாரிணி இன்னமும் சோகம் நிறைந்த முகத்துடன் இருந்தாள். அவளிடம் சில கேள்விகளைக் கேட்டுவிட்டு மதிஒளியின் அறைக்குச் சென்றார். அந்த அறை எந்த மாற்றங்களும் செய்யப்படாமல் அப்படியே இருந்தது. விசாலமான அந்த அறையை செழியன் சுற்றிச் சுற்றி வந்தார். அந்த அறையில் நிறைய கண்ணாடி யன்னல்கள் இருந்தன. அவற்றைக் கவனமாக ஆராய்ந்தார். ஒரேயொரு யன்னலின் 'கிரிள்' மட்டும் சரியாக பூட்டப்படாமல் கழற்றுவதற்கு ஏதுவாக இருப்பதை அவதானித்தார். அதன் வழியாக வெளியேயிருந்து யார் வேண்டுமானாலும் வரமுடியும். 'மதிஒளி' கொலை செய்யப்பட்ட கட்டிலருகே செழியன் வந்தார். கட்டிலின் அடியில் யாருக்குமே தெரியாத இடத்திலிருந்த அந்தப் பொருள் செழியனின் எக்ஸ்ட்ரே கண்களுக்கு மட்டும் புலப்பட்டது. அவர் அதை தொட்டு தடவி சிறிய காகிதத்தில் பத்திரப்படுத்திக் கொண்டார். வேறு எதுவும் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக கண்ணுக்கு அகப்படவில்லை. அவர் அறையை விட்டு வெளியே வந்தார்: தாரிணி கொடுத்த சுவையான பசும்பால் கலந்த தேநீரை சுவைத்துக் குடித்தார். பின்பு தாரிணியிடம் துருவித் துருவி விசாரித்தார்.

மூன்று நாட்களில் செழியன் குறிப்பிடத்தக்க சில பிரயோசனமான தகவல்களைச் சேகரித்தார். 'மதிஒளி' ஒரு பெரிய கோடீஸ்வரர். அவருக்கு ஆண்வாரிசு கிடையாது. அவரது ஒரே வாரிசு தாரிணி மட்டும்தான். மதிஒளி மனைவியை இழந்தவர். பல கோடி சொத்துக்கு அதிபதியான அவருக்கு எதிரிகள் ஏராளம். மதிஒளியின் மனைவியின் அண்ணன்தான் தங்கவேலு. தங்கவேலுவின் ஒரே மகன் ஒப்பிலாமணி. தங்கவேலு 'மதிஒளி'யின் வியாபாரங்கள் அனைத்தையும் பார்த்துவந்தார். ஒப்பிலாமணி அவருக்கு உதவியாக இருந்துவந்தான்.

சம்பவம் நடந்த அன்று தங்கவேலு தன் மகனுடன் வியாபாரம் சம்பந்தமாக கொழும்புக்குச் சென்றிருந்தார். அவர்கள் வழமையாகத் தங்கும் அதே ஐந்து நட்சத்திரக் ஹோட்டலில் தங்கியிருக்கிறார்கள். நாவேந்தன் சுமார் அரை மணி நேரம் மதிஒளியுடன் அவர் அறையில் தனியாக இருந்திருக்கிறான். இதற்கு தாரிணியே சாட்சி.

செழியன் - தான் சேகரித்த தகவல்களை மறுபடியும் ஒருமுறை சரிபார்த்துக் கொண்டார். மேலும் அடுத்த நாளே கொழும்பு சென்றார். இரண்டு நாட்களின் பின் திரும்பிவந்தார். அவர் மனம் ஏறக்குறைய தெளிவடைந்திருந்தது. அவர் இரண்டு மூன்று பொலிஸ்காரர்களுடன் தங்கவேலுவின் வீட்டை அடைந்தார். அந்த வீடும்கூட கிட்டத்தட்ட மாளிகை போலத்தான் இருந்தது. தங்கவேலு பொலிஸ்காரர்கள் தன்னைத் தேடிவருவார்கள் என எதிர்பார்க்கவில்லை.

''வாங்க இன்ஸ்பெக்டர் உட்காருங்க... என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்திருக்கீங்க....?''

''மதிஒளி கொலை சம்பந்தமா உங்களை கைது செய்ய வந்திருக்கேன். கொலைக்கு உடந்தையா இருந்த உங்கமகன் ஒப்பிலாமணியையும் கைது செய்ய வேண்டியிருக்கு எங்க உங்க மகன்...?''

தங்கவேலு அதிர்ச்சியுடன் செழியனை பார்த்தார். அவர் உடல் நடுங்கியது.

''என்ன இன்ஸ்பெக்டர் சொல்லுறீங்க. நான் அவரைக் கொன்றேனா?..''

''சும்மா நடிக்காதீங்க மிஸ்டர் தங்கவேல். ஆதாரமில்லாம நான் வரமாட்டேன். கொலையையும் செஞ்சிட்டு பழியை அப்பாவி ஒருத்தன்மேல போட்டுட்டீங்க. நீதி தூங்கும்; ஆனா சாகாது. மரியாதையா உண்மையை ஒத்துக்குங்க. நீங்க பைப் புகைக்கிறவர் தானே...''


''ஆ.... ஆமாம்....''

''மதிஒளியோட படுக்கையறைக்கு அவர் மகள் தாரிணியைத் தவிர வேற யாருமே போக முடியாது. நீங்களும் உங்கமகனும் நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் உங்களால கூட அவரோட படுக்கையறைக்குப் போகமுடியாது என்று விசாரணை மூலமாக தெரிஞ்சிக்கிட்டேன். ஆனா இறந்துபோன மதிஒளியோட கட்டிலுக்கு கீழே பைப்புக்குப் போடுற புகையிலைத்தூள் கொட்டியிருந்திச்சி. அதுவுமில்லாம அந்த அறையிலிருந்த ஒரேயொரு யன்னல் மட்டும் வித்தியாசமா வெளியிலிருந்து சுலபமா உள்ளே வருவதற்கு தோதாக இருந்ததை அவதானித்தேன். ஆக நாவேந்தன் நிரபராதி அவன் மேல் பழியைப் போட்டு யாரோ மிக நுணுக்கமா திறமையா செஞ்சிருக்காங்கள் என்று புரிஞ்சிகிட்டேன். ஆனா கொலையாளி யார் என்று தெரியலை. தாரிணிக்கிட்ட அவங்களும் நீங்க உங்க மகனுடன் சேர்ந்து எடுத்துக்கிட்ட புகைப்படம் ஒண்ணு இருந்திச்சி. அதை கேட்டு வாங்கிக்கிட்டேன். உங்களையும் உங்கள் மகனையும் பற்றி தீவிரமா விசாரிச்சேன். என் முழுச்சந்தேகமும் உங்க மேலே திரும்பிடுச்சி. இருந்தாலும் இன்னும் தெளிவா அதை உறுதி செஞ்சிக்கிறதுக்காக நான் கொழும்புக்குப் போனேன். நீங்க தங்கினதா சொன்ன ஹோட்டலுக்குப் போய் புகைப்படத்தைக் காட்டி நீங்க அங்கே தங்கினீங்களா என்று விசாரிச்சேன். நீங்க தங்கினதை அவங்க உறுதிப்படுத்தினாங்க. ஆனா - மதி ஒளியை கொலை செய்யிறதுக்கு முதல்நாள் காலையிலேயே ரூம் புக் பண்ணின நீங்க அன்னைக்கு முழுநாள் இருந்திருக்கீங்க. கொலை நடந்த அன்றைக்கு பகல் நேரத்துல வெளியே போன நீங்க விடியக் காலையிலதான் வந்திருக்கீங்க. இப்ப சொல்லுங்க - எதுக்காக மதிஒளியை கொன்னீங்க..''

தங்கவேலு இடிவிழுந்த நிலையில் சற்று நேரம் பேசாமல் இருந்தார். பின்பு நீண்டதொரு பெருமூச்சுடன் இன்ஸ்பெக்டர் செழியனைப் பார்த்தார்.

''இன்ஸ்பெக்டர் நான் உண்மையைச் சொல்லிடுறேன். மதிஒளியை நான்தான் கொலை செய்தேன். சொந்தக்காரன்னுற முறையில் எல்லா பொறுப்புக்களையும் மதிஒளி என்கிட்ட ஒப்படைச்சார். என்னோட உதவிக்கு என் மகனையும் வச்சிக்கிட்டேன். என் மகன் ஒப்பிலாமணி ஒரு ரேஸ் பைத்தியம். எந்நேரமும் குடிவேறு. அவனுக்காக நான் நிறையப் பணத்தை களவாக எடுத்து கள்ளக்கணக்கு எழுத வேண்டியதாயிற்று. ஆயிரம் பத்தாயிரமாகி அது லட்சமாகி கடைசியில் கோடியில் வந்து நின்ற போது மதிஒளி கண்டுபிடித்து

(21 ஆம் பக்கம் பார்க்க)



# நெட் குறும்பு



குருவியின் தலையில் பனங்காயை வைப்பது என்பது இதுதானோ?




## ஜோக்

புதிதாக அந்த வீட்டுக்கு குடிவந்திருந்தது ஒரு குடும்பம். வீட்டிலே குளியலறை வித்தியாசமான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. அதாவது குளியலறைக்குள் வழக்கமாக இருக்கும் நான்கு பக்கச் சுவர்கள் அங்கு காணப்படவில்லை. மாறாக நான்கு பக்கத்திலும் கண்ணாடி பதிக்கப்பட்டிருந்தது....

இந்த குளியலறையைக் கண்ட குடித்தனம் வந்தவரின் மனைவி அதிர்ச்சி அடைந்தாள். சுற்றிவர இருந்த வீடுகளை அவதானித்தாள்... எந்த வீட்டு யன்னல்களுக்கும் திரைச்சீலை போடப்படவில்லை. அவைகளை தனது கணவரிடம் சுட்டிக் காட்டிய மனைவி.... "இந்த கண்ணாடி போட்ட குளியலறையிலே நின்று எப்படிக் குளிப்பது? பக்கத்துவீட்டு யன்னல்களுக்கும் திரைச்சீலை இல்லை... எல்லோரும் நான் குளிப்பதை வேடிக்கை பார்ப்பார்களே!'' என்றாள்....

இதனை கேட்ட கணவன் சொன்னான்.... "அப்படியெல்லாம் கவலைப்படாதே... பக்கத்து வீட்டுக்கரரர்கள் நீ குளிப்பதை ஒரு நாள் வேடிக்கை பார்த்தால்.. மறுநாள் தாங்களாகவே தங்கள் வீட்டு யன்னல்களுக்கு... திரைச்சீலை வாங்கிப் போட்டுவிடுவார்கள்.'' என்று சமாதானப்படுத்தினான்.

# ஒளிந்திருக்கும் ஓவியம்



படத்தில் இருப்பது டொல்பின்களா? அல்லது குதிரைகளா?..

# விந்தை செய்தி





தற்போதைய உலகில் போராட்டம் என்றால் உடனேயே உடுத்திருக்கும் உடையை அவிழ்த்துப் போட்டுவிட்டு நிர்வாணமாக நின்று போராட்டம் நடத்தவது என்பது சர்வசாதாரணமான விடயமாகிவிட்டது.

அண்மையில் ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்சலோனா என்ற நகரில் சர்வதேச தோல் பொருள் கண்காட்சி நடைபெற்றது. அங்கே கண்காட்சியைப் பார்க்க வந்தவர்கள் அனைவரும் நரிமுகத்தில் முழித்துவிட்டு வந்தார்களோ தெரியவில்லை. அங்கே கண்காட்சிக் கூடத்துக்கு உள்ளேயும் - வெளியேயுமாக இரட்டைக் கண்காட்சிகளைபார்த்து குதூகலித்துச் சென்றார்களாம். அப்படியென்ன விசேஷம் வெளியே என்கிறீர்களா...! அழகான பெண்கள் சிலர் நிர்வாணமாக நின்று அந்த கண்காட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

அந்த கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பொருட்களில், பல மிருகங்களை வதைத்து அவற்றின் தோலில் இருந்து தயாரிக்கப்பட்டவை என்றும் - எனவே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஸ்பெயினிலுள்ள மிருக வதை தடை அமைப்பினைச் சேர்ந்த பெண்களே இந்தப் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள்.

அது சரி இவ்வாறான போராட்டங்களால் எதிர்த்தரப்பினர் பாதிக்கப்படுவார்களோ! மாறாக இவ்வாறான நிர்வாணக் காட்சிகளை கண்டு களிக்கும் நோக்கில் மேலும் மேலும் தப்புப் பண்ணத் தானே செய்வார்கள்.

# சத்தமில்லாத சிரிப்பு



ஆஹா... கெட்டிக்காரத் தவளையாக இருக்கிறதே... கொக்கின் கழுத்தை இப்படி இறுக்கிப் பிடித்துவிட்டால் கொக்கினால் எப்படி தவளையை விழுங்க முடியும்?

# கண்ணாமூச்சி



அருகே உள்ள படத்தில் எத்தனை கைகள் இருக்கின்றன...? எண்ணிச் சொல்லுங்கள் பார்ப்போம்...

# பழந் தமிழர் சுமேரியர்

பண்டைக் காலத்தில் ஓடும் நதிகளை நாடிய மக்கள் அவற்றின் நீடிய கரையோரங்களில் குடியமர்ந்து, பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு பண்பட்டு வாழப் பழகிக்கொண்டனர்.

காடுகளையும் வனாந்திரங்களையும் ஊடறுத்துப் பாயும் நதிகள் பாய்ந்தோடிய திசைகளில் மண்ணின் வளம் செழிக்கவும், மனித நாகரிகம் தழைக்கவும் ஆதாரமாய் விளங்கின.

ஆதலின் நதிதீரத்து நாகரிகங்களே பூமியின் புராதன கால நாகரிகங்களாயின.

அவை எகிப்திய நாகரிகம், பபிலோனிய நாகரிகம், சிந்துவெளி நாகரிகம், சீன நாகரிகம் என்பன.

எகிப்திய நாகரிகம் நைல் நதி பள்ளத்தாக்கிலும், பபிலோனிய நாகரிகம் யூபிரேட்டஸ், தைகிரிஸ் நதிகளின் கரையோரங்களிலும், சிந்துவெளி நாகரிகம் சிந்து நதி தீரத்திலும், சீன நாகரிகம் குவாங்கோ நதிச் சமவெளியிலும் தோற்றம் பெற்றன.



சுமேரியரின் களிமண் ஏடு

அண்டத்தின் மிக நீண்ட நதியான நைல் நதி ஆபிரிக்கக் கண்டத்தில் உருவாகி சகாரா பாலைவனத்தை ஊடுருவிச் சென்று வட திசையில் மத்தியதரைக் கடலில் வீழ்கிறது.

அது ஆண்டுதோறும் கரைபுரண்டு மேவிப் பாய்ந்து இரு மருங்கிலும் உள்ள பரந்த நிலங்களில் வண்டல்களைச் சேர்ப்பதால் நிலமானது மென்மேலும் செழுமைபெற வாய்ப்பாயிற்று. ஆதலால் அங்கு ஆற்றங்கரை குடியேற்றம் பல்கிப்பெருகி எகிப்திய நாகரிகம் முளைவிட்டு, கிளைவிட்டு, களை கட்டி வளர்ந்தது.

ஆதிகாலத்தில் உணவுக்காக காடு மேவிடன்று கால்கடுக்க நாடோடிகளாய் அலைந்த மக்கள் தம் அன்றாட உணவுத்தேவையைப் போக்கிக்கொள்ள தானியம் விளைவிக்கவும், ஓரிடத்தில் தங்கி நிரந்தரமாக வாழவும் அதன் பொருட்டு ஓய்வாகச் சிந்திக்கவும், ஒய்யாரமாய்ச் சீர்திருந்தவும் நதியோரங்களே தாவாரமாக அமைந்து கொண்டன.

பிரபல ஆங்கில நாடகாசிரியரான சேக்ஸ்பியர் எகிப்தியனை 'ஜிப்சி' என்றுதான் பெயர் குறிப்பிட்டுள்ளார். ஆங்கில மொழியில் 'ஜிப்சி' என்றால் 'நாடோடி' என்று பொருள்.

ஈஜிப்ற் என்ற நாட்டுப் பெயர் எகிப்து என தமிழ் மயப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வந்தமை யாவரும் அறிந்ததே. அவ்வாறே ஈஜிப்சியன் எகிப்தியன் என்றானது.

பழைய ஏற்பாட்டு (ஓல்ட் ரெஸ்ரமென்ற்) காலத்தில் ஆங்கில மொழி தோன்றியிருக்கவில்லையாகையால் ஜிப்சி என்ற ஆங்கிலப் பதம் யூதமொழியான ஹீப்ரு மொழியிலிருந்து தோன்றியிருத்தல் கூடும்.

**இவ்வாரம் இலக்கியப் பொழில் பகுதியில் 'பழந்தமிழர் சுமேரியர்' என்ற ஆக்கம் இடம்பெறுகிறது.**

பெயர்களின் தோற்றம் எவ்வாறாயினும், அவை காலச்சுழற்சியில் வேற்று மொழிகளில் வெவ்வேறாய் ஆயினும், ஏறத்தாழ சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் எகிப்திய நாகரிகம் உன்னத நிலையை அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகின் பழைய மொழிகளில் ஒன்றான ஹீப்ரு மொழியில் எழுதப்பெற்ற விவிலிய நூலில் (புனித பைபிள்) பபிலோன் என்ற பெயரைக் காணமுடியும்.

அதுவே யூபிரேட்டஸ் (ஐப்பிராந்து) தைகிரிஸ் (இசெக்கேல்) ஆகிய இருபெரும் நதிகள் பாயும் புராதன நாடான பபிலோனியா ஆகும்.

யூபிரேட்டஸ் நதிக்கரையில் அமைந்த பபிலோன் என்ற நகரின் பெயரிலிருந்தே, பபிலோனியா எனும் நாட்டுப் பெயர் உருவாயிற்று. பபிலோனியா பின்னர் மொசப்பொத்தேமியா என மாற்றம்பெற்று தற்போது ஈராக் என வழங்கப்படுகிறது. மொசப்பொத்தேமியா என்றால் ஆறுகளுக்குகிடையிலான தேசம் என்று பொருள்.

கி.மு.3500 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு முதன் முதல் குடியேறிய மக்கள் சுமேரியர் ஆவர். அங்குதான் பபிலோனிய நாகரிகம் கருவாகி, உருவாகி, விரிவாகி வளர்ந்தது. பபிலோன் நகரைக் கட்டியெழுப்பியவர்களும் அவர்கள்தான்.

முதன் முதல் எழுத்து வழக்கத்தை விருத்தி செய்தவர் சுமேரியர். அவர்கள் களிமண்ணைத் தட்டையாக்கி ஒருவித புல்நெட்டியினால் எழுதினர்.

அவ்விதம் எழுத்து எழுதும் வழக்கத்தை சுமேரியரிடமிருந்து கிரேக்கர் அறிந்தனரென்றும், பின்னர் கிரேக்கரிடமிருந்த உரோமர் எழுத்து எழுத அறிந்தனரென்றும், அதன்பின் உரோமரிடமிருந்து பிற ஐரோப்பியர் எழுத்து எழுதும் வழக்கத்தைக் கைக் கொண்டனரென்றும் பழைமை வழிக் கதையுண்டு.

## நாளும் பொழுதும்

உலகில் முதன் முதலாக நாளொன்றை 24 மணித்தியாலங்களாகவும், ஒரு மணித்தியாலத்தை அறுபது நிமிடங்களாகவும் வகுத்தவர் சுமேரியர்!

அதனை அடிப்படையாகக் கொண்டுதான் எகிப்தியர் 365 நாட்களை ஒரு ஆண்டாகக் கணித்தனர்.

சுமேரியரின் எழுத்துக்கள் ஒருவித கோலெழுத்தாகவும், சித்திர எழுத்துக்களாகவும் அமைந்தன. பூக்கள், பறவைகள் போன்ற இன்ன பிற வடிவங்களை அவர்கள் சித்திர எழுத்துக்களாகப் பயன்படுத்தினர்.

**இப்பூவுலகில் முதன்முதல் இரவையும் பகலையும் 'ஒரு நாள்' என வகுத்தவர் சுமேரியரே!**

எகிப்தியரின் சித்திர எழுத்துக்கள் சுமேரியரது சித்திர எழுத்துக்களின் சாயலில் அமைந்து கொண்டன.

அவ்வாறு முழுமானிட சமூகமும் பயனுறும் வண்ணம் சில முன்னோடியான சிந்தனை செயற்பாடுகளை உலகுக்கு அளித்த சுமேரியர்கள் யார்?

இது குறித்து முன்னாள் சரித்திரப் பேராசிரியரான டாக்டர் ஜி.சி.மென்டிஸ் தனது நூலில் சொல்லியிருப்பதாவது:–

"THE FIRST PEOPLE WHO LIVED THERE WERE CALLED SUMERIANS. SOME PEOPLE THINK THAT THE TAMILS OF CEYLON CAME FROM THE SUMERIANS" (G.C.MENDIS, 'OUR HERITAGE', PART I, COLOMBO, 1935, P.8)

பபிலோனியாவில் முதன் முதல் வாழ்ந்தவர்கள் சுமேரியர் என அழைக்கப்பட்டனரென்றும், சுமேரியர்களின் வழித்தோன்றல்களே இலங்கைத் தமிழர் எனச் சிலர் கருதுவதாகவும் டாக்டர் மென்டிஸ் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு இலங்கைத்தமிழரின் மூதாதையரே சுமேரியர் என்று சிலர் நினைப்பதாக டாக்டர் மென்டிஸ் கூறியிருப்பதிலிருந்து தமிழர் பபிலோனியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறினரென யாரும் கருதிவிட முடியுமா?

சுமேரியர் என்போர் இலங்கையின் பழந்தமிழர் என்பதுதான் ஆராய்ச்சியாளர்களின் கருத்து. பேராசிரியர் கல்கியும் அக்கருத்தையே சொல்லியுள்ளார்.

எந்தவொரு ஆய்வாளரும் எதையும் மிக நுட்பமாகவும், ஆழமாகவும் ஆராய்ந்த பின்னரே கருத்து வெளியிடுவர். அப்படிச் சில ஆராய்ச்சியாளர் தெரிவித்த கருத்தைத்தான் சிலர் நினைப்பதாக பேராசிரியர் மென்டிஸ் குறிப்பிட்டார் போலும்.

பபிலோனியாவிலும், அதற்கு அண்டைய பிரதேசங்களிலும் ஊர், ஈழம், காளி தேசம் போன்ற தமிழ்ப்பெயர்கள் உருமாறி இடம்பெற்றிருப்பதையும் பிற பண்பாட்டு ஆதாரங்களையும் கவனத்திற்கொண்டுதான் ஆராய்ச்சியாளர்கள் சுமேரியரை இலங்கைத் தமிழரென (இலங்கையிலிருந்து சென்றவரென) கருத்து வெளியிட்டனர்.

முற்காலத்தில் இலங்கைத் தீவில் 'காளி நாடு' இருந்திருக்கிறது. அதுவே இன்று காலி (காளி) என வழங்கப்படுகிறது.

சிந்துவெளியில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது கிடைக்கப்பெற்ற சிவப்பு, கறுப்பு மட்பாண்டங்கள் போன்றவை யாழ்.மாவட்டத்திலும் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

சுமேரியாவில் கிடைக்கப்பெற்ற பல பொருட்கள் சிந்துவெளியில் அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற பொருட்களை ஒத்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

..... பாரசீக கடற்கரையிலிருந்து அழிந்துபோன சுமேரு (SUMERIA) நாட்டிலும் பிறவிடங்களிலும் தமிழ்க்குலத்தார் வாழ்ந்து நாகரிகம் பரப்பினார்களென மேற்றிசை அறிஞர்கள் ஆராய்ச்சியால் கண்டு வெளியிட்டிருக்கின்றனர் என்றும் அந்நாடுகளிலெல்லாம் யாழ்க் கருவியும் போற்றப்பட்டது என்றும் முத்தமிழ் வித்தகரும் பேராசிரியருமான சுவாமி விபுலானந்த அடிகளார் தனது யாழ் நூலில் குறிப்பிட்டுள்ளார். (பக்.26)

இவையாவும் 5500 ஆண்டுகளுக்கு முந்திய காலம் முதலாக இலங்கைத்தீவில்தமிழர்கள்வாழ்ந்து வருவதைக் கோடிட்டுக் காண்பிக்கின்றன.

## கடற்கோள்

இன்றைய உலகில் 'இல்லாத' ஒரு கண்டம்தான் குமரிக்கண்டம் (லெமூரியா).

அப்பழங்கால குமரிக் கண்டம் பல்வேறு காலக்கட்டங்களில் கடற்கோள்களால் தாக்குண்டது.



கடற்கோள்கள் பற்றிய செய்தியை கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை உட்பட பல இலக்கியங்களிலிருந்து நாம் அறிய முடியும்.

'எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீந்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர் பஃறுளி மணலினும் பலவே'

கடற்கோள்கள் பல கட்டங்களில் பல மட்டங்களில் நடைபெற்றுள்ளன. அதனை மேற்கு நாட்டு அறிஞர்களும் கூறியுள்ளனர்.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் கிரேக்கரான தொலமி வரைந்த இலங்கையின் படத்திற்கும், கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இலங்கைத் தீவுக்கு வந்த சீன யாத்திரிகரான பாகியன் (FA-HIAN) காண்பிக்கும் இலங்கைத்தீவின் அமைப்பிற்கும் வேறுபாடு உண்டு.

ஸ்கந்த புராணம் இலங்கையைப் பெரிதாகக் காண்பிக்கிறது. மணிமேகலை காப்பியமும் நாக நாட்டை (இலங்கையை) பெரிதாகக் காண்பித்து, கடற்கோளைச் சொல்கிறது.

## புலம்பெயர்ந்தனர்!

கடற்கோள் ஏற்பட்ட ஒவ்வோர் காலகட்டங்களிலும் மாண்டவர் போக மீண்டவர் பலர் அல்லோலகல்லோலப்பட்டு

**இலக்கியப் பொழில்**

வடக்கு நோக்கிப் புலம்பெயரலாயினர். இலங்கைக்கு தென் இந்தியாவும் வடதிசைதான்.

அவ்வாறான கடற்கோள் காலத்தில் (இன்றைய) இலங்கையும் (இன்றைய) இந்தியாவும் கடல் நீரால் பிரிக்கப்பட்டிராத நிலையில் இலங்கையிலிருந்து பலர் வடதிசையை நோக்கிச் சென்றனர்.

கடற்கோளின் பயங்கரத்தை நேரில் அனுபவித்த மக்கள், பாரிய நிலப்பகுதி கடலாக மாறியதைக் கண்ணால் கண்ட மக்கள் தென்னிந்தியாவையும் ஒரு காலத்தில் கடல் கொள்ளலாமென்ற ஐயப்பாட்டில் மேலும் மேலும் வடக்கேயும் வடமேற்கேயும் சென்றனர்.

(மூன்றாம் கடற்கோளில் தென்னிந்தியா தாக்குண்டு காவிரிப்பூம் பட்டினம் (பூம்புகார்) கடல் வாய்ப்பட்டது குறிப்பிடத்தக்கது.)

**சொல்லேருழவன்**
**ம.க.அ.அந்தனிசில்**

அவ்வாறு வெகுதூரம் வடமேற்கே சென்று யூபிரேட்டஸ், தைகிரிஸ் நதியோரங்களில் முதன் முதல் குடியேறியவர்களே சுமேரியர்.

வெகுதொலைவில் அத்தகையதொரு குடியேற்றத்தை தோற்றுவித்த சுமேரியர் சிறு கூட்டமாகவல்லாமல் பெரும் கிளையாகவே சென்றிருக்க முடியும்.

கடற்கோள்களின் காலத்தில் மக்கள் அராபியாவிற்கும் குடிபெயர்ந்திருப்பதாக 'நமதுநாடு' நூல் கூறுவதிலிருந்து கடற்கோள்களால் உண்டான பெரும் பதற்றம் குமரிக்கண்ட மக்களை எவ்வளவு தூரத்திற்கு கொண்டு சென்றுள்ளது என்பது புலனாகும்.

ஆயிரமாயிரம் காத தூரம் கடந்தேறி யூபிரேட்டஸ், தைகிரிஸ் நதியோரங்களில் குடியேறிய சுமேரியர் வாய்க்கால்களை வெட்டி பயிர்ச்செய்கையில் ஈடுபடலாயினர். அது அவர்களுக்கு நல்ல பயனைத்தந்தது. பயிர்கள் செழித்து வளர பபிலோனியா வளம்கொழிக்கத் தொடங்கிற்று.

நதி தீரங்களில் பயிர்ச் செய்கை மூலம் தமது உணவுத் தேவையை நிரந்தரமாகப் பூர்த்தி செய்ய வழி கோலிய சுமேரியர் காலஓட்டத்தில் முன்னோடியான சிந்தனைகளிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடலாயினர்.

உலகத்தில் 'நாள்' என்பது அறியப்படாத அக்காலத்தில் பகலையும் இரவையும் ஒரு நாளெனக் கணித்தனர். அவ்வாறே முதன் முதல் எழுத்து எழுதும் வழக்கத்தைச் செய்தவர்களும் சுமேரியர்களே.

முதலில் ஒரு பொருளைக் குறித்து சித்திர

(14 ஆம் பக்கம் பார்க்க)

**வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**

# சிம்ரனின் கிச்சா வயசு பதினாறு



'கிச்சா வயது 16'
-சிம்ரன், மணிகண்டன்-

படிக்கிற காலத்தில் பள்ளிக்கூட ஆசிரியையிடம் இனம் புரியாத ஒரு அபிமானம் கொள்ளாத இளைஞர்கள் யாராவது இருப்பார்களா? என்று கேட்டால் இல்லை என்ற பதில்தான் அதிகம் வரும்! அந்த ஏரியாவைப் பிடித்துக் கொண்டு கலர்ஃபுல்லாக ஒரு கதை பண்ணி இந்த மாதம் ரிலீஸ்க்கும் தயாராக இருக்கிறார்கள்.

படத்துக்குப் பெயர்? கிச்சா வயது 16. பெயரைப் பார்த்தாலே கிளுகிளுப்பான படம் என்பது புரிகிறது.

கல்யாணம் பண்ணிக்கொண்டு காதலனோடு டெல்லியில் செட்டிலான அழகு தேவதை சிம்ரன் தான் ஹீரோயின். பத்தாம் வகுப்பு வரை உள்ள பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியை. அதே பள்ளியில் படிக்கிற மாணவன் மணிகண்டனுக்கு சிம்ரனைப் பார்த்தாலே பற்றிக் கொள்கிறது. நல்லாப் படிக்கிற மாணவனாச்சே என்று சிம்ரனும் சிரித்துப் பேச... தன்னை அவளும் லவ் பண்றான்னு மனசுக்குள் நினைத்துக்கொண்டு கனவு காண்பதுதான் கதை.

இதன் மத்தியில் சுஜிபாலான்னு இன்னொரு ஹீரோயின், மணிகண்டனை ஒருதலையாக லவ் பண்ற ஜாலியான பெண். பசங்களோடு சரிக்கு சமமா டீக்கடை பெஞ்சில் உட்கார்ந்து தம் அடிக்கிற அடாவடிப் பெண். மொத்தத்தில் பிஞ்சுல பழுத்த பார்ட்டி கருக்கான கதை இது.

கல்யாணத்துக்கப்புறம் நடிக்கமாட்டேன்னு சொல்லிட்டுப் போன சிம்ரனே கதை பிடிச்சுப் போய்த்தான் ஸார் நடிக்க வந்தாங்க. ரொம்ப கிளாமரான கேரக்டர். சிம்ரனைத் தவிர யார் நடிச்சிருந்தாலும் இந்தக் கேரக்டர் நிக்காது! என்று பாராட்டுப் பத்திரம் வாசிக்கும் ஸ்ரீதரன். கவலையாய்ச் சொன்ன இன்னொரு விஷயம் – நடிக்க ஒப்புக்கொண்ட பிறகு தனது காதல் கணவனையும் நடிக்க வச்சாத்தான் நான் நடிக்க வருவேன் என்று படம் தொடங்கிய பிறகு குண்டைத் தூக்கிப் போட, அவரது கணவர் தீபக் குக்காக ஒரு கேரக்டரை உருவாக்கி கதை கெட்டுப்போகாமல் நடிக்க வைத்திருக்கிறாராம்.

கிச்சா மணிகண்டன் அச்சச்சோ... ன்னு நாம் சொல்லும்படி கனவு காணறதுக்காக ரகசியாவையும் கதைக்குள் கொண்டுவந்திருக்கிறார்கள். ரெண்டு பாட்டுக்கு ரகளை பண்ணுகிறார் அதில் ஒன்று பூனை முடி மீசை வச்ச ஆணழகா.. என்கிட்ட காதல் சொல்ல வந்தாயோ? என்று போகிறது.

இந்தப் பாட்டுக்குத் தயாரிப்பாளரும் இயக்குனரும் சேர்ந்து பண்ணின கற்பனையின் அபாரம் பாடலில் அழகாகத் தெரிகிறது.

# எஸ்.ஜே.சூ

சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள
கள்வனின் காதலி படப்பிடிப்பில் இரு
ததும் ஹாய் என குதூகலத்துடன் வந்
பிளஃப் என்ற தலைப்பை மாற்றி
வேற்கத்தக்கது. நீங்கள் பயந்துதான் த
பேசிக்கொள்கிறார்களே?

ஆமாம். நான் பயந்துவிட்டேன் எனது ரசிகர்கள் நிம்மதியாக படம் பார்க்க முடியாமல் போய்விடுமோ என்று பயந்துவிட்டேன்.

நல்லதுக்காகப் பயப்படலாம், நல்லதுக்காக பொய் சொல்லலாம் என வள்ளுவரே சொல்லியிருக்கிறார்.

இந்த முடிவை முன்பே ஏன் எடுக்கவில்லை. பெயரை மாற்றவே மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்தது ஏன்?

என்னை மட்டும் பாதிப்பதாக இருந்தால் நான் தலைப்பை மாற்றி இருக்கமாட்டேன். காரணம் எனக்கு உயிர் மேல் ஆசை கிடையாது. ஆனால், எனது உயிரைவிட மேலாக மதிக்கும் சினிமாவை இது பாதிக்கும் என்பதால்தான் தலைப்பை மாற்றினேன். தலைப்பை மக்களே தீர்மானிக்க வேண்டும் என முடிவு செய்தேன். ஒரு போட்டியும் வைத்தேன். 210 பேர் 'அஆ' என்ற தலை
எழுதி அனுப்பினார்கள். அவர்களில் ஒ
யில் தேர்வு செய்யப்பட்டு அவருக்கு ரூ
கப்படும். அந்தப் பரிசை ஏ.ஆர்.ரஹ்மா

நியூ படத்துக்குப் பின் எஸ்.ஜே சூ
ஆபாசமாக இருக்கும் என்ற இமேஜ் உ
உங்களுக்குப் பாதகம்தானே?

மன்மத லீலை வந்தபோது பாலசந்

# தனுஷின் 'திருடன் பொலிஸ்'

செல்வராகவனின் கதை, திரைக்கதையில் தனுஷ் நடிக்கும் அடுத்த படம் 'திருடன் பொலிஸ்'. 'துள்ளுவதோ இளமை', 'காதல் கொண்டேன்' படங்களுக்குப் பின் கஸ்தூரி ராஜாவின் ஆர்.கே.புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் இப் படத்தில் தனுஷுக்கு ஜோடியாக மும்பையைச் சேர்ந்த புதுமுகம் ஒருவர் நடிக்கிறார். அதற்கான தேர்வு நடைபெற்று வருகிறது.

தனுஷின் அண்ணன் செல்வராகவன் கதை, திரைக்கதை, வசனம் எழுதுகிறார். யுவன்சங்கர்ராஜாவின் இசையில் ஜப்பானிலிருந்து சண்டைப் பயிற்சியாளர்கள் வரவழைக்கப்பட உள்ளனர். இப்படத்தின் பெரும்பாலான காட்சிகளை அவுஸ்திரேலியா, ரோம், லண்டனில் படமாக்கத் திட்டமிட்டுள்ளனர். இப்படத்திற்கு 8 கோடி ரூபா செலவிடப் படவுள்ளது.




சியான் விக்ரமுடைய பிறந்ததின விழா சென்னை எஸ்.எஸ். ராயல் மஹாலில் ஏப்ரல் மாத இறுதியில் நடைபெற்றது. இதில் பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும், ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர சைக்கிள்களும், உடல் ஊன முற்ற மாணவரின் மூன்றாண்டு படிப்புக்குத் தேவையான தொகை உள்ளிட்ட நல உதவிகளை வழங்கினார் விக்ரம்.

இந்த ஆண்டு அந்நியன் மட்டுமே வெளிவருகிறது. அடுத்த ஆண்டில் மூன்று படங்களை வெளியிட திட்டமிட்டிருக்கிறேன் என்றார். மீண்டும் தேசிய விருதுவாங்கவேண்டும் என்ற ஆசை அந்நியன் படத்தின் மூலம் நிறைவேறும் என்றார்.

# சினி பிட்ஸ்

ரஜினி, கமல் இருவரும் வருடத்திற்கு ஒரு படத்திலாவது நடிக்க வேண்டும் என்று உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார் இயக்குநர் பி.வாசு.

கனாக் கண்டேன் படத்தில் நடித்துவரும் கோபிகா சிம்பு நடிக்கும் தொட்டி ஜெயா படத்திலும் கதாநாயகியாக நடிக்கிறார். இதில் சிம்பு ரவுடியாகவும், அவரைக் காதலிக்கும் பெண்ணாக இவரும் நடித்துள்ளனர்.

சரத்குமார் நடிக்கும் 100 ஆவது படம் '1977'. இப்படத்தை இயக்குகிறார் விளம்பரப்பட இயக்குநர் தினேஷ். இவ் ஆண்டில்தான் இந்தியாவில் பல மாற்றங்கள் நடந்த ஆண்டாகக் கருதப் படுகிறது.

'சச்சின்' படத்தைத் தொடர்ந்து அடுத்து விஜய் நடிக்கும் படம் 'சிவகாசி'இதுவும் 'திருமலை', 'மதுர', 'திருப்பாச்சி' போல இந்தியாவில் உள்ள ஊரின் பெயரையே கொண்டுள்ளது.



'கள்வனின் காதலி'
-நயன்தாரா-

## மூன்று லட்சத்திலிருந்து இருபத்தைந்து லட்சங்களாக..

மலையாள நடிகையான நயன்தாரா தமிழில் ஹரியின் 'ஐயா' படத்தின் மூலம் அறிமுகமானபோது அவரது சம்பளம் மூன்று லட்சம் தானாம். அதனைத் தொடர்ந்து அவர் நடித்த சந்திரமுகி படத்தின் மூலம் பிரபலமாகியதனால் படவாய்ப்புக்கள் அதிகரித்து வருகிறது. இதனால் பணப் பெட்டியுடன் அவர் கால்ஷீட்டுக்கு நிறைய தயாரிப்பாளர்கள் காத்துக் கிடக்கின்றார்கள்.

இதனால் தனது சம்பளத்தை அதிகரித்து இருக்கிறார். அதாவது மூன்று லட்சத்தில் இருந்து இருபது லட்சமாக அதிகரித்துள்ளார். ஆனால் தெலுங்கில் இருந்து இருபத்து ஐந்து லட்சம் பேசி இப்போது அழைத்து வந்துள்ளார்கள். இனித் தமிழை விட்டு ஆந்திராவுக்கு தாவினாலும் தாவுவார்.

# ஸ்லிம்மாக, தெம்பாக சினேகா

'ஆயுதம்' படத்தில் நடித்தபோது சிரிப்பழகியின் எடை அறுபதிலும் அதிகமாம். அழகான வயிறுவேறு கொஞ்சம் சதையும் போட்டிருந்தது. படம் பார்த்த ரசிகர்கள் இது பற்றி வருந்தி எழுத, சினேகாவுக்கும் வருத்தமாம்.

மூன்றே மாதங்கள் கடுமையாக பயட்டில்எட்டுக்கிலோவரைகுறைத்து இப்போது 'சிக்'கென்று சினேகாவாகியிருக்கிறார். ''இப்போது என்னைப் பார்க்க திருப்தியாக இருக்கிறது. முதல் ஒரு மாதம் ரொம்பச் சிரமப்பட்டேன். பின்னர் பழகிவிட்டது'' என்றார்.

இவர் தற்போது சரவர சுப்பையாவின் 'ஏபிசிடி', சுந்தர் சியின் 'சின்னா', செல்வராகவனின் 'புதுப்பேட்டை' என சத்தான மூன்று படங்களில் நடித்துவருகிறார்.

# நதியா என்றால் சும்மாவா

கடந்த பதினைந்து வருடத்திற்கு முன்னர் உள்ள சினிமா உலகில் பிடித்தமானதும், அனைவருக்கும் விருப்பமானதுமாக திகழ்ந்த நாயகி நதியா. இவர் இப்போது அம்மா வேடங்களில் நடித்தாலும் இவரின் சம்பளம் மட்டும் சில முன்னணி கதாநாயகிகளைவிட அதிகமாம்.

தமிழில் அம்மா வேடம் ஏற்பதற்கு 15 லட்சம் வரை சம்பளம் வாங்கி ஹீரோயின்களையே வியக்க வைத்த நதியா தெலுங்கில் இதைவிட சம்பளம் அதிகம் வாங்குகிறாராம்.

அங்கே அவருக்கு 20 லட்சம்ரூபா வரை சம்பளம் கொடுக்கிறார்களாம். நதியா என்றால் சும்மாவா ஒரு காலத்தில் திரையுலகையே ஒரு கலக்குக் கலக்கியவர்.அல்லவா.

# விஜய் விரும்பும் பாடல்கள்

நடிகர் விஜய் அதிகமாக துள்ளல் இசைப் பாடல்களைத்தான் விரும்பி ரசிப்பாராம். தனது ரசனைக்கு ஏற்ப அமைந்ததுதான் அப்படிப்போடு, மச்சான் பேரு மதுர, நீ எந்த ஊரு நான் எந்த ஊரு, ஏய் வாடி வாடி வாடி, ஆகிய பாடல்கள் என்று கூறுகிறார்.

தெலுங்கின் குத்துப்பாடல்கள் தான் இவருக்கு அதிகம் பிடிக்குமாம். புதிதாக ஒரு கேசட் வாங்கினால்க் கூட முதலில் அதில் எத்தனை குத்துப் பாடல்கள் உண்டு என்றுதான் பார்ப்பாராம்.

அவரின் விருப்பப்படியே 'சச்சின்' படத்தில் தேவிஸ்ரீபிரசாத்தின் இசையில் பாடல்கள் சிறப்பாக அமைந்துள்ளது என்கிறார்.

# ஜே.சூர்யாவின் பரபரப்புப் பேட்டி

கம்பாக்கத்திலுள்ள ஓர் அலுவலகத்தில் படப்பிடிப்பில் இருந்தார். நம்மைப் பார்த் தூகலத்துடன் வந்தார் எஸ்.ஜே.சூர்யா.

தலைப்பை மாற்றிவிட்டீர்கள். இது வர கள் பயந்துதான் தலைப்பை மாற்றியதாக ர்களே?

பயந்துவிட்டேன் நிம்மதியாக படம் போய்விடுமோ டேன்.

பயப்படலாம், நல் சொல்லலாம் என லியிருக்கிறார்.

வ முன்பே ஏன் பயரை மாற்றவே பிடிவாதமாக

டும் பாதிப்பதாக லைப்பை மாற்றி காரணம் எனக்கு சை கிடையாது. பிரைவிட மேலாக வை இது பாதிக் தலைப்பை மாற் பை மக்களே தீர்மா என முடிவு செய் யும் வைத்தேன். ன்ற தலைப்பை ர்கள். அவர்களில் ஒருவர் குலுக்கல் முறை ப்பட்டு அவருக்கு ரூ 1 லட்சம் பரிசு வழங் ரிசை ஏ.ஆர்.ரஹ்மான் வழங்குவார்.

ப் பின் எஸ்.ஜே சூர்யா படமென்றாலே தும் என்ற இமேஜ் உருவாகியுள்ளது. இது கம்தானே?

வந்தபோது பாலசந்தரையும் விமர்சித்தார் கள். அதன் பின் அவர் சிறந்த இயக்குனராக மாறவில்லையா? கதைக்கு தேவையானபோது அப்படிப்பட்ட காட்சிகள் வைக்க வேண்டியிருக்கும். 'அஆ' வில் நல்ல கருத்துக்களும் இருக்கும்.

'அ ஆ' வில் சர்ச்சைக்குரிய விஷயங்கள் இருக்காது என நம்பலாமா?

நியூ அளவுக்கு இருக்காது. குஷி அளவுக்கு கிளாமர் இருக்கும். அதனால் இப்படத்தை குடும்பத்துடன் பார்க்கலாம்.



'அ ஆ' -எஸ்.ஜே.சூர்யா-

படத்தில் இடைவேளைக்குப் பின் நானும் நிலாவும் இரட்டை வேடத்தில் வருவோம்.

திடீரென மற்றவர் இயக்கத்தில் நடிக்கக் காரணம்?

நியூ படத்தின் விநியோகஸ்தர், என்னிடம் வந்து ஒரு படம் செய்ய வேண்டும் என்றார். நான் பிஸியாக இருப்பதால் நல்ல ஒரு டைரக்டரை அனுப்புங்கள் என்றேன். இயக்குனர் எழிலிடம் உதவியாளராக இருந்த தமிழ்வாணன் வந்தார். கதை பிடித்தது அதனால் கள்வனின் காதலி படத்தில் நடிக்கிறேன்.

அடுத்த படங்கள்?

சிம்புவை வைத்து ஒரு படம் இயக்குகிறேன். தாணு தயாரிப்பில் கதாசிரியர் ரத்னகுமார் இயக்கும் படத்தில் நடிக்கிறேன். அப்பச்சன் தயாரிப்பில் விஜய் நடிக்கும் படத்தை இயக்குகிறேன். அடுத்த ஆண்டு மீண்டும் விஜய்யை வைத்து ஒரு படம் செய்கிறேன்.

திருமணம் எப்போது?

இன்னும் ஒன்றரை ஆண்டுவரை பிஸி. ஒரு நாளைக்கு 2—3 மணி நேரம்தான் தூங்குகிறேன். கல்யாணம் செய்துகொண்டால் மனைவிக்காக நேரம் ஒதுக்க முடியாத நிலை ஏற்படும்.

# தமிழ், சிங்கள மொழிகள் சரளமாகப் பேசும் பூஜா!



'ஜித்தன்' -பூஜா-

அருகே உள்ள பூஜாவுக்கு சொந்த ஊர் இலங்கை. எனவே சிங்களத்திலிருந்து சீர் மிகு தமிழ் அத்துப்படி. இருந்தும் படவாய்ப்புகள் என்னவோ உன்னைப் புடி என்னைப் புடி நிலைமைதான். இவர் அறிமுகமான ஜே.ஜே.படம் மார்க்கட்டில் நிலைக்கவில்லை. பொறுத்துப் பார்த்த பூஜா, அடுத்த வாய்ப்பு வருவதற்குள் சிங்கள படங்கள் சிலவற்றில் நடிக்க ஒப்பந்தம் ஆகிவிட்டார்.

மீண்டும் பூஜாவை தமிழுக்கு கொண்டு வந்திருக்கிறது ராடன் டி.வி. இவர்தான் வெளிவரப்போகும் 'ஜித்தன்' படத்தில் நாயகி. சில பாடல்களைப் போட்டுக் கதாநாயகன் புதுமுகம் ரமேஷின் தோள்களில் துள்ளி விளையாடியது கிளி.

அருவியிலும், கடலிலும் நடத்திய உற்சாகக் குளியலில் ஜலதோஷம் பிடித்தது என்னவோ பார்வையாளர்களுக்குத்தான்.

இந்த ரமேஷ் யார் தெரியுமா 'ராம்' படத்தின் கதாநாயகன் ஜீவாவின் அண்ணன்.

ஆர்.பி.சௌத்திரியின் சூப்பர்குட் பிலிம்ஸ் வழங்கும் ராடன் டி.வியின் ஜித்தன் படத்தில் முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தும் காட்சியில் சரத்குமார் நடித்திருக்கிறார். இப்படத்திற்கு இசைஅமைத்திருக்கிறார் தேவாவின் வாரிசு ஸ்ரீகாந்தேவா.

இவரிடம் இளைய தளபதி விஜய் அடுத்து நடிக்க உள்ள 'சிவகாசி' படத்திற்கு நீங்கள் அமைத்துள்ள இசை மாதிரியே என் படத்திற்கும் பாட்டுப் போட்டுக் கொடுத்திடுங்க என்று ஸ்ரீகாந்த்திடம் கேட்டுக்கொண்டாராம் சரத்குமார்.

இதனைத் தொடர்ந்து ரமேஷ் — ஜீவா (அண்ணன், தம்பி) இணைந்து ஒரு படத்தில் நடிக்க உள்ளனர். இப்படத்தினை இயக்கப் போகிறவர் வேறு யாருமல்ல. இருவரின் தந்தையுமான ஆர்.பி. சௌத்ரிதான்.



# காதலிக்க நான் வரவில்லை

நான் சின்னப் பெண். என்னைப் ப்ரத்துடன் இணைத்து கிசுகிசு பரப்புவது வருத்தமாக இருக்கிறது. சினிமா வேண்டாம் என்றுதான் என் அப்பா சொன்னார். பிறகு நல்லா யோசிச்சு ஓ.கே சொன்னார். அவர் நம்பிக்கைக்கு மோசம் செய்கின்ற மாதிரி நடக்க மாட்டேன். சினிமாவுக்கு நான் நடிக்கத்தான் வந்திருக்கிறேன், காதலிப்பதற்கு அல்ல.

காதல் அனுபவம் எனக்கு கிடையாது. அந்த விடயத்தில் நான் சின்னப்பிள்ளை. காதல் படத்தில் சில காதல்க் காட்சிகளில் நடிச்சேன். டைரக்டர் சொல்லிக் கொடுத்துத்தான் அப்படிச் செய்தேன். அதைப் பார்த்து எனக்கு காதல் வந்திருக்கு என்று சந்தேகப்படுகிறார்கள்.

என் உடல் அமைப்புக்கு கவர்ச்சியாக நடித்தால் எடுபடாது.

கிளாமர் கேரக்டரும் எனக்குப் பொருந்தாது. எனவே கவர்ச்சியாக நடிக்கமாட்டேன். நல்ல கேரக்டர்களில் நடிச்சு ஷோபா, ராதிகா, ரேவதி மாதிரி பெயர் வாங்குவதுதான் என் லட்சியம் என்றார் காதல் நாயகி சாரி காதல் பட நாயகி சந்தியா.

...கா

...இப்போது ...திருப்தியாக ...ஒரு மாதம் ...ன். பின்னர் ...ர்.

...வர சுப்பை ...ந்தர் சியின் ...ாகவலீன் ...தான மூன்று ...நகிறார்.

...வர்

...ா உலகில் ... திகழ்ந்த ...டித்தாலும் ...ாவிட அதி


... சம்பளம் ...கில் இதை

...டுக்கிறார் ...புலகையே

...கள்

...ம் பிடிக்கு ...சட்வாங்கி ...அதில் எத் ...ள் உண்டு ...ம்.

...படியே 'சச் ...ஸ்ரீபிரசாத் ...கள் சிறப் ...ான்கிறார்.



# கமலின் லேட்டஸ்ட் பேட்டி

ஒருநாளைக்குப் பத்துமுறை பேட்டியளித்தாலும் அத்தனை முறையும் சுவாரஸ்யமாக பதிலளிக்க ஒரு சிலரால் மட்டுமே முடியும். கமல் அதில் ஒருவர். சமீபத்தில் அவர் அளித்த பேட்டி, மொத்தமாக இல்லாமல் துளித்துளியாக...

* மனிஷா கொய்ராலா வேடத்திற்கு முதலில் அணுகியது பிபாஷா. அவருக்கு அம்மாவாக விருப்பமில்லை. தபு அதிக சம்பளம் கேட்டார்.
* காமெடிப் படங்கள் செய்வது எளிது என்று நினைக்கிறார்கள். ஆனால் அதுதான் மிகவும் கடினம். தொடர்ந்து காமெடிப் படங்கள்வராததிற்கு இதுதான் காரணம்.
* தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிப்பதை நான் விரும்பவில்லை. செக்ஸையும்மதத்தையும் பொது இடங்களில் விவாதிக்கக்கூடாது.
* சட்டப்படி விவாகரத்து வாங்காமல் நானும் சரிகாவும் பிரிந்து வாழ்கிறோம்.
* கடந்த இரண்டு வருடங்கள் வலிமிகுந்தவை. அதிலிருந்து மீண்டுவர போராடிக்கொண்டிருக்கிறேன்.
* நான்தான் சிறந்த நடிகன் என்று ஒருபோதும் சொன்னதில்லை. ஆனால் நான் ஒரு சிறந்த ரசிகன். என் படங்களை என் ரசிகர்களுக்கு முன் நான் ரசிக்க வேண்டும்.
* இமேஜ்.. அதுபற்றி நான் கவலைப்படுவதில்லை.

# தருண் ரீமாவின் இவன் யாரோ

எம்.மணி வழங்கும் பிஃப்த் மீடியாஸ் பட நிறுவனத்தின் சார்பில் யு.எம். அருண் பாலாஜி தயாரிக்கும் முதல் படம் இவன் யாரோ. இப்படத்தில் தருண் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகிகளாக ரீமாசென், கஜாலா, ஃப்ளோரா ஆகியோர் நடிக்கின்றனர். முக்கிய கதாபாத்திரத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். இவர்களுடன் ஜெயச்சித்ரா மற்றும் முன்னணி நட்சத்திரங்கள் பலர் நடிக்கின்றனர்.

இளவரசியின் சுயம்வரத்திற்குப் பல நாடுகளிலிருந்தும் பெருந்தொகையானோர் வந்திருந்தனர். இளைஞர்கள் பட்டாளம் பல மொழிபெயர்ப்பாளர்களின் முன்னிலையில் நேர்முகத் தேர்வில் பங்கு கொண்டிருந்தனர். இவர்களிடம் காதல் பற்றியும், பெண்களைப்பற்றியும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர்கள் வழங்கிய பதில்கள் சில முகம் சுழிக்கும்படி காணப்பட்டபோதிலும் இளவரசி இவற்றைஎல்லாம் சகித்து புன்முறுவலுடன் காணப்பட்டார்.

வரிசையில் சாதாரணமாகவந்த தருண் இப்படி ஒரு தேவதையா எனக்கு மனைவி? என்று கற்பனையில் மிதக்க இளவரசி கேட்ட கேள்விகள் அவனது காதில் விழவில்லை. நிலை தடுமாறிய தருண் யாரும் எதிர்பாராத விதமாக பெற்றோர், உறவினர்கள், பத்திரிகையாளர்கள் முன்னிலையில் இளவரசியைக் கட்டிப்பிடித்து உதட்டுடன் உதடு பொருத்தி மிக அழுத்தமாக முத்தம் கொடுத்து விட்டு விலக, இளவரசி மட்டுமல்ல அனைவரும் அதிர்ச்சியுற்றனர்.

இளவரசி செய்வதறியாது அறைக்குச் சென்றுவிட, பாதுகாப்புப்படை தருணை பிடிக்க நெருங்க, ரீ.விக்காரர்கள் எதனை கவனிப்பதென திண்டாட, இளவரசியின் முறை மாப்பிள்ளை தன் துப்பாக்கியை எடுத்து தருணை குறிபார்க்க அந்த எதிர்ப்புக்களைச் சமாளித்து தப்பிச் சென்றார் தருண்.

இப்படிப் பரபரப்பான காட்சி 'இவன் யாரோ' படத்திற்காக மைசூரில் படமாக்கப்பட்டது. தருணாக தருணும், இளவரசியாக கஜாலாவும் நடித்தனர். இப்படத்தின் கதை, திரைக்கதை, ... இயக்குகிறார் சேகர் சூரி.

இசை தினா.



'இவன் யாரோ' -தருண், ரீமாசென்-

## 30 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

# தொடரும் தவிப்பு

**தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.**

**நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.**

தங்குவதற்கு இடமின்றி அவதிப்பட்ட நாட்களில் ஒருமுறை சுபா சுந்தரம் வீட்டில் தங்கியிருக்கிறார். இரவு நேரம் கடந்த நிலையில், அதிகம் பழக்கம் இல்லாதபோதும் வேறு வழியின்றி சென்று அவர்கள் வீட்டு கதவைத் தட்டியிருக்கிறார். மிகத் தொலைவில் இருந்த அவர்கள் வீட்டிற்கு விசாரித்து, தன் சுமைகளையும் தூக்கிக்கொண்டு போய் சேருவதற்குள் மிகவும் சோர்ந்துவிட்டார். இரவு உணவு வேறு அருந்தியிருக்கவில்லை. கதவைத் திறந்த சுந்தரத்தின் மனைவி அந்த நேரத்தில் அவரை எதிர்பார்க்கவில்லை என்பது முகத்திலேயே தெரிந்தது என்றபோதும் சோர்ந்து வந்திருந்த அற்புதத்தை இன்முகத்துடன் வரவேற்றார். உணவளிக்க அவர் முன்வந்தபோதும் அற்புதம் ஏனோ மறுத்துவிட்டார். சாப்பிடாதபோதும் சாப்பிட்டுவிட்டதாகப் பொய் சொல்லி படுத்துவிட்டார். சாதாரணமாகவே எந்த வீட்டிற்கும் திடீரெனச் சென்றால் உணவளிக்க என்ன சிரமம் இருக்கும் என்பது ஒரு குடும்பத் தலைவி என்ற முறையில் அவருக்குத் தெரியாதா என்ன? அதனாலேயே அவர் பெரும்பாலும் வேறு வழியின்றி சென்று தங்கும் இடங்களில் உணவருந்த மறுத்துவிடுவார். 'அதுவும் இது நம்மைப் போல பாதிக்கப்பட்டவர்கள் வீடு. கண்டிப்பாக பொருளாதார சிக்கல்கள் இருக்கும். அதற்கு நடுவே கூடுதலாக ஒருவருக்கு உணவு என்பது சிரமத்தைக் கொடுத்துவிடக் கூடாதே' என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. 'தங்குவதற்கு இடம்கொடுத்ததே பெரிய விசயம். இதில் அதைத் தாண்டியும் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது' என எண்ணினார்.

அன்று அங்கு தங்கியிருந்த போதுதான் சுந்தரத்தின் மனைவி நளினியிடம் பல விசயங்களும் பேசினார். அவர்கள் குடும்பச் சூழலும் புரிந்தது.

இவ்வழக்கில் தொடர்புப்படுத்தப் படுவதற்கு முன் நகரின் மிக முக்கிய பத்திரிகையாளர், புகைப்படக்காரர்களுள் அவரும் ஒருவர். அவர் புகைப்படக்கருவியில் சிக்காத தலைவர்களோ, திரையுலகினரோ இல்லை என்பது மிகைப்படுத்தப்பட்ட விசயமல்ல. நூற்றுக்கு நூறு உண்மை. நகரிலேயே பிரபலமானது அவரது 'சுபா ஸ்டூடியோ'. அதன் பெயரை தன் பெயரில் இணைத்துக் கொண்டு சுந்தரம் - சுபா சுந்தரம் ஆனார்.

ஒரு புகைப்படக்காரராக மட்டுமல்லாமல், தனிப்பட்ட முறையிலும் தமிழகத்தின் முக்கிய தலைவர்களிடத்தில் நல்லுறவு கொண்டிருந்தார். எனினும்... இந்த வழக்கில் இவர் மாட்டப்பட்ட பின் அவரது குடும்பம் துன்பப்பட்ட போது உதவ யாரும் முன்வரவில்லை. அச்சமயத்தில் அவரது இரு குழந்தைகளுமே சின்னஞ்சிறியவர்கள். அந்தக் கடினமான நேரத்தில் சுந்தரம் தன் மனைவியிடம் கோரியது ஒன்றுதான். 'நான் எப்படியும் விரைவில் வெளிவந்துவிடுவேன். அப்படி நான் வரும் வரையில், எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் ஸ்டூடியோவை மட்டும் காப்பாற்றிவிடு. மற்ற எதை இழந்தாலும் அதை மட்டும் இழந்துவிடாதே. எனக்கு நீ செய்யக்கூடிய பேருதவி அதுதான்' என்றார்.

கணவரிடம் கொடுத்த வாக்கை காப்பாற்ற அந்தப் பெண் பட்ட துன்பங்கள் ஏராளம். சின்னஞ்சிறிய குழந்தைகளை வைத்துக் கொண்டு எவ்வளவோ துன்பங்களுக்கு இடையேயும் அக்குடும்பத்தை நடத்திச் சென்று, பிள்ளைகளை ஓரளவு படிக்க வைத்து, மகனை அப்பாவைப்போலவே புகைப்பட நிபுணராக்கி, இன்று அவர் விடுதலையாகி வந்தபோது அவருக்குத் தொழில் வாரிசாக வளர்ந்து நிற்கும் மகனையும், பொத்தி காப்பாற்றி வந்த ஸ்டூடியோவையும் அவர் கையில் ஒப்படைத்தார்.

சுந்தரம் நன்றாய் வாழ்ந்த காலத்தில் வாங்கிய வீடும் சேர்த்து வைத்த பணமும் உதவியது. எனினும் வழக்கிற்கு செலவழித்ததிலேயே பணம் பெருமளவு கரைந்து போனது. வீட்டை விற்றுவிட்டால் இருப்பிடமும் பிரச்னையாகிவிடுமே என்ற அச்சத்தில், வீட்டை விற்காது சமாளித்தார். பொருளாதாரம் ஒருபுறம் பிரச்சினை என்றால் வேறு வகையிலும் பல பிரச்சினைகளை தனியொரு பெண்ணாக அவர் சமாளிக்க வேண்டி வந்தது.




சுந்தரம் கைதான புதிதில் நேரம் காலம் பார்க்காது வந்து கதவைத் தட்டும் காவல்துறையினரே ஒரு பெரும் பிரச்னையாகிப் போனது. அச்சத்துடனேயே வாழ்வைக் கழிக்க வேண்டிய நிலை. அதோடு பயந்து, நமக்கெதற்கு வம்பு, என்று விலகிப்போன உறவினர்களால் வேறு மன வருத்தங்கள்.

எல்லாவற்றையும் சமாளித்துநின்று, இன்று தூக்குக் கயிறு சென்று மீண்டுவந்த பின், மீண்டும் தான் இழந்த பெயரையும் புகழையும் மீட்டெடுக்கப் போராடிவரும் கணவருக்கும் துணை நிற்கிறார் அந்தப் பெண்,

அதைப்போலவே சிறையில் ஏற்பட்ட பழக்கத்தில் இரும்பொறையின் சகோதரி திருமணத்திற்கு அவரது ஊருக்குச் சென்றிருக்கிறார் அற்புதம்.

அறிவு கைதான பின் உறவினர்களும் நண்பர்களும் ஒதுங்கிவிட்ட நிலையில் மனம் வெறுத்து எந்த நல்ல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளாமல் தான் இருந்தார் அற்புதம். எனினும் நம்மைப்போல பாதிக்கப்பட்ட குடும்பம், அதோடு இரும்பொறையின் தாய் வேறு உடல்நலம் குன்றி மிகவும் மோசமான நிலையில் இருந்தார் என்பதனால் அத்திருமணத்திற்குச் சென்றார். அப்போதுதான் அந்தக் குடும்பத்துடன் பழகும் வாய்ப்பும் கிடைத்தது.

அத்திருமண நிகழ்வின்போது அற்புதத்திற்கு அன்பின் திருமணம் நினைவிற்கு வந்தது. இதைப்போலவே சகோதரன் கைதியாக சிறையில்வாட ஒருவித இறுக்கத்துடன் தானே அதுவும் நடந்தது.

பின்னர் இரும்பொறையின் தாய் அவர் சிறையில் இருந்த போதுதான் காலமானார். அந்தத் தாய் உடல் நலம் குன்றிய நிலையிலிருந்தபோதுசென்று காண ஆசைப்பட்டார். ஆனால் அனுமதி கிட்டவில்லை. ஆனால் அவர் இறந்தபிறகு அனுமதி கிடைத்தபோதும், செல்வதற்கு இரும்பொறை மறுத்துவிட்டார். உயிரோடு இருந்தபோது காணமுடியவில்லை. இறந்த பிறகு கண்டு என்ன பயன் என்று கூறிவிட்டார். அந்த சம்பவமும் அற்புதத்திற்கு நினைவு வந்தது.

கூட்டத்தில் பேசியவர்கள் இவர்களது இன்றைய நிலையையும் மக்களிடம் எடுத்துக் கூறினார்கள். இறுதியில் நிதி வசூல் நடந்தது. அறிவுமதி துண்டேந்தி மக்கள் நடுவேச் சென்று வசூலித்தார். மிக எளியவர்களும் மனமுவந்து அளித்த நிதியால் அவரது துண்டு நிரம்பியது.

இரவு வேலூரில் தங்கிவிட்டு மறுநாள், வாணியம்பாடி, திருப்பத்தூர் கூட்டங்கள் முடிந்து ஓசூர் சென்று அங்கு தங்கினர்.

அடுத்த நாள் காலை கிருஷ்ணகிரியில் கூட்டம். கிருஷ்ணகிரியில் அனைவருக்கும் மதிய உணவு அன்பு வீட்டில் ஏற்பாடாகி இருந்தது. கூட்டம் முடிந்து அன்பு வீட்டிற்கு அனைவரும் வந்து சேருவதற்கே நேரமாகிவிட்டிருந்தது. முழுமையான அசைவ உணவு. அனைவரும் ருசித்து ரசித்து உண்பதில் அன்புக்கு மிக மகிழ்ச்சி, எனினும் மனதின் ஓரத்தில் தம்பியின் நினைவு உறுத்திக் கொண்டே இருக்கத்தான் செய்தது.

'இந்த மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிக்குமாறு தம்பியும் இவர்களுடன் விடுதலையாகி இருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும்.

இதையும் விட சிறப்பாக, முழு மன நிறைவோடு அனைத்தையும் செய்திருக்கலாமே... அங்கு அவனை வருத்தத்தில் நிறுத்திவிட்டு நாம் மட்டும் அனைவருடனும் மகிழ்ச்சியாக இருக்கிறோமே...' நினைக்கும் போதே துக்கம் தொண்டையை அடைத்தது. கண் கலங்கியது. யாரும் பார்த்துவிடப் போகிறார்களே என்று அவசரமாக... வியர்வையை துடைப்பதுபோல முகத்தையும் கண்களையும் துடைத்துக் கொண்டாள்.

உள்ளே எழும்பும் வேதனையை மறைத்து சிரித்துப் பேசியபடியே உணவு பரிமாறினாள். நெடுமாறன் சைவ உணவு மட்டுமே அருந்துபவர். அதனால் அவருக்குத் தனியாக உணவு பரிமாறிக் கொண்டிருந்தபோது தொலைபேசி அழைத்தது. சென்னையிலிருந்த நெடுமாறனுக்கு அழைப்பு. வழக்கறிஞர் சந்திரசேகர்தான் பேசினார். வழக்கறிஞரிடமிருந்து அழைப்பு என்றதுமே அனைவரும் பரபரப்பாயினர், நெடுமாறன் பேசி முடிக்கும்வரை யாருமே பேசவில்லை. நிசப்தமாக இருந்தது.

'அப்படியா மகிழ்ச்சியான செய்திதான்...'

'எப்பதுவங்கும்... சரி... சரி...'

அவரது வார்த்தைகள் மிகுந்த எதிர்பார்ப்பை கிளப்பிவிட்டன.

அனைவரும் ஆவலுடன் அவர் முகத்தையே பார்த்தனர்.

பேசி முடித்து வைத்த நெடுமாறன் பெரிய புன்னகையோடு நிமிர்ந்தார்.

அற்புதத்திற்கு பொறுமை இல்லை.. 'என்னாங்கைய்யா...' அவசரமாகக் கேட்டார்.

'எல்லாம் நல்ல செய்திதான்மா... நம்ம மறு ஆய்வு மனுவை விசாரணைக்கு ஏத்துக்கிட்டாங்களாம். அதை விட முக்கியமான விசயம் என்னன்னா சாதாரணமா இந்த மாதிரி மறு ஆய்வு மனு மேல மீண்டும் வழக்கறிஞர்கள் வாதாட அனுமதிக்க மாட்டாங்க. ஆனா நம்ம இதுல அதுக்கும் அனுமதி கொடுத்திருக்காங்களாம். அதனால் நம்பிக்கை அதிகமாயிருக்கு பார்ப்போம்...'

அவர் சொல்லி முடித்தவுடன், உற்சாக மிகுதியில் அனைவரும் கைதட்டினர். மகிழ்ச்சி அனைவரையும் பற்றிக் கொண்டது. அன்புக்குள்ளும் இறுக்கம் மறைந்து உற்சாகம் எழும்பியது. அந்த உற்சாகத்திலும் அவள் கண்களில் நீர் திரண்டது.

அற்புதத்திற்கும் அப்படித்தான். அதே உற்சாகத்துடன் உண்டு முடித்து கிருஷ்ணகிரியைவிட்டு தர்மபுரிக்கு கிளம்பினர்.

தர்மபுரியில் மாலைக்கூட்டம் முடிந்து இரவுக் கூட்டம் சேலத்தில். அங்கு அனைவரும் நெகிழும் வண்ணம் ஒரு பெண் தன் கழுத்து தாலிப்பொட்டை நிதியாக அளித்தார்.

(தவிப்பு தொடரும்.....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

## பழந்தமிழர் சுமேரியர்....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்துக்களை எழுதிய அவர்கள் பின்னர் ஒலிக்கேற்ற குறிகளாக ஒருவித கோலெழுத்துக்களை உருவாக்கினர்.

### உருவ வழிபாடு!

சுமேரியர் உலோகங்களை உருக்கி ஆயுதங்கள் செய்தனர். களிமண்ணினால் கட்டடங்களைக் கட்டினர். பயிர்ச் செய்கையுடன் மட்டும் நின்றுவிடாமல் நெசவுத்தொழிலும் வாணிபமும் கூட செய்தனர்.

அதீத கடவுள் பக்தி கொண்டவர்களாகிய சுமேரியர் கட்டிய கோவில்கள் மிகப் பெரியவையாகும். தாம் செதுக்கிய வார்ப்புச்செய்த தெய்வச்சிலைகளை கோவில்களில் வைத்து வழிபட்டனர். அவர்களுள் சோதிடர்களும் இருந்தனர். நட்சத்திரங்களைக் கணித்து எதிர்கால விளைவுகளைக் கூறி வந்தனர்.

உலகின் ஏழு அதிசயங்களில் எகிப்தின் பிரமிட்டுகள் (கூர்கோபுரம்) அடங்குவது போல் பபிலோனியாவின் தொங்கு தோட்டங்களும் அடங்கும்.

பபிலோனியாவில் சுமேரியர் குடியேறிய பின் அவர்களிடையே மன்னர்கள் தோன்றினர். சிறந்த அரசாட்சி முறையை நிறுவினர். அங்கு தொடர்ச்சியாக மன்னராட்சி நிலவிவந்தது.

ஆரம்பத்தில் சுமேரியர் ஜெருசலேமிலிருந்தும் யூதேயாவிலிருந்தும் மூன்று முறைகளில் (3023 + 832 + 745) மொத்தம் 4600 யூதர்களைக் கைது செய்து சிறைக் குடிகளாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### உரோமருக்கு முன்...

பபிலோனிய மன்னர்களில் கி.மு.2100 ஆண்டுகளுக்கு முன் ஆட்சிபுரிந்த கமுராபி எனும் அரசனே சட்டங்களை உருவாக்கினான். அச்சட்டங்கள் மிகப் பழைமையானவை.

உரோமபுரிச் சக்கரவர்த்தி ஜஸ்டினியனால் இயற்றப்பட்ட சட்டங்கள் பபிலோனிய மன்னன் கமுராபியால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு 2600 ஆண்டுகள் பிற்பட்டவை. எனவே, உரோமருக்கு முன் சட்டம் இயற்றியவர்கள் சுமேரியராவர்.

பபிலோனியா செல்வச் செழிப்புடன் விளங்கியதையும் அங்கு கோட்டை கொத்தளங்கள் கட்டப்பட்டிருந்ததையும், மன்னராட்சி நிலவியதையும், உருவ வழிபாடு நிலவியதையும் விவிலிய நூலில் (பழைய ஏற்பாடு) காணமுடியும். (ஜெரேமியா அத்தியாயம் 24 – 52)

கி.மு.650 இல் பபிலோனியாவை அசீரியா கைப்பற்றிக் கொண்டது. கி.மு.606இல் சால்டியர் எனும் சாதியினர் அசீரியாவின் தலைநகரைக் கைப்பற்றியதால் பபிலோனியா சால்டியரின் ஆட்சிக்கு உட்பட்டுக் கொண்டது.

## நாட்டுக்கோர் நல்லதம்பி

கரு: பாணபத்திரன் உரு: சாமி



# காலில் ஏற்படும் கட்டி புற்றுநோய்க் குறியா?

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

**கேள்வி: ஆண். வயது 27. எனக்கு பாலுணர்வு அதிகமாக ஏற்படுகிறது. அடிக்கடி சுயஇன்பம் அனுபவிக்கின்றேன். இதனால் எனது எதிர்கால திருமணவாழ்க்கை பாதிக்கப்படுமா?**

பதில்: பாலுணர்வுகள் வளர் இளம்பிராயம் எனப்படும் 14 வயது தொடக்கம் 21 வயது வரை உள்ள ADOLESCENT பருவ காலத்தில் கிளர்ந்தெழுவது சாதாரணமான உடல் தொழிற்பாடாகும். இந்தப் பருவத்தில் சரியான பாலுணர்வு பற்றிய கல்வி, அறிவூட்டல், வழிகாட்டல் என்பவற்றினால் இப்படிக் கிளர்ந்தெழும் உணர்வுகள் சாதாரணமானவை, இவற்றால் எதுவித எதிர்கால பாதிப்புகளும் இல்லை என்பதைப் புரிந்துகொண்டு, கல்வி, சமூகநாட்டம் என்பவற்றில் கவனத்தைச் செலுத்துவதன் மூலம் – நம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும். மேற்கூறிய கல்வி, வழிகாட்டல், அறிவூட்டல் என்பவை அந்தப் பருவத்தே கிடைக்காவிடில், கிளர்ந்தெழும் பாலுணர்வுகள் இளைஞர் பருவத்திற்கும் தொடர்ந்து கொண்டிருக்கும். இது கூட ஓர் ஆபத்தான உடல் நலக்குறைவோ, மனோவியல் குறைபாடோ இல்லை. நமது உணர்வுகளுக்கு கடிவாளம் போட்டு அந்த உணர்வுகளுக்கு வடிகாலாக கல்வி, தொழில்துறைகள் SUBSTITUTE எனப்படும் பதிலீடு செய்யும் பயிற்சிகள் வளர் இளம்பிராயத்தில் கிடைக்காததால் ஏற்பட்ட பிரச்சினைதான் இது.

அதாவது, 21 வயதில் நிறைவடைய வேண்டிய வளர் இளம்பிராய மனோநிலை – உங்களுக்கு நீண்டுவிட்டது. இப்போதும் கூட ஒன்றும் கெட்டுவிடவில்லை. சோம்பேறித்தனம், குறிக்கோள் இல்லாத வாழ்வு, பொறுப்புகளை ஏற்காத வாழ்க்கைமுறை என்பவை – தீய எண்ணங்கள், காம எண்ணங்கள், உடல் சுகத்தை மட்டுமே எண்ணுகின்ற குணநலன்கள் ஆகியவற்றை உருவாக்கும். IDLE MIND IS DIRTY MIND என்பார்கள். எனவே, உங்கள் மனோநிலையை மாற்றுங்கள். கல்வி, உயர்கல்விகளில் நாட்டம் செலுத்துங்கள். உடல் களைக்க தேகப் பயிற்சி, செய்யுங்கள். உடல் களைத்தால் உணர்வுகள் குறையும். பொழுதுபோக்குக்கு நல்ல HOBBIES எனப்படும் முத்திரை சேகரித்தல், நூல் வாசித்தல், கைத்தொழில் செய்தல், வீட்டுத் தோட்டம், வீட்டுப்பிராணிகள் வளர்த்தல் என்று ஏதாவது நல்ல காரியங்களில் ஈடுபடுங்கள்.

கிளர்ச்சியூட்டும் நூல்கள் திரைப்படங்கள் என்பவற்றை தவிருங்கள். நல்ல நண்பர்களைச் சிநேகியுங்கள். சுயஇன்பம் தீங்கானதல்ல. ஆனால் தொடர்ந்து சுயஇன்பத்தில் ஈடுபடுதல், பாலுணர்வுபற்றிய மனோநிலையைப் பாதிக்கும். பாலுணர்வு என்பது உடல் – உள்ளம் இரண்டும் சம்பந்தப்பட்டது. சுயஇன்பம் தவறானது என்ற தப்பான எண்ணத்தோடு தொடர்ந்து ஈடுபடுவீர்களானால், உங்கள் மனதில் ஏற்படுகின்ற குற்றஉணர்வே சிலவேளை தாம்பத்திய வாழ்க்கையைப் பாதிக்கும். என்றாலும் சுய இன்பம் செய்வதற்கு ஏற்படும் உணர்வுகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுத்தீர்களென்றால் (வடிகால் என்று நான் குறிப்பிடுவது – கல்வி, தொழில், பொழுதுபோக்கு என்ற துறைகள்) – நீங்கள் கட்டாயம் நிறைந்த மனிதர் ஆவீர்கள்.

**கேள்வி: பெண். வயது 24. தொடையின் பின்புறத்தில் வெகுநாட்களாக ஒரு கட்டி இருந்தது. இந்த கட்டியால் இது வரை எதுவித தொந்தரவும் இருந்ததில்லை. இப்போது இந்த கட்டி கொஞ்சம் பெரிதாகி – வலிக்கிறது. தொடர்ந்து உட்கார்ந்து இருக்கும் போது அந்த இடம் வலிக்கிறது. இந்த கட்டி புற்றுநோயா? நான் என்ன செய்ய வேண்டும்.**

பதில்: நீங்கள் தந்துள்ள விபரங்களை பார்க்கும் போது, நிச்சயம் இது புற்று நோயாக இருக்க முடியாது. சருமத்தில் உள்ள எண்ணெய்ச்சுரப்பிகள் (SEBACEOUNS GLANDS) அடைபடும் போது சுரப்புகள் வெளியேறாமல் தடைப்பட்டு கட்டிகளாக பரிணாமிப்பதுண்டு. உட்காரும் போது ஏற்படும் உராய்வினால், அல்லது அழுத்தத்தினால் இவை தாக்கமுற்று, தொற்று ஏற்பட்டு, பெரிதாகி – வலியை ஏற்படுத்தலாம். இதேபோல்



சருமத்தின் கீழேயுள்ள கொழுப்பு கலங்கள், ஒருங்கு சேர்ந்து LIPOMA என்ற கொழுப்பு கட்டிகளை உருவாக்கலாம். இந்த கட்டிகளும் வளர்ந்து பெரிதாகி, உட்காரும் போது அழுத்தத்தினால் வலியை தரலாம். இந்த இரண்டு கட்டிகளும் அபாயகரமானவையல்ல. சிறிய சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்படக் கூடியவை. வெளிநோயாளர் பிரிவிலேயே இந்த சிகிச்சையை செய்து – சிகிச்சை முடிந்து ஒரு சில நிமிடங்களில் வீடு செல்ல முடியும். என்றாலும் ஒரு சத்திரசிகிச்சை நிபுணரின் ஆலோசனை பெறுவது விரும்பத்தக்கது.

**கேள்வி: வயது12. ஆண். எனக்கு மலவாசலில் பூச்சிக்கடி உண்டு. VERMOX 550mg பூச்சி மருந்து எடுத்தாலும் மூன்று மாதத்தில் திரும்பவும் இந்த தொந்தரவு வருகிறது. முற்றாக என்நோய் தீர வைத்தியம் கூறவும்.**

பதில்: மலவாயிலில் அரிக்கும் பூச்சிக்கடிக்கு – ENTEROBIUM VERMICULARIS அல்லது PINWORM அல்லது THREADWORM என்கின்ற ஒருவகை குடல் புழுவே காரணம். இந்தப் புழுக்கள் இரவு வேளையில் மலவாசலுக்கு வந்து முட்டைகளை இடுகின்றன. இந்த முட்டைகள்தான் மலவாசல் அரிப்புக்கு காரணம்.

மலவாசல் அரிக்கும் போது விரல்களால் சொறிந்து – அதே விரல்களால் உணவுப் பண்டங்களை உண்டாலோ, அல்லது இந்த குடல் புழு உள்ள ஒருவர் – கைகளை சுத்தமாக கழுவாமல் – சமையல் வேலைகளில் ஈடுபட்டாலோ – இந்த முட்டைகள் திரும்பவும் குடலுக்குள் சென்று புழுக்களாக விளைந்து தமது வாழ்க்கை வட்டத்தை தொடர்ந்து எடுத்து செல்கின்றன.

இது தவிர இந்த குடல் புழு தொற்றுள்ளவர்களின் படுக்கையில், படுக்கை விரிப்புகளில், உள்அங்கிகளில் இந்த முட்டைகள் இருந்து – மற்றவர்களுக்கு பரவும் அபாயமும் உள்ளது. எனவே ஒரே குடும்பத்தில் உள்ள அனைவருமே குடற்புழு மாத்திரைகளை ஒரே தினத்தில் எடுக்க வேண்டும். அதேபோல் 3மாதம் கழித்து இன்னொருவேளையும் அனைவரும் எடுக்க வேண்டும். இப்படி செய்தால் தான் REINFESTATION என்கின்ற திருப்பித் தொற்றும் வட்டத்தை அறுத்து புழுத்தொல்லையிலிருந்து விடுதலை கிட்டும்.

**கேள்வி: பெண்.வயது 17. உயர்தரப் பரீட்சைக்கு படித்துக் கொண்டிருக்கின்றேன். எனக்கு அடிக்கடி வாயினுள் புண் வரும். வந்தால் சாப்பிடமுடியாது. ஒரு ஐந்து நாட்களுக்காவது தாங்கமுடியாத வலி இருக்கும். ஒவ்வொருதரமும் புண் வந்ததும் மருந்து எடுத்து உபயோகித்தால் சரியாகி விடும். பின்னர் ஒரு மாதத்திலோ, இரண்டு மாதத்திலோ திரும்பவும் ஏற்படும். இதனால் நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். எனக்கு இந்தப் பிரச்சினை தீர ஆலோசனை கூறவும்.**

பதில்: வாயில் இப்படி அடிக்கடி ஏற்படும் புண்களை APTHOUS ULCER என அழைப்பார்கள். பொதுவாக சூட்டுப் பொக்களங்கள் என்றும் இவை அழைக்கப்படும். இது எப்படி, ஏன் ஏற்படுகிறது என்பது பற்றி சரியாக அறியப்படவில்லை. ஆனால் இவை பொக்களங்களாக ஏற்பட்டு ஓரிரு தினங்களில் பொக்களங்கள் உடைந்து புண்களாகி, வலி வேதனையுடன் இன்னொரு மூன்று நாட்கள் இருந்து தானாகவே மாறிவிடக் கூடியவை



பற்களில் சுகாதாரம் பேணாமை, மன அழுத்தம், மாதவிலக்கு ஏற்பட முன் வரக்கூடிய STRESS அல்லது PREMENSTRUAL SYNDROME இவற்றிற்கு காரணம் என்று அறியப்பட்டுள்ளது. பரீட்சைக்கு படிக்கும் மாணவர்களுக்கு இது அடிக்கடி ஏற்படுவதை அவதானித்துள்ளேன். விற்றமின் B வகைகளின் குறைபாட்டால் ஏற்படுவதாக சிலர் நம்புகின்றார்கள். காரமான, வினாகிரிசேர்த்த உணவுகளை அதிகம் உண்பதாலும் இவை ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. வாய்ப்புண் உண்டாகிய காலத்தில், விற்றமின் B, C மாத்திரைகள், டெற்றாசைக்கிளின் (TETRACYCLINE) வகை மருந்துகள், METRONIDAZOLE மாத்திரைகள் சிகிச்சைக்காக உபயோகிக்கப்படுகின்றன. வலிக்கு அஸ்பிரினை நீரில் கரைத்து வாய் கொப்புளித்தால் – சுகம் தெரியும். பற்சுகாதாரத்தையும் பேணவும்.

# 2 வருடம் கடந்த நிலையிலும் நீடிக்கும் மர்மம்

ஏழுமாதக் குழந்தை உட்பட ஐந்து பிள்ளைகளின் தாயாரின் கொலை தொடர்பான விசாரணைகளில் இன்றுவரை எதுவித முன்னேற்றமும் இல்லை.

இரண்டு வருடம் கடந்த நிலையிலும் மர்மம் நீடிக்கிறது.

2003 ஜனவரி 27ஆம் திகதி மன்னார் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த முகம்மது நியாஸ் நதீரா பேகம் (35) என்பவர் இனம் தெரியாதோரால் மர்மமான முறையில் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

சம்பவதினம் காலை சுமார் பதினொரு மணியளவில் தனது வீட்டுக்கு அருகில் இருக்கும் அவரது மரக்கறித் தோட்டத்தில் மரக்கறி பிடுங்குவதற்காக சென்ற சமயமே இவர் கொலை செய்யப்பட்டார்.

தோட்டத்துக்குச் சென்றவரைக்காணவில்லை என இவரது மற்றைய சகோதரி தேடிச் சென்ற போது இவர் அங்கு கொலை செய்யப்பட்டுக் கிடந்தது தெரியவந்தது.

சடலம் அரைகுறையாகப் புதைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மன்னார் பொலிஸாருக்கும் மாவட்ட நீதிமன்றத்துக்கும் அறிவிக்கப்பட்டதோடு பொலிஸில் கடமை புரியும் இறந்தவரது கணவருக்குத் தகவல் அனுப்பப்பட்டது.



நீதிமன்ற உத்தரவுப்படி பொலிஸார் மன்னார் மாவட்ட ஆதார வைத்தியசாலைக்கு உடலை எடுத்துச் சென்றனர். வைத்திய பரிசோதனையின் பின்பு உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் கொலை அப்பகுதியில் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது மட்டுமல்லாது, அந்த ஊர் மக்களிடையே பல்வேறுபட்ட சந்தேகங்களையும் ஏற்படுத்தி இருந்தது.

இந்தக் கொலை தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டும் அவர் மீது குற்றம் நிரூபிக்கப்படாத காரணத்தால், பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

கொலை செய்யப்பட்ட நதீரா பேகம் மன்னார், புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகக் கொண்டவர். 1990ஆம் ஆண்டு வன்செயலின் போது இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் தனது தாய், தந்தையுடன் இருந்துவிட்டு மீண்டும் 1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது சொந்த ஊரில் மீளக்குடியமர்ந்து வாழ்ந்து வந்தார்..

பொலிஸில் கடமையாற்றும் நியாஸ் என்பவரை இவர் காதல் திருமணம் செய்து கொண்டார். இரு வீட்டாரினதும் சம்மதத்துடன் 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி மன்னாரில் திருமணம் நடைபெற்றது.

இவரது கொலை மர்மம் துலங்கும், துலங்கும் என்று எதிர்பார்த்து காலம் கடந்து கொண்டிருக்கிறது.

இவரது கணவரும் குழந்தைகளும் இவரை இழந்த துயரினால் இன்னும் மனமுடைந்து காணப்படுகின்றனர்.

இந்த கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்த ஊர் மக்கள் மத்தியில் இன்னும் அச்சம் நிலவுகிறது.

எதுவித குற்றமும் புரியாத நஜீரா பேகம் போன்றவர்களின் கொலைகள் கண்டிக்கப்படவேண்டியவை. அதுமட்டும் அல்ல கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு நீதியின் முன்நிறுத்தப்பட வேண்டும்.

*-ஏ.எஸ்.எம்.ஜாவித்-*

## சிறார்களின் கைவண்ணம்


தே.பத்மசுசி, தரம் 10, மு/பாண்டியன் குளம் ம.வி


வே.சன்ஜீவன், கண்டிக்குளி சந்தி, விசுவமடு.


சதுருஜா, தரம் 4, கி.ச.பா.

### வேதாகமத்தைப் பற்றிய தகவல்கள்

1. வேதாகமத்தை மேலோட்டமாக வாசிப்பவனுடைய கிறிஸ்தவ வாழ்வு ஆழமற்றதாகவே இருக்கும்.

*ஜோன் பிளஞ்சார்ட்.*

2. வேதாகமத்தை ஆராய்ந்து படிப்பது பண்டிதர்களுக்கு மட்டுமானபணி அல்ல அது ஒவ்வொரு கிறிஸ்தவனதும் தலையாய கடமையாகும்.

*ஒஸ்கர் ஃபியூச்.*

3. முழுமையான வேதாகமத்தினாலேயே முழுமையான கிறிஸ்தவனை உருவாக்க முடியும்.

*எ.டபிள்யூ.டோசர்.*

4. வேதாகமம் நமக்குள் வரவேண்டுமென்றால் நாம் முதலில் வேதாகமத்திற்குள் செல்ல வேண்டும்.

*ரொபர்ட் ஹோரர்ன்.*

5. வேதவசனமெனும் முத்து நம் காதுகளில் தொங்கிக் கொண்டிருப்பதற்காக அல்ல, மாறாக இருதயங்களில் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளது.

*வில்லியம் ஜென்கின்.*

*கே.ரெஜினோல்ட்,*
*சாலோம் நகர், சிறுவர் இல்லம்.*

# இந்தப் பழம் புளிக்கும்



அந்த மலையடிவாரத்தில் திராட்சைக் கொடிகளில் கொத்துக் கொத்தாய் பழங்கள் தொங்கின. காட்டு நரிகள் அடிக்கடி வந்து பழங்களைத் தின்று காலி செய்தன! கொடிகளையும் சேதப்படுத்தின!

இதைக் கண்ட விவசாயிகள், தோட்டம் முழுவதும் பந்தல் கட்டினார்கள். திராட்சைக் கொடிகளை பந்தல் மீது படரவிட்டனர். அதனால், திராட்சைப் பழங்கள் பந்தலில் கொத்துக் கொத்தாய் தொங்கின!

இரவில் திருடித் தின்னவந்த நரி ஒன்று துள்ளித் துள்ளி திராட்சைப் பழங்களைக் கவ்வித் தின்ன முயன்றது. அதனுடைய குட்டி நரிகளுக்கும் வயிற்றுப்பசி அதிகமானது. தாய் நரி பலமுறை தாவித் தாவிக் குதித்தும் பயனில்லை! எனவே, குட்டி நரிகளைப் பார்த்து! "குட்டிகளா! பசி அதிகம் ஆயிட்டுதே! கவலைப்படாதீங்க! வேறு தோட்டத்தில் சென்று திராட்சைப் பழம் தின்னலாம்" என்றது!

"ஏன் அம்மா! இந்தப் பழத்தை தின்றால் என்ன?" என்று கேட்டது குட்டிநரி!

"சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்!" என்றது தாய்நரி.

"அம்மா விலங்குளில் தந்திரம் அதிகம் உள்ளது. நரிதான்! ஆனால் மானிடர்கள் கூட இதே கதையை ஆரம்ப வகுப்புகளில் கற்றுக் கொடுக்கிறார்கள்! இதனால் நமக்கு அவமானம் இல்லையா?" என்றது குட்டிநரி.

"கிட்டாதாயின் வெட்டென மற! வீணாக மேலும் மேலும் முயன்று தோல்வியடையாதே என்பதற்காகத்தான் 'சீ! சீ! இந்தப் பழம் புளிக்கும்' என்ற கதையைச் சொல்லித் தருகிறார்கள்" என்றது தாய் நரி.

"ஏன் கிட்டாது? முயன்றால் முடியாதது உண்டோ? என்பதை இப்போதே நான் நிரூபித்துக் காட்டுகிறேன்! பரம்பரை பரம்பரையாக இருந்த கதையை மாற்றுகிறேன். இந்தக்கால நரி புத்திசாலித்தனம் நிறைந்தது. புத்திவான் பலவான்!" என்று கூறிய குட்டி நரி, தன் கால்களால் பந்தல் கால்களைச் சுற்றிக் குழி பறித்தது! சடார்! என்று பந்தல் சரிந்தது! திராட்சைக் கொத்துக்கள் தரையில் வீழ்ந்தன! தாய் நரியும் குட்டி நரிகளும் ஆசை தீரத் திராட்சைப்பழங்களைத் தின்றன. எனவே எதற்கும் நொண்டிச் சாட்டுக்கூறி தட்டிக் கழிக்காது புத்திசாலித்தனத்துடன் கடுமையாக முயற்சித்தால் நிச்சயமாக வெற்றி வெற முடியும்.


## சுடர் ஒளியில் வாராந்தம்



கல்விச் சுடர்

5ஆம் தர புலமை பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் தேர்ச்சி பெற்ற பரீட்சகர்களால் தயாரிக்கப்பட்டவை.

வாராந்தம் புதன்கிழமைகளில் தவறாமல் பிரசுரமாகும்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!


### சிந்தனைத் துளிகள்

| | |
|---|---|
| அன்புகாட்டு | – ஆனால் அடிமை ஆகிவிடாதே. |
| இரக்கம்காட்டு | – ஆனால் ஏமாந்து விடதே. |
| பணிவாய் இரு | – ஆனால் கோழையாய் இராதே. |
| கண்டிப்பாய் இரு | – ஆனால் கோபப்படாதே. |
| சிக்கனமாய் இரு | – ஆனால் கஞ்சனாய் இராதே. |
| வீரனாய் இரு | – ஆனால் போக்கிரியாய் இராதே. |
| சுறுசுறுப்பாய் இரு | – ஆனால் பதட்டப்படாதே. |
| தர்மம் செய் | – ஆனால் ஆண்டியாகி விடாதே. |
| பொருளைத்தேடு | – ஆனால் பேராசைப் படாதே. |
| உழைப்பை நம்பு | – ஆனால் கடவுளை மறந்து விடாதே. |

*அ.அமலிகா, மு/இரணைப்பாலை, றோ.க.ம.வித்தியாலயம்.*

1908 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி சைபீரியப் பகுதியில் உள்ள துங்குஸ்கா என்ற இடத்தில் முப்பதாயிரம் தொன் எடையுள்ள பெரிய எரிகல் விழுந்ததில் அவ்விடம் பாரியதொரு பள்ளமாகி விட்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும் கல் விழுந்த அந்தப்பகுதி மனிதர்கள் குடியேறாத ஆற்றுப் பகுதியாக இருந்ததால் அந்த எரிகல் விழுந்த சமயம் அங்கே இருந்த பசுமை மிகு மரங்களும் "ரெயின்டீர்" என அழைக்கப்படும் மான் இனங்களும் தான் முற்றாக அழிந்து போய்விட்டதாக சில நூல்களில் கூறப்படுகின்றது.

*இ.பேபிநிஷாந்தினி*
*தரம் – 10, கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்.*

### உங்களுக்குத் தெரியுமா

1. கோள்களில் சுழற்சி வேறுபட்டுச் சுற்றும் கோள் எது தெரியுமா?

*யுரேனஸ்*

2. மஞ்சள் ஆறு ஓடும் நாடு எது?

*சீனா*

3. உலகிலேயே மிகப் பெரிய நூலகம் எங்கே உள்ளது?

*லெனின் நூலகம் மொஸ்கோவில்.*

4. உலகிலேயே முதன் முதலில் வருமான வரியை அறவிட்ட நாடு எது?

*பிரித்தானியா.*

5. உலகிலேயே முதன் முதலில் கண் மாற்று சிகிச்சை இடம் பெற்ற நாடு எது?

*அமெரிக்கா*

6. முதலாவது மின்மோட்டார் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

*மைக்கல் பரடே என்பவரால் 1821 இல் கண்டுபிடிக்கப்பட்டது*

7. உலகிலேயே மிகப் பழைமையான போர்க்கப்பலின் பெயர் என்ன?

*யு.எஸ்.எஸ்.காள்ஸ்டியூஷன்.*

*நே.சுவேந்திரா, தரம் – 9, ஒட்.மகா.வித்தியாலயம்.*

# பித்தன் பதில்கள்

*மீரா, திருகோணமலை.*

**கேள்வி:** அன்பின் பித்தா! பஸ்ஸில் ஆண்கள் தற்செயலாக முட்டி விட்டால் முறைத்துப் பார்க்கும் பெண்கள் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?



**பதில்:** தங்களைத் தாங்களே கற்புக்கரசிகளாக நினைத்துக் கொள்கிறார்கள் போலும்.

*து.சைலஜா, வாகரை.*

**கேள்வி:** பித்தா! கண்ணு! எனது செல்லமே! ஒரு ஜோக் தாரும் PLEASE?

**பதில்:** அவசரமாக வந்த பெண் ஒருத்தி வழியிலே வந்த ஓட்டோவை மறித்தாள். அருகே இருக்கும் பிரசவ ஆஸ்பத்திரி ஒன்றைக் குறிப்பிட்டு அங்கே போ என்று சொல்லிவிட்டு ஓட்டோவில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

ஓட்டோச் சாரதி வழமைபோல் மடக்கி – வெட்டி – சந்து பொந்துகளில் எல்லாம் புகுந்து கிளம்பி.... படுவேகமாக பிரசவ ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

ஓட்டோச் சாரதியின் ஓட்டத்தைப் பிடிக்காத பெண் சொன்னாள். ''மெதுவாகப்போ நான் அந்த பிரசவ ஆஸ்பத்தியில் வேலை செய்யும் நேர்ஸ்தான்''




*அ.அஜந்தன், முள்ளி வாய்க்கால் கிழக்கு.*

**கேள்வி:** பித்தா வணக்கம், ஸ்ரீலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சரான ரட்ண சிறி விக்கரமநாயக்க பொதுமக்களிடம் போருக்கு அனுமதி கேட்டுள்ளாரே! இது எப்படி இருக்கு?

**பதில்:** பொதுமக்கள் போருக்கு அனுமதி தரமாட்டார்கள் என்பதும் அவருக்கு தெரியும். அப்படித் தந்தாலும் தனக்கு போரை ஆரம்பிக்க கூடிய அதிகாரம் இல்லை என்பதும் அவருக்குத் தெரியும். அப்படி ஆரம்பித்தாலும் அதைத் தாங்கி தாக்குப் பிடிக்கக் கூடிய சக்தி தங்கள் அரசுக்கும் – தங்கள் படைகளுக்கும் இல்லை என்பதும் அவருக்குத் தெரியும். சும்மா... மேடையிலே ஏறினால் ஏதாவது பேசவேண்டுமே என்பதற்காக கண்டபடி பேசுவது அவரது இயல்பு... அவர் மேடையிலே மட்டுமல்ல சுபாவத்திலேயும் அப்படித்தான். எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற குணம் கொண்டவர்.

*செ.மனோகரன், ஆலடி உடுவில்.*

**கேள்வி:** மை டியர் பித்து ஐயா! தாங்கள் பால் கறப்பதில் பெரும் சூராதி சூரனாமே! அப்படியானால் எனக்கு சிறு அட்வைஸ் தரமுடியுமா? அதாவது கடந்த இருபது வருடகாலமாக எனது மாடு பால் கறக்கும்போது எந்த விதமான எதிர்ப்பும் இன்றி ஒத்துழைப்பு வழங்கி வந்தது. இப்போ கொஞ்சக் காலமாக பால் கறக்கும்போது கால்களால் அடித்து விரட்டுகிறது. ஒரு சமயம் நான் அந்த மாட்டினால் தாக்கப்பட்டு வேலிக்கு 15 யார் தூரத்துக்கு அப்பால் தூக்கிவீசப்பட்டு விட்டேன். இதற்குப் பிறகும் நான் பல முயற்சிகள் செய்து பார்த்தேன். ஒன்றும் பலனளிக்க வில்லை. எனவே எனது மதிப்புக்குரிய பித்துவே! தாங்கள் என்மீது கருணை காட்டி எனது நிலைமையைப் புரிந்து கொண்டு தகுந்த ஆலோசனை வழங்குமாறு கேட்கிறேன்?



**பதில்:** முதலில் நான் பால் கறப்பதில் சூராதி சூரன் என்று உமக்கு யார் சொன்னது? பால் குடிப்பதிலே கூட எனது சூரத்தனத்தை காட்டமுடியாது லொள்ளுப் பட்டுப்போயிருக்கிறேன்... என்னைப் போய்...

சரி இவ்வளவு மினக்கெட்டு கேட்டதற்காக எனது ஆலோசனை இது.... 20 வருடங்களாக ஒரே மாட்டிலேயே பால் கறப்பதாக குறிப்பிட்டிருக்கிறீர், எனவே மாடு நன்றாக கிழண்டிவிட்டதுபோல் தெரிகிறது. இனிமேல் கொஞ்சம் லொள்ளு பண்ணத்தான் செய்யும். எனவே, கிழட்டு மாட்டிலே, எடுத்தவுடன் மடியிலே கை வைக்கக்கூடாது. போனாமா... கறந்தோமா... வந்தோமா... என்றிருந்தால் அடித்து விரட்டத்தான் செய்யும்... முதலிலே மாட்டுக்கு பக்கத்திலே போய் அதன் முதுகை மெதுவாக தடவி... ஒரு சினேக பூர்வத்தை ஏற்படுத்த வேண்டும். பின்னர் மெதுவாக இறங்கி மடியிலே கைவைத்து கூச்சத்தை போக்கியபின் உமது காரியத்தை சாதித்து கொள்ள வேண்டும்.

*செ.மதிவதனி, சிலாபம்.*

**கேள்வி:** பித்தா! மோட்டார் வாகனங்கள் எல்லாம் H.P என்றும் HORSE POWER என்றும் கணக்கிடுகிறார்களே! அப்படியென்றால் என்ன?

**பதில்:** மோட்டார் வாகனங்களை மட்டுமல்ல மோட்டாரில் இயங்கும் எல்லாவற்றையும் குதிரைச்சக்தி அதாவது HORSE POWER என்ற அளவீட்டிலேயே அளவிடுகிறார்கள். அதாவது முன்னைய காலங்களில் மனிதன் முதலில் ஒருவனை ஒருவன் அடித்துக்கொல்லும் எதிரியாகவே இருந்தான். எனவே, தனது எதிரிகளிடமிருந்தும் கொடிய காட்டுவிலங்குகளிடமிருந்தும் தப்பிப்பதற்கு மனிதன் தனது கால்களையே நம்பியிருந்தான். ஆனால் எவ்வளவு விழுந்தடித்து ஓடினாலும் அவனால் எதிரிகளிடமிருந்து தப்புவது கஷ்டமாக இருந்தது. எனவே தான் தப்பி ஓடி வேகமாக ஓடக்கூடிய விலங்கு ஒன்றைத் தேடினான். பாவம் குதிரையின் கெட்டகாலம் அது மாட்டிக்கொண்டது.

பின்னர் சக்கரத்தைக் கண்டுபிடித்தான். ஆயினும் அந்த சக்கரங்களை இழுக்க குதிரை தேவைப்பட்டது. முன்னர் ஒரு குதிரை இழுத்த சக்கர வண்டிகளை பின்னர் அரசர்களின் தேவைகளுக்காக – போர் ரதங்களுக்காக – பல குதிரைகள் இழுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4 குதிரைகள் பூட்டிய ரதம் 4 குதிரைச் சக்தி கொண்ட ரதம் என்றும் 8 – 16 என்று குதிரைகள் பூட்டிய ரதம் எவ்வளவு குதிரைகள் பூட்டப்பட்டனவோ அந்தளவு குதிரை சக்திகள் கொண்ட ரதம் என்றும் அழைக்கப்பட்டது.

இப்போது அதிக குதிரைச் சக்தி கொண்ட ஆடம்பர வாகனங்களான பஜரோ, மொன்டாரியோ, பென்ஸ், வோல்வோ, வாகனங்களை வைத்திருப்பது எந்தளவு கௌரவமோ அதேபோல் அப்போதும் 8 – 16 குதிரைகளை கொண்ட ரதங்களை வைத்திருப்பது கௌரவமாக கருதப்பட்டது.

இதே குதிரைச் சக்தி பயன்பாடு பின்னர் மோட்டார் கண்டு பிடிக்கப்பட்ட பின்பும் அந்த மோட்டாரை அளவிட பயன்படுத்தப்பட்டது. அதாவது அந்த குறிப்பிட்ட மோட்டார் எத்தனை குதிரைகளை பூட்டி இழுத்தால் கிடைக்கும் சக்தியை பெற்றிருக்கிறதோ அந்த குதிரை சக்தியால் அழைக்கப்பட்டது. தற்போதைய மோட்டார்கள் 746 வாட்ஸ் மின்சாரத்தை பயன்படுத்தி இயங்கும் மோட்டாரை ஒரு குதிரை சக்தி (ஒரு HORSE POWER) என்று சொல்லுகிறார்கள்...... அப்பாடா......

*மீரா, திருகோணமலை.*

**கேள்வி:** கல்யாண வீடுகளில் நல்ல நேரம் முடிவதற்குள் தாலிகட்டு நிகழவேண்டும் என்பதில் பெரிசுகள் எல்லாம் வலு கவனமாக இருப்பது ஏன் பித்தா?

**பதில்:** தாலி கட்டியதன் பின்னர் அந்த ஆணின் மொத்த நல்ல நேரமும் முடிந்துவிடும். இனி அந்த நல்ல நேரம் அவருக்குத் திரும்பாது என்பதை தமது



அனுபவத்தின் மூலம் நன்கு உணர்ந்திருப்பதால் தான்.

*நிமல்ஷி, வெள்ளவத்தை.*

**கேள்வி:** அரைகுறை ஆடை அணிவதால் பெண்களுக்கு என்ன இலாபம் கிடைக்கிறது பித்தா?

**பதில்:** சும்மா சேலை அது இது என்று வேண்டுவதானால் பெருவாரி பணம் அல்லவா தேவைப்படும். ஒருமுளம் துண்டை வேண்டி ஆங்காங்கே வெட்டி விட்டுப் போட்டால் பிரச்சினை இல்லை அதுதான் அப்படிப்போல.

*குமார், மட்டக்களப்பு.*

**கேள்வி:** பித்தா! சித்திரைப்புத்தாண்டு படங்களில் எது முன்னணியில் உள்ளது?

**பதில்:** சூப்பஸ்டாரின் சந்திரமுகி எதிர் பார்த்தளவு ஓடவில்லை. மற்றைய படங்களும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை.

*ச.சந்திரா, முத்துமாரி நகர்.*

**கேள்வி:** பித்தா! காதலுக்கும் – நட்புக்கும் இடையில் என்ன வேறுபாடு?

**பதில்:** ஒரு இளைஞனும் – யுவதியும்



நேருக்கு நேராக நின்று கதைக்கும போது இருவரும் முகத்தைப் பார்த்துக் கதைத்தால் அது நட்பு, கழுத்துக்குக் கீழே அடிக்கடி பார்த்துக் கதைத்தால் அது காதல்.

# ஒருநாள் ஒரு கனவு.....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார். தாரிணியை எப்படியாவது என் வீட்டு மருமகளாக்கி சொத்துக்களுக்கு என் மகனையே வாரிசாக்கிவிடும் திட்டமும் எனக்கிருந்தது.

ஆனா, தாரிணி நாவேந்தன் என்பவனை நேசிப்பதாகவும் அவர்கள் அடிக்கடி சந்திப்பதாகவும் நேரில் கண்ட என் மகன் கூறியபோது என்னால் தாங்க முடியவில்லை. மதிஒளிவேறு கையாடிய பணம் முழுவதையும் உடனடியாக கையளிக்காவிட்டால் எங்களை பொலிஸிடம் கையளித்துவிடுவதாக எச்சரித்தார்.

நான் தீவிரமாக சிந்தித்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன். வேறு வழி எதுவும் என் அறிவுக்கு புலப்படவில்லை. ஏற்கனவே கொழும்பில் நானும் என் மகனும் வழமையாக தங்கும் ஹோட்டலில் அறை பதிவு செய்தோம். மகனை மட்டும் அனுப்பி மறைவாக யாருக்கும் தெரியாமல் தாரிணியை கண்காணிக்கச் சொன்னேன். நாவேந்தன் அடுத்தநாள் இராத்திரி மதிஒளியை சந்திக்கப்போறதா என் மகன் எனக்கு தகவல் அனுப்பினான்.

மதி ஒளி வீட்டு வேலைக்காரன் எனக்கு விசுவாசமானவன். அவன் மூலமா படுக்கையறை யன்னலொன்றை வெளியிலிருந்து உள்ளே போறமாதிரி செஞ்சிவைக்கச் சொன்னேன். நாவேந்தன் வந்து பேசிட்டு போனவுடனேயே யன்னல் வழியா உள்ளே நுழைஞ்சேன். அசதியா கண்ணை மூடிக்கிட்டிருந்த மதிஒளி முகத்துல தலையணையை வச்சி அவர் மூச்சை நிற்பாட்டினேன். ஏற்கனவே கொண்டு வந்திருந்த கையுறைகளை போட்டுக்கிட்டு அவர் கழுத்தை நெரித்தேன்.

பலகோடிக்கணக்கான சொத்துக்காகத்தான் நான் இந்த அடாத செயலைச் செய்தேன். ஆனா இவ்வளவு சீக்கிரமா நான் அகப்படுவேன்னு சத்தியமா நினைச்சி பார்க்கவேயில்லை. இப்பெல்லாம் தெய்வம் அன்றே கொல்லும்ன்னுறது உண்மைதான்...''

செழியன் வெற்றிப் புன்னகையுடன் இருவரையும் ஜீப்பில் ஏற்றினார்.

ஒருவாரம் சென்றது. நாவேந்தன் சோர்வுடன் படுக்கையிலிருந்தான். அப்போது மாலைநேரம் அவன் தாய் அவனுக்காக கோயிலுக்குப் போயிருந்தாள். அப்போது அவன் வீட்டு வாசலில் ஒரு ஓட்டோ வந்து நிற்கும் ஓசை கேட்கவே நாவேந்தன் மெதுவாக கட்டிலை விட்டு எழுந்தான் - வெளியே வந்தான் - அங்கே தாரிணி ஓட்டோவிலிருந்து இறங்கி வேகமாக நாவேந்தனை நோக்கி ஓடிவந்தாள். அவள் கண்களில் கண்ணீர் ஓடியது.

''நாவேந்தன்.. என்னை மன்னிச்சிடுங்க நான் அவசரப்பட்டு உங்க மேலே சந்தேகப் பட்டு... ஐயோ...''

நாவேந்தன் எதுவும் பேசாமல் உள்ளே சென்று நாற்காலியில் அமர்ந்தான்.

''நாவேந்தன் ஏன் எதுவும் பேசமாட்டேன் றீங்க...?''

''ம்... என்ன பேச சொல்லுறே.. எல்லாம் தான் முடிஞ்சி போச்சே. உன்னை உண்மையா காதலிச்சதுக்கு எனக்கு நல்ல தண்டனை கிடைச்சிச்சி. என் வேலை போயிடுச்சு. என் சகோதரியோட திருமணம் நின்றுபோச்சி. மொத்தத்துல இந்தப் பணக்கார காதலால எல்லாமே போயிடுச்சி....''

''ஐயோ அப்படி சொல்லாதீங்க. அப்பா இறந்த அதிர்ச்சியில அவசரப்பட்டுட்டேன். எனக்கு சொத்து சுகம் எதுவும் வேணாம். நீங்கதான் வேணும். உங்க அன்புதான் வேணும். என்னை கைவிட்டுடாதீங்க....''

''இல்ல தாரிணி எந்த சூழ்நிலையிலும் நீ என்னை சந்தேகப்பட்டிருக்கவே கூடாது. எந்த சந்தர்ப்பத்திலும் என்னை நீ நிச்சயமா சந்தேகப்பட்டேயிருக்கக்கூடாது.

உண்மையான காதலுக்கு உனக்கு அர்த்தம் தெரியுமா?

நம்பிக்கை என்கிற அஸ்திவாரத்துல உருவாகிறதுதான் அசைக்க முடியாத காதல். ஆனா எப்போ உன்னோட நம்பிக்கை ஆட்டம் கண்டிச்சோ அப்போதே எல்லாமே முடிஞ்சி போயிடுச்சி. இந்த உலகத்துல நல்லதையெல்லாம் விட்டுட்டு கெட்டத மட்டும் பிடிச்சிக்கிட்டது மாதிரி உன்னோட பணக்கார காதலால நான் எல்லாத்தையுமே இழந்துட்டு இப்ப தனிமரமா நிக்கிறேன். உன்னோட சொத்து சுகத்துக்காக நான் உன்னை விரும்பலை.

எல்லாருமே எனக்கு புத்தி சொன்னாங்க. வேணாம் இந்த பணக்கார காதல் என்று. ஆனா உன்னை நான் பரிபூரணமாக நம்பினேன். தூய்மையான என் அன்பை உனக்கு காணிக்கையாக்கினேன். ஆனா ஒரே வார்த்தையால நீ என் இதயத்துல இருந்து நிரந்தரமா தூக்கிவீசப்பட்டே. ஒரு நாள் ஒரு கனவு மாதிரி நீ என்னை சந்தேகப்பட்ட அந்த நிமிஷமே நம்ம காதல் கற்பூரமா கரைஞ்சி காணாமலேயே போயிடுச்சி....''

''ஐயோ நாவேந்தன் அந்த நிமிஷம் அவசரப்பட்டு உங்களை சந்தேகப்பட்டது உண்மைதான். ஆனா அதுக்காக என்ன தண்டனை வேணும் என்றாலும் எனக்கு குடுங்க. ஆனா தயவுசெஞ்சி என்னை வெறுத்து ஒதுக்கிடாதீங்க. ஏற்கனவே அப்பாவோட மறைவால வெந்துபோயிருக்கேன். நொந்துபோன மனசுக்கு ஆறுதல் தரவேண்டிய நீங்களே வெந்தபுண்ணில வேலைப் பாய்ச்சாதீங்க.''

''உன்னோட இழப்பு காலப்போக்கில் மறையக்கூடியது. ஆனா என்னோட இழப்புக்களை யாராலுமே ஈடுசெய்ய முடியாது. உன்னால என் மானம், மரியாதை, கௌரவம் எல்லாமே போயிடுச்சி. பணம் போனா சம்பாதிச்சிடலாம். ஆனா மானம் போனா போனதுதான். இது என்னோட இறுதியான முடிவு. நாம நல்ல நண்பர்களாகவே பிரிஞ்சிடுவோம்... நீயும் இதை ஒரு கெட்ட கனவா நினைச்சி மறந்துட்டு உனக்கேத்த பணக்காரனா – சந்தேகம் வராதவனா – பார்த்து மணம் முடிச்சிக்கிட்டு மகிழ்ச்சியாக இரு. தலைக்கு வந்தது தலைப்பாகையோட போனமாதிரி நானும் பழசையெல்லாம் தூக்கி எறிஞ்சிட்டு இனிப் புதுவாழ்க்கை வாழப்போறேன். நீ.. போகலாம்...''

தாரிணி மாலை மாலையாக கண்களிலிருந்து கண்ணீர் வடிய, வாடிய முகத்துடன் தேடிய உறவு முடிந்துபோன நிலையில் தள்ளாடியவாறு அந்த இடத்தைவிட்டு வெளியேறினாள். காதலித்தால் மட்டும் போதாது. காதலுக்கு பரஸ்பரம் நம்பிக்கை முக்கியம். நம்பிக்கை சிதைவடையும் போது காதல் உடைந்துவிடும்.

(யாவும் கற்பனை)

# மலையகத்தின் சுனாமியான மேல் கொத்மலைத் திட்டம்

சுனாமிப் பேரலை எப்படி இலங்கையில் ஓர் ஐக்கிய உணர்வை ஏற்படுத்தியதோ, அப்படியே இன்று மேல் கொத்மலைத் திட்டமும் மலையகத்தில் ஓர் ஐக்கிய உணர்வைத்தூண்டிவிட்டுள்ளது.

மலையகத்தைக் காலம் காலமாகக் காட்டிக் கொடுத்து ஆதாயம் தேடி வந்த மலையகத் தலைமைகள் மத்தியில் இப்புதிய உத்வேகம் ஒரு பெரிய கலக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

மேல்கொத்மலைத் திட்டம் மலையக அரசியல் வாதிகளின் பிச்சா பாத்திரமாகவே இதுவரை காலமும் இருந்து வந்தது என்பது மறைக்க முடியாத ஓர் உண்மை. ஆனால், அதுவே இப்பொழுது ஒரு பிரபலமாக மாறி விட்டது. இதை மலையக அரசியல்வாதிகள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

மலையகத்தில் கொத்மலைச் சிங்கம் என் வர்ணிக்கப்பட்டவர் மறைந்த காமினி திஸாநாயக்க. இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் மிக்க ஒரு தலைவர். இவருடைய காலத்திலேயே மேல் கொத்மலைத் திட்டத்துக்குப் பிள்ளையார் சுழிபோடப்பட்டது.

அப்போது ஓரணியில் இருந்த இ.தொ.க.தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானும், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனும் ஒரே குரலில் இதனை எதிர்த்தனர். அதனால் இந்த மேல் கொத்மலைத் திட்டம் கைவிடப்பட்டது.

ஆனால், இன்றைய நிலைமை என்ன? மேல் கொத்மலைத்திட்டம் மலையகத் தலைவர்களின் சூதாட்டத்துக்குப் பகடைக் காயாக்கப்பட்டு விட்டதுதான் வேதனை.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளராகவும், அமைச்சராகவும் இருந்த சந்திரசேகரன் அப்போது மேல் கொத்மலைத் திட்டத்தை ஆதரித்து வந்தார். ஆனால், மேல் கொத்மலைத் திட்டத்தால் பாதிக்கப்படும் அப்பிரதேச மக்களுக்கு நிவாரணம், வசதியான குடியிருப்பு, பிரதேச மக்களுக்கே வேலைவாய்ப்பு, இனவிகிதாசாரம் பாதிக்கப்படாமை எனப் பல்வேறு நிபந்தனைகளுடனேயே ஆதரவளித்தார்.

அன்று ஆட்சியில் இருந்த ஐ.தே.க அரசு இந்த நிபந்தனைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டது. அதற்கேற்ப வேலைத்திட்டங்களையும் தயாரித்திருந்தது.

ஆனால், அதே ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சராக இருந்த ஆறுமுகம் தொண்டமான் சிவப்புக் கொடியைத் தூக்கினார். அதாவது 'எனது உயிரைப் பணயம் வைத்தாவது மேல் கொத்மலைத் திட்டத்தை தடுப்பேன், எனது பிரேதத்தைக் கடந்துதான் மேல் கொத்மலைத்திட்டத்துக்கு அடிக்கல் வைக்க நேரிடும்' என வீரகர்ச்சனை புரிந்தார்.

பேச்சோடு அவர் நின்றுவிடவில்லை, முழுமலையகத்தையும் திரட்டினார். அஸ்கிரிய பீடாதிபதியையும் தூக்கிவந்து மலையகத்தில் ஓரங்க நாடகம் ஒன்றை அரங்கேற்றினார்.

ஆறுமுகன் தொண்டமானின் மலையகப் பற்றும், மலையக மண்ணின் மீது அவர் கொண்ட பாசமும் தான் இவ்வாறு ஆக்ரோசத்துடன் போராட வைத்தது என அப்போது அனைத்து மலையகமும் அவருக்கு மாலைபோட்டு வரவேற்றது. அவருடைய துணிச்சலைப் பாராட்டியது.

ஆனால், இப்போது நடப்பது என்ன?

எல்லாம் தலைகீழ் – ஆளும்கட்சி ஜால்ரா அடிப்பதற்காக– ஓர் அமைச்சுப் பதவிக்காக – ஒரு நீர்வீழ்ச்சியை மூடச் சம்மதித்துவிட்டார்.

இதனால்தான் இத்தகையோருக்கு எதிராகத் திரண்டுவிட்டனர் மக்கள்.

கடந்தவாரம் அட்டனில் நடைபெற்ற மேல் கொத்மலை எதிர்பார்ப்பாளர்களின் ஆரம்ப மாநாடு மலையகத் தலைவர்களை ஆட்டம் காணச் செய்துவிட்டது.

தனிப்பட்ட அரசியல் விருப்பு வெறுப்புக்கள் இன்றி அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், புத்திஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், தொண்டர் நிறுவனங்கள் எல்லாம் ஒன்றுபட்டு நடத்திய பேரணி மலையகத்தில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திவிட்டது.

சிறிதும் சுயநல கலப்படமின்றி நடத்திய இந்த போராட்டம் அனைத்து மக்களினதும் பாராட்டைப் பெற்றுவிட்டது. இந்த மேல் கொத்மலைத்திட்டத்தை நிபந்தனைகளுடன் ஆதரித்து வந்த மலையக மக்கள் முன்னணி கூட நிபந்தனைகள் மீறப் பட்டதாகக் கூறி எதிர்க்க ஆரம்பித்து விட்டது.

ஆனாலும், இ.தொ.காவின் நிலைப்பாடு என்ன? அமைச்சரவைக்குள் கைதூக்கிவிட்டு வெளியே வந்து வேறு பேச்சுப் பேசுகிறது.

மேல் கொத்மலைத் திட்டத்துக்கு ஜப்பானிய அரசு பல ஆயிரம் கோடி டொலர்களை ஏற்கனவே கொட்டிக் கொடுத்துவிட்டது. துரித கெதியில் இதனை ஆரம்பிக்காவிட்டால் தாம் வழங்கிய உதவியை ரத்துச் செய்யப் போவதாக ஜப்பானிய அரசு கழுத்தைப் பிடிக்க ஆரம்பித்துவிட்டது.

ஐ.தே.க அரசுக்கோ அல்லது சந்திரிகா அரசுக்கோ ஜப்பான் நிதி வழங்கவில்லை. மேல் கொத்மலைத் திட்டத்துக்காகவே வழங்கியது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டியது பதவியில் இருக்கும் அரசாங்கம். அதுதான் ஒப்பந்தம்.

இப்போது இ.தொ.காவும், அரசாங்கமும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

மந்திரிப் பதவிக்காகக் கதையை மாற்றும் இ.தொ.காவை மலையக மக்கள் மிரட்டுகின்றனர். கைநீட்டி காசு வாங்கி விட்ட இலங்கை அரசை ஜப்பான் மிரட்டுகின்றது.

-இராசிகா-

இரண்டுக்கும் நடுவில் மேல் கொத்மலைத் திட்டம் மலையகத்தை அச்சுறுத்துகின்றது. எது எப்படியாக இருந்தாலும் சுனாமிப் பேரலை இலங்கையில் ஓர் ஐக்கிய உணர்வை ஏற்படுத்தியது. ஆனால், அங்கே அரசியல் சூறாவளி மக்களை அலைக்கழிக்க வைத்துவிட்டது.

இப்பொழுது மலையகத்தில் எழுந்துள்ள ஒற்றுமையும், உத்வேகமும் தொடருமா, நிலைத்து நிற்குமா, இந்த அரசியல் வாதிகள் சிதறடித்து விடுவார்களா?

மலையகமே விழித்துக் கொள்!

**மலையகக் கண்ணோட்டம்**

இரா. புத்திரசிகாமணி

# கணித பாடத்தை பங்கு போட்டதால் வந்ததே வம்பு

பாடசாலை விடுமுறை காலமாக இருந்தாலும் மேல்வகுப்பு மாணவர்கள் பாடசாலைகளில் கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டனர். ஆமாம் அன்றுதான் ஜீ.சி.ஈ சாதாரணதர பரீட்சை முடிவுகள் வெளிவந்தன.

இம்முறை வெளியான பரீட்சை முடிவுகள் இனிப்பு, புளிப்பு, கசப்பு, உறைப்பு என பல விதத்திலும் அமைந்திருந்தன.

சப்பிரகமுவ மாகாணத்தில் அந்தப் பாடசாலையின் பெறுபேறுகளைத்தான் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். வழமையாகவே நல்ல பெறுபேறுகளைத் தரும் அப்பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் பெற்றோரும் எதிர்பார்ப்புகளுடன் இருந்தனர்.

ஆனால் எல்லாம் எதிர்மாறாகவே அமைந்துவிட்டன. மாணவர்கள் மத்தியிலும் பெரிய ஏமாற்றம். மாணவ மாணவிகள் கூட்டம் கூட்டமாக நின்று இதைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தனர்.

விடயத்தைக் கேள்விப்பட்ட தணிகாசலம் அண்ணன் பாடசாலைக்கு விரைந்து சென்றார். பாடசாலை முகப்பிலேயே மாகாணக் கல்வி அதிகாரியும் எதிர்ப்பட்டார்.

''வணக்கம் சார்''

''வணக்கம், தணி அண்ணன் எப்படி சுகமாக இருக்கின்றீர்களா?''

''ஆமாம் சார்! நான் நல்ல சுகம். நீங்கள் எப்படி நல்ல சுகமாக இருக்கின்றீர்களா? உங்களைத்தான் காணவே முடியவில்லை!''

''என்ன செய்வது தணி அண்ணன்; பதவி உயர, உயர பொறுப்புகளும் அதிகரித்துவிட்டன. முன்பு போல் ஒரே இடத்தில் இருந்து செய்யக்கூடிய வேலையா என்ன?''

''உண்மை தாங்க சார். முன்பு ஒரு பாடசாலையைப் பற்றி அக்கறையுடன் செயற்பட்டீர்கள். இப்போ இப்பிரதேசத்தில் உள்ள எல்லாப் பாடசாலைகளையுமே கவனிக்கவேண்டுமே''


''என்ன பதவி உயர்வு கிடைத்தாலும் நம்மை வளர்த்துவிட்ட பாடசாலையை மறந்துவிட முடியுமா? அது சரி தணி அண்ணன் என்ன காலை நேரத்திலேயே பாடசாலைப் பக்கம்...?''

''இன்றைக்கு ரிசல்ட் வந்து இருக்கு இல்லீங்களா சேர்! ஆனால் நம்ப பாடசாலை ரிசல்ட் அவ்வளவு நல்லதா இல்லை என்று பேசிக் கொண்டார்கள். அதுதான் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று வந்தேன்''

''உண்மைதாங்க தணி அண்ணன். நானும் கேள்விப்பட்டேன். அதுதான் காலையிலேயே வந்து விவரம் தெரிந்து கொண்டேன்.''

''வேறு விடயமாக இருந்தால் வெற்றியும் தோல்வியும் சகஜம் என்று விட்டுவிடலாம். ஆனால் படிப்பு விடயத்தில் அப்படிவிட்டு விடமுடியாதே! பத்துப் பன்னிரெண்டு வருட உழைப்பு அல்லவா?''

''உண்மைதான் தணி அண்ணன் மாணவர்கள் இப்படி தோல்வி அடைந்த தற்கான காரணம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டாமா? அதைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் நானும் வந்தேன்.''



''அண்ணனுடைய ஆதங்கமும் ஆர்வமும் வரவேற்கத்தக்கதே நானும் இது விடயமாக ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் கதைத்தேன். அதில் இருந்து சில உண்மைகளையும் அறிய முடிந்தது''

''சார் தயவு செய்து நீங்கள் அறிந்த விவரங்களை கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களேன்!''

''உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது? நானே உங்களை அழைத்து இது பற்றிப்பேசத்தான் இருந்தேன். நல்ல வேளையாக நீங்களே வந்து விட்டீர்கள். நீங்கள்தானே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

''சார் சொல்றதும் சரிதான். யார் சுட்டாலும் பலகாரம் ருசியாக இருக்கவேண்டும். அதுமாதிரி நம்ம பாடசாலை ரிசல்ட்டும் நல்லதாக இருக்கவேண்டும் என்பது தான் என்னுடைய நோக்கம்.''

''உங்களுடைய நல்ல நோக்கம்தான் எல்லோருக்குமே தெரியுமே. இந்த முறை நடந்தது என்னவென்றால் டைம்டேபிளில் ஏற்பட்ட குழப்பம் தான் மாணவர்களையும் குழப்பி அடித்து விட்டதாம்.''

''என்ன சார் சொல்லுறீங்க டைம்டேபிள் குழப்பிவிட்டதா?''

''ஆமாம் தணி அண்ணன் இந்த பாடசாலையில் ஆரம்பம் முதலே கணித பாடத்தை ஒரே ஆசிரியர் அழகாகப்படிப்பித்து வந்தார். மாணவர்களும் அவரது நடையை நன்றாகப் பிடித்துக் கொண்டனர்.''

''அந்த சேர்தான் நல்ல ரிசல்ட்டுகளை வாங்கிக் கொடுத்தவர் ஆயிற்றே. இப்ப என்னங்க சார் நடந்துவிட்டது?''

''தணி அண்ணன்; கேள்விப்பட்டிருப்பீங்களே! இடையில் இடம் பெற்றதே வருடாந்த இடமாற்றம். அதனால் ஏற்பட்டது குழப்பமே. இங்கு என்ன நடந்தது தெரியுமா? அந்த ஆசிரியர்களுக்கும் இடம் கொடுக்கவேண்டும் என்ற ஆதங்கத்துடன் அதிபர் கணிதபாடத்தையும் பங்குபோட்டு கொடுத்துவிட்டாராம்.''

''என்னசார் இது மாணவர்களின் படிப்பைக் கூடவா பங்குபோட்டுக் கொடுக்கனும். அது மாணவர்களைத் திக்குமுக்காட வைத்து விட்டதுபோல.''

''உண்மைதான் தணி அண்ணன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழி, மாணவர்கள் பழக்கப்பட்டதோ ஒருவழி. திடீர் என்று இரண்டு மூன்று பேரை அதில் போட்டு குழப்பிவிட்டதா மாணவர்கள் அதுவும் இல்லை, இதுவும் இல்லை என்று அம்போவாகிவிட்டனர். பரீட்சையிலும் கோட்டை விட்டுவிட்டனர். அதுதான் நடந்த விபரீதம்.''

''சார் சொல்லறதும் சரிதான்; பாடசாலைகளில் அதிபர்களாக இருப்பவர்கள் பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி பரீட்சையின் பெறுபேறுகள் என்பனவற்றில் தான் அக்கறையாக இருக்கவேண்டுமே தவிர, அதைவிட்டுவிட்டு தனக்கு வேண்டிய ஆசிரியர்கள், வேண்டாத ஆசிரியர்கள் என்று பாடங்களைப் பங்குபோட்டுக் கொடுத்து விட்டால் பரீட்சை ரிசல்ட்டுகள் இப்படித்தான் காலை வாரி விட்டுவிடும்.''

''கணிதபாடம் மட்டும் அல்ல, எல்லாப் பாடங்களிலுமே ஆசிரியர்களின் அக்கறை, மாணவர்களின் ஆர்வம், படிப்பிக்கும் முறை என்பனவற்றை நுணுக்கமாகப் பரிசீலனை செய்த பின்னரே உயர் பகுப்புகளுக்கு டைம்டேபிள் தயாரிக்க வேண்டும் என்பது இந்த பாடசாலைக்கு ஏற்பட்ட வீழ்ச்சியின் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டு விட்டது. இனி மேலாவது பாடசாலை அதிபர்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு டைம்டேபிளைப் பாவிக்கக்கூடாது'' என்று கூறி கல்விப்பணிப்பாளர் விடைபெற்றார்.

# தமிழனின் சாதனை நாளுக்கு வயது ஐந்து



## ஆனையிறவு வெற்றியைக் கொண்டாடும் புலிகள்

உலகின் கவனம் அனைத்தையும் ஈர்த்து விடுதலைப்புலிகளின் உச்சக்கட்டப் போரிடும் ஆற்றலை வெளிப்படுத்திய தமிழீழ விடுதலைப்புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட 'ஓயாத அலைகள் – 3' நடவடிக்கை மூலம் தாக்கி அழிக்கப்பட்ட ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சியின் 5ஆம் ஆண்டு நிறைவு நாளும், தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை தமிழீழ விடுதலைப்புலிகளினால் முறியடிக்கப்பட்டதன் வெற்றி விழாவும் தமிழர் தாயகப்பகுதி எங்கும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டன.

இந்த வெற்றி விழா நாளையொட்டி பளைப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் படையணிகளுக்கிடையிலான விளையாட்டு மற்றும் கலை இலக்கியப் போட்டிகளும் கனரக ஆயுதம் தாங்கியமரதன் ஓட்டப்போட்டியும் நடைபெற்றன முக்கியஸ்தர்களும், பெருமளவிலான மக்களும் கலந்து கொண்டனர்.



*வெற்றியைக் கொண்டாடும் புலிகளின் தளபதிகள்*

வரலாற்றின் போக்கினைத் தீர்மானித்த புகழ்பெற்ற ஈழச்சமர்களின் வரிசையில் 'ஓயாத அலைகள் 3' இன் போது இடம்பெற்ற ஆனையிறவு மீட்புச்சமரும் இடம்பெற்றுவிட்டது.

1994ஆம் ஆண்டில் சமாதானம் பேசி ஆட்சிக்கதிரையைப் பிடித்த பொ.ஐ.மு. அரசு யாழ்.குடாநாட்டின் மீது போர்தொடுத்து 5 இலட்சம் தமிழ் மக்களை அகதிகளாக்கி அவலப்படுத்தியபின்பு, யாழ்குடாநாட்டின் வீழ்ச்சியுடன் புலிகள் அமைப்பு செயலிழந்துவிட்டது எனவும் காடுகளுக்குள் ஒருசிலரே ஒளிந்துள்ளதாகவும் புலிகளை விரைவில் தோற்கடித்து விடுவோம் எனவும் தீவிரமாகப் பிரசாரம் செய்தது.

வெளி உலகமும் இதை நம்பத் தலைப்பட்டது. இதைக் கருத்தில் கொண்ட புலிகள் பெருங்கடலோடு அமைந்திருந்த பாரிய முல்லைத்தீவு முகாமை தாக்கி கைப்பற்றி வெற்றிவாகை சூடி தமது குன்றாத போர்ப் பரிமாணத்தை வெளிக்காட்டி இருந்தனர்.

அதன் பின்னர் வன்னிப் பெருநிலப் பரப்பை எப்படியும் கைப்பற்றுவது என்ற நோக்கில் 'ஜயசிக்குறு' நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்ட அரசபடைகளுக்கு எதிராக இடம்பெற்ற புலிகளின் 'செய் அல்லது செத்துமடி' யை தொடர்ந்து 'ஓயாத அலைகள் –1', 'ஓயாத அலைகள் –2' இடம்பெற்றன. இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தது 'ஓயாத அலை – 3'இல் இடம்பெற்ற ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதல்.

## அன்றுமுதல் ஆனையிறவில் கண்வைத்த புலிகள்

புலிகள் மரபு வழிப் போரில் கவனம் செலுத்தத் தொடங்கிய நாளிலிருந்தே ஆனையிறவு, புலிகளின் முக்கியத்துவம் மிக்க ஒரு இலக்காக மாறியது. 1991ஆம் ஆண்டில் ஆனையிறவுத்தளம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை புலிகள் மேற்கொண்ட போதும் பெருமளவு போராளிகளின் இழப்புடன் தாக்குதல் தோல்வியிலேயே முடிவடைந்திருந்தது.

பின்னர் இடம்பெற்ற ஆனையிறவு மீதான சிறு, சிறு தாக்குதல்களின் போதும் ஊளவு நடவடிக்கைகளின் போதும் புலிகளின் உறுப்பினர்கள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.

அந்த உயரிய மாவீரர்களின் நினைவுகள் நெஞ்சை அழுத்த அன்று 2000 மார்ச் 26இல் மீண்டும் புலிகள் ஆனையிறவு நோக்கி நகர்ந்தனர். பல தடவைகள் தாக்கியும் தகர்க்க முடியாமல் போன கோட்டையை இம்முறை எப்படியும் பிடித்துவிடவேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு போராளியையும் பற்றிப் பிடித்திருந்தது.

## முதலாவது தாக்குதல் அணி பயணம்

வெற்றிலைக்கேணி கடற்கரையில் தளபதிகள், போராளிகள் கையசைத்து வழி அனுப்ப ஆரம்பத்தாக்குதலுக்கான அணி சிறுரக படகில் தனது பயணத்தை ஆரம்பித்தது.. கடற்புலிகளின் தளபதி சூசை, சொர்ணம், மற்றும் பல தளபதிகளும் இந்த அணியை அனுப்பிவைத்த போது ''கடலால் அனுப்புகிறோம் ஆனையிறவை வென்று தரையால் வாருங்கள்'' என்று கூறினர்.

இந்த வாசகத்தை தமது தாரக மந்திரமாக தமது நெஞ்சில் பதித்தபடி ஒவ்வொரு போராளியும் கடற்பரப்பில் பயணம் செய்தவாறு. ஓரளவு தூரத்திற்கு சென்றிருப்பார்கள்.

கடற் படையினர் இவர்களுடைய நகர்வை கண்டுவிட்டதற்கு ஆதாரமாக படையினரின் நிலைகளிலிருந்து கூவிப்புறப்பட்டன எறிகணைகள். புலிகளின் கலத்திற்கு அருகாமையில் இவை வீழ்ந்து வெடித்தபோதிலும் பதறாத புலிகளின் கடற்கலம் தனது இலக்கை நோக்கி வேகமாகச் சென்றது.

கடற்கரையெங்கும் படையினர் வீசிய பரா வெளிச்ச லைட்டுக்களால் கடற்பிராந்தியமே ஒளி வெள்ளமாகக் காணப்பட்டது. இது புலிகளை சற்று கிலி கொள்ளச் செய்தது. எனினும் முன்கூட்டியே குடாரப்பில் தரையிறங்கியிருந்த புலிகளின் இரகசிய அணியினர் காட்டிய சமிக்ஞை ஒலியை அடுத்து புலிகள் உஷாரடைந்தனர்.

குடாரப்பில் தரையிறங்கிய இடத்தின் வலப்புறத்தில் படையினரின் இரு காவலரண்கள் இருந்ததால் புலிகளின் நகர்வுகள் மிகக் கவனமாகவே மேற்கொள்ளப்பட்டன. குடாரப்பை அண்டிய கடுமையான மணற் பிரதேசத்தை ஒருவாறு கடந்த அணிகள் பருத்தித்துறை வீதியைக் கடந்து கண்டல் காட்டுக்குள் புகுந்து சிறு நீரேரியை கடக்கத் தொடங்கின.

சிறு நீரேரியில் மிக மோசமாகக் காணப்பட்ட சேற்றுக்குள்ளால் கடந்து சென்று இத்தாவிலில் காலடி எடுத்து வைத்து சில கணங்களோ ஆகியிருக்கும். படையினரின் ஆட்லறி ஏவுதளங்கள் இத்தாவிலில் தரையிறங்கிய புலிகளின் அணி மீது எறிகணை மழை பொழிந்தன.

எறிகணை மழையில் சிக்கித் தவித்து புலிகளின் அணி தடுமாறியவேளையில் ஆட்லறி ஏவுதளங்கள் திடீரெனப் பற்றி எரிவது புலிகளுக்குத் தெரிந்தது. ஆம் உயிர் கொடைப் போராளிகளான கரும்புலிகள் அந்த ஏவுதளத்தை தாக்கி அழித்துவிட்டனர் என்பது தெளிவாகப் புரிந்தது. உடனே அந்த சூழலைப் பயன்படுத்திதரை இறங்கிய அணிகள் வேகமாக முன்னேறத் தொடங்கின.

உடல் நன்கு களைத்து சோர்ந்து முடியாத நிலையிலும் மனோதிடத்தினால் ஆனையிறவைக் கைப்பற்றவேண்டும் என்ற நோக்கில் அவர்கள் விரைவாக முன்னேறிக் கொண்டிருந்தனர்.

## இத்தாவிலில் இடம்பெற்ற கடும் சமர்

கண்டி வீதியைத் தாண்டி அரசர் கேணிச் சந்தியில் ஒரு நிலையை அமைத்தாக வேண்டும். ஆனால் அதே இடத்தில் படையினரின் காவலரண் இருந்ததினால் குடாரப்பில் தரையிறக்கத்தோடு ஆரம்பமான ஆனையிறவு மீட்புச் சமரின் முதலாவது பாரிய சமர் இத்தாவிலில் தொடங்கியது. தொடர்ந்து போராடி இத்தாவிலில் தடம்பதித்து முன்னேறிய புலிகளுக்கான வழித்துணையை கடற்புலிகள் செய்தனர்.

கடற்புலிகள் கடலில் கடும்சமர் புரிந்தனர். கடற்படையினரின் பாரிய கடற்கலங்களுடன் தமது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டு ஆக்ரோஷமாக தாக்கினர். இவர்களின் தாக்குதல் திறனே இத்தாவில் ஊடாக ஆனையிறவுச் சமரை வெற்றி கொள்ள வழி கோலியது.

கரும்புலிகளின் ஆட்லறி தளத்தகர்ப்புடன் ஆரம்பமான தாக்குதல், வேம்பெரு கேணியில் தொடங்கிய சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையினரின் தாக்குதல், கடற்புலிகளின் வெற்றிலைக் கேணித் தாக்குதல் எனப் பல பரிமாணங்களில் ஆனையிறவுச் சமர் இடம்பெற்றது.

## ஒன்றாகக் குவிந்த ஒட்டுமொத்த அணிகள்

இத்தாவிலில் புலிகளின் முதல் அணி தடம் பதித்தமையை அடுத்து அனைத்து அணிகளும் வந்து குவியத் தொடங்கின. சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி, மாலதி படையணி, சோதியா படையணி, பொன்னம்பாள் கண்ணி வெடிப்பிரிவு, விக்ரர் கவச எதிர்ப்புப்பிரிவு, இம்ரான், பாண்டியன் குறி சூட்டாளர்கள், எறிகணை முன்னோக்குநர்கள், கிட்டு ஏவுகருவிப் படையணி, எல்லைப்படை என ஒட்டுமொத்த அணிகளும் களம்புகுந்து கொண்டன.

அனைத்து படையணிகளும் களத்தில் நின்று களப்பணிகளை முன்னெடுத்துக் கொண்டிருந்த போது தாம் ஓய்வில் இருப்பதுபோல் பாசாங்கு செய்தபடையினர் திடீரென புலிகள் மீது ஷெல் மழைபொழியத் தொடங்கினர். புலிகளது கிட்டு ஆட்லறி ஏவுதளங்கள் தூர இருந்து வீசிய ஷெல்களும் படையினரது ஷெல்களும் அருகருகே வீழ்ந்து வெடித்தபோது புலிகளுக்கு நிலமை புரிந்தது.

தாமும் படையினரும் கலந்துவிட்டது தெரியவே எதிர்ப்பட்ட படையினரை ஒவ்வொருவராக சுட்டுவீழ்த்தினர். படையினரின் செறிவு அதிகமாக இருந்ததால் பல நூற்றுக்கணக்கான படையினர் சூடுபட்டுக் கீழே வீழ்ந்தனர்.

2000மார்ச் பங்குனி 26இல் ஆரம்பித்த போரானது மிகுந்த உக்கிரத்துடன் புலிகள் ஆனையிறவு மண்ணில் கால் பதிக்கும் வரை கடுமையாக இடம்பெற்றது. ஆனையிறவின் நுழைவாயில்களில் அணிகள் கட்டம் கட்டமாக தாக்குதலை தொடுத்தன. இத்தாவில் பகுதியில் நிலை கொண்டிருந்த அணிகளை இருபதாயிரத்துக்கும் அதிகமான படைகள் சூழ்ந்துகொண்டன.



*வெற்றி விழாவில் இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியின் ஆரம்ப நிகழ்வின் போது*

## உக்கிரமான பேரில் உறுதி தளராத போராளிகள்

உள்ளிருந்து போராளிகள் மிகவும் உக்கிரமாக தாக்கிக் கொண்டிருந்தனர். இத்தாவிலில் அந்த முப்பது நாள்களும் பசி, தாகம், நித்திரை, களைப்பு எதையும் பொருட்படுத்தாது உடல் இயலாதுபோன நிலையிலும் எப்படியும் ஆனையிறவைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு வீரரும் களமாடிக்கொண்டிருந்தனர்.

அந்தக் களத்தில் வீழ்ந்த மாவீரனை தூக்கி அப்புறப்படுத்தக்கூட அவகாசம் கிடைக்காதபோதும் அவர்களுடைய மகத்தான கனவு நனவாக வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு போராளியையும் உத்வேகப் படுத்தியது.

அப்போது அங்கே வார்த்தைகளின் விவரிப்புக்குள் அடக்க முடியாத கொடூரயுத்தம் இடம்பெற்றது. பெரும் எண்ணிக்கையில் மூர்க்கமாக தாக்கும் படையினரை எதிர்த்து முறியடித்துக் கொண்டிருந்தனர் புலிகள். அன்று யாழ் மண்ணை படையினர் கைப்பற்றிய வேளை இடம்பெற்ற சமரில் ஒரு கட்டத்தில் விழுப்புண் அடைந்து உயிர் பிரியும் தறுவாயிலும் ''யாழ்ப்பாணத்தை மட்டும் விட்டுவிடாதையள்'' என்று கூறியவாறே மடிந்தான் ஒரு மாவீரன். இன்று ஆனையிறவு யாரிடமோ அவர்களிடமே யாழ்குடா நாடும் என்ற நிலையில் அந்த ஒப்பற்ற தியாகிகளின் உன்னத இலட்சியத்தை மட்டும் மனதில் கொண்டு மிகக் கடுமையாகப் போரிட்ட புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாது நிலைகுலைந்த படைகள் இத்தாவில் தளத்தைக் கைவிட்டு பின்வாங்கின.

இதை அடுத்து பரந்த பிரதேசத்தில் பல முனைகளில் பல அணிகளை நகர்த்தி ஒருங்கிணைந்த ஒரு செயற்திட்டத்தில் தீர்க்கமானதொரு சமரைத் தொடங்கி எதிரிப்படைகளை டிவிஷன்களாக தோற்கடித்தவாறே முன்னேறியபுலிகள் அசைக்க முடியாத கோட்டை என அரசால் வர்ணிக்கப்பட்டதும் 240 ஆண்டுகால ஆக்கிரமிப்புச் சின்னமாகக் காணப்பட்ட ஆனையிறவுக் கோட்டையை கைப்பற்றி தமது கொடியை பறக்கவிட்டனர் புலிகள்.

அதுதான் 22.04.2000 அந்தநாள் வரலாற்றின் சாதனை நாளாக சரித்திரத்தில் இடம் பிடித்துக் கொண்டது. யாழ்குடாவின் நுழைவாயிலில் நின்று புலிப்படைகள் கம்பீரமாகக் கர்ஜித்தன.

பலப்பரீட்சையின் மையமாக காணப்பட்ட ஆனையிறவு புலிகளிடம் வீழ்ந்ததால் இலங்கை அரசு ஆட்டம் கண்டது. ஆனையிறவுப் போரில் மடிந்த படையினரின் சடலங்களைக் கூட பொறுப்பேற்க மறுத்தது. அதைவிட ஆயிரக்கணக்கான படையினர் தப்பி ஓடி இருந்தனர். ஆனையிறவில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் கோடான கோடி பெறுமதியானவையாக இருந்தன.

யாழ்குடாநாட்டின் நுழைவாசலுக்குள்ளேயே போராளிகள் கால் பதித்து விட்ட நிலையில் தன்னை மீட்கப் பெரும்படை வருமா என்ற எதிர்பார்ப்புடன் இந்திய, அமெரிக்கா ஆகிய நாடுகளின் அவசர உதவிகளை நாடி யாழ்ப்பாணத்தை தக்க வைத்துக் கொண்டது இலங்கை அரசு.

ஒட்டுமொத்த உலகின் புருவங்களை உயர்த்திப் பார்க்க வைத்த இந்தச் சமர் விடுதலைப்புலிகளின் உச்சக்கட்டப் போரிடும் ஆற்றலை ஒப்பற்ற வீரத்தை உலகிற்குப் பறைசாற்றியது.

**தமிழரசன்**

உறுதியும், தீராத முயற்சியும், ஓர்மமுமாக நின்றுபெற்ற இந்த வெற்றித் திருநாளை ஆக்கிரமிப்பின் சிறகுகளை அறுத்தெறிந்த அந்த நாளின் ஐந்தாவது ஆண்டு நிறைவே தற்போது கொண்டாடப்பட்டுக்கொண்டிருக்கிறது. 5ஆண்டுகள் அல்ல ஐயாயிரம் ஆண்டுகள் ஆனாலும் தமிழ் மனங்களை விட்டு அகலாது ஒட்டியே இருக்கும் அந்த ஒப்பற்ற நாள் என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை.

# முஸ்லிம்கள் மீதான பேரினவாதிகளின் குற்றச்சாட்டு! அடக்கி ஒடுக்குவதற்கான ஆரம்ப முயற்சியா?

கிழக்கு மாகாணத்தில் பழம்பெரும் முஸ்லிம் பிரதேசமான பொத்துவில் பகுதியில் பேரினவாத சக்திகள் மேற்கொண்டு வருகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக அப்பிரதேச மக்கள் நடத்திவரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை மழுங்கடிக்கச் செய்யும் நோக்கில் பேரினவாதிகளால் சில சதி முயற்சிகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறான முயற்சிகள் பொத்துவில் பிரதேச மக்களை மட்டுமல்லாது இந்நாட்டில்



சோமவன்ச

வாழ்கின்ற அனைத்து முஸ்லிம்களையும் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கக்கூடும் என்கின்ற நியாயமான அச்சம் எழுந்துள்ளது.

கடந்த சில மாதங்களாக பொத்துவில் விவகாரம் தொடர்பில் இடம்பெற்று வருகின்ற சர்ச்சைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் முற்றுப்புள்ளி வைக்கவும், அமைதிச் சூழ்நிலையைத் தோற்றுவிக்கவும் முன்வராத பேரினவாத சக்திகள் அடக்கு முறையால் காரியம் சாதிக்க முற்பட்டிருக்கின்றன.

ஏனெனில், தம்பக்கம் நியாயம் இல்லாத சூழ்நிலையில் தாமே அநியாயம் செய்து கொண்டு சமரசப் பேச்சுக்களுக்குச் சென்று பயன் கிட்டப்போவதில்லை என்கின்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டதனாலேயே அவர்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தி ''செய்ய முடிந்ததையெல்லாம் செய்து முடித்துவிடுவோம்'' எனக் கங்கணங்கட்டிக் கொண்டு களமிறங்கியுள்ளனர்.

இப்பிரச்சினையை பொறுப்புவாய்ந்த அரசுகூட சட்ட வரம்புகளுக்கேற்ப கையாளத் தவறிவிட்டது. இந்த விவகாரத்தில் தலையிட்டு பௌத்த தேசியவாதிகளின் எதிர்ப்பினைச் சம்பாதித்துக் கொள்ள அரசு விரும்பவில்லை. அதனால்தான் பொத்துவில் பிரதேசத்தில் பேரினவாதிகள் மேற்கொண்டு வருகின்ற ஆக்கிரமிப்பு – அத்துமீறல் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு முயற்சிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### விகாரைகளாக மாறும் சிலைகள்.

அரசின் இவ்வாறான பலவீனத்தை நன்கு புரிந்துகொண்டுள்ள பேரினவாத சக்திகள், அதனை தமக்குச் சாதமாக்கிக்கொண்டு வேண்டியதையெல்லாம் செய்து வருகின்றனர். கடந்த சில மாதங்களாக பொத்துவில் முஸ்லிம் பிரதேசங்களில் நடப்பட்டு வந்த புத்தர் சிலைகள் பல தற்போது பௌத்த விகாரைகளாக விஸ்தரிப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அவற்றைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் எவ்வித அரசியல் பின்னணியும் இல்லாமல் அப்பகுதி மக்கள் ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். துண்டுப் பிரசுரங்களை வெளியிடல், போஸ்டர்கள் ஒட்டுதல், ஆர்ப்பாட்டங்களை நடத்துதல் போன்ற செயற்பாடுகள் நாட்டில் நாளாந்தம் நடைபெற்று வருகின்ற சர்வசாதாரண நிகழ்வுகளாகும்.

இவற்றை பொத்துவில் முஸ்லிம்கள் செய்யும்போது வேறு அர்த்தங்கள் கற்பித்து – நிலைமைகளை மேலும் சிக்கலாக்கவும், முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாகக் காட்டவும் பேரினவாத சக்திகள் திரைமறைவில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதன் ஒரு அங்கமாகவே பொத்துவில் குண்டுவெடிப்புச் சம்பவம் அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது பூர்வீக நிலங்கள் பேரினவாதிகளால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு வருவதை ஆட்சேபித்தும், அவற்றைத் தடுத்து நிறுத்தக் கோரி அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும், தமக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை வெளியுலகுக்கு எடுத்துச் சென்று சர்வதேச சமூகத்தினரின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் கடந்த ஆறாம் திகதி முஸ்லிம்கள் ஒன்று திரண்டு பொத்துவிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### வீண் பழி!

அதேவேளை மறுநாள் ஏழாம் திகதி பொத்துவில் நகரை அண்மித்த பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட புத்தர் சிலைக்கு அருகில் இரண்டு பாரிய குண்டுகள் வெடித்துள்ளன. இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற அதிபேரினவாதக் கட்சிகள் முஸ்லிம் சமூகத்தின் மீது விஷமப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

''முஸ்லிம் சமூகத்தில் தீவிரவாத அமைப்புகளும், ஜிஹாத், ஹமாஸ், அல்குவைதா போன்ற ஆயுதக் குழுக்களும் இயங்கி வருகின்றன'' என்று ஹெல உறுமயக் கட்சி செய்தி ஊடகங்களில் அறிக்கை வெளியிட்டுள்ளது. முஸ்லிம் ஆயுதக் குழுவினரே பொத்துவில் புத்தர் சிலை மீது குண்டுத்தாக்குதல் நடத்தியுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் ஹெல உறுமய தெரிவித்துள்ளது.


**-அஸ்லாம் எஸ்.மௌலானா-**

இவ்வாறான ஆயுதக் குழுக்களை ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸே வழிநடத்தி வருவதாகவும் ஹெல உறுமயக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

''இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும், மூலை முடுக்கிலும் புத்தர் சிலைகளை நிறுவவும், பௌத்த விகாரைகளைக் கட்டியெழுப்பவும் சிங்கள இனத்தவருக்கு உரிமை இருக்கிறது. அவற்றைத் தடுக்க முற்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.'' எனவும் ஹெல உறுமய உரத்துக் கூறியுள்ளது.

### படையினர் தாக்குதல்

அதேவேளை, குண்டுவெடிப்பு இடம் பெற்ற சூட்டோடு பொத்துவில் பிரதேசத்தில் அங்கும் இங்குமாக முஸ்லிம் மக்கள் விசேட அதிரடிப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். அதனால் முப்பதுக்கும் மேற்பட்டோர் கடும் காயங்களுக்குள்ளாகியிருக்கின்றனர். அப்பகுதியில் தொடர்ந்தும் முஸ்லிம்கள், படையினரால் தாக்கப்பட்டே வருகின்றனர். இதன்போது, அபே ரட்ட – எமது நாடு, அபே கம – எமது கிராமம். என்று படையினர் கர்ஜிக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது. படையினரின் இவ்வாறான கண்மூடித்தனமான தாக்குதல்களினால் பொத்துவில் பிரதேசத்தில் முஸ்லிம்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இளைஞர்களினதும், மாணவர்களினதும், மார்க்க அறிஞர்களினதும் சுதந்திர நடமாட்டங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



யுத்த காலத்தில் கூட அசம்பாவிதங்கள் எவையுமின்றி அமைதிச் சூழ்நிலையில் இருந்து வந்த இப்பிரதேசம் கடந்த சில வாரங்களாக கலவரங்கள் நிறைந்த பகுதியாக மாறியுள்ளது. இத்தனைக்கும் சூத்திரதாரிகளான ஜே.வி.பி.யினரும், ஹெல உறுமயக் காரர்களும் முஸ்லிம் சமூகத்தின் மீது ஒட்டுமொத்தமாகப் பழியைப் போடுவதற்கான சதி வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தமது தாய் மண்ணைக் காப்பாற்றிக் கொள்வதற்காக முஸ்லிம் மக்கள் ஜனநாயக ரீதியாக அமைதியான முறையில் நடத்திய ஆர்ப்பாட்டத்துடன் குண்டு வெடிப்புச் சம்பவத்தை

(21 ஆம் பக்கம் பார்க்க)

## சொற்சிலம்பம் போட்டி இல. 158

சொற்சிலம்பம் 158போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் மே 07ஆம் திகதி ஆகும். விடைகள் மே 15ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 22ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.156க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு – 14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 158

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | |
| 6 | | ■ | 7 | | ■ | | ■ |
| | ■ | 8 | | | 9 | ■ | 10 |
| 11 | | | | ■ | 12 | | |
| | ■ | | ■ | 13 | | ■ | |
| 14 | 15 | | 16 | | ■ | 17 | |
| 18 | | ■ | | ■ | 19 | | |
| | ■ | 20 | | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.156

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | 2 க | த் | 3 து | 4 வ | ம் | ■ | 5 ம |
| 6 து | தி | ■ | 7 வா | டி | ■ | 8 பா | தி |
| ர | ■ | 9 ப | ர | வு | 10 த | ல் | ■ |
| 11 க | 12 ப | ட | ம் | ■ | டி | ■ | 13 த |
| 14 வி | த | ம் | ■ | 15 அ | ம | ர | ன் |
| ■ | ற் | ■ | 16 ம | க | ன் | ■ | ன |
| 17 உ | ற | வி | ன | ன் | ■ | 18 க | ல |
| 19 கு | ம் | ■ | 20 து | ற | வ | ற | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.158

**இடமிருந்து வலம்**

1. புதிய பாப்பரசர் தமக்குத் தேர்ந்தெடுத்துள்ள பெயரின் தமிழ் வடிவம்
6.குளிர் காலத்தில் வருவது.
7.தாண்டிவா.
8.மேனி / தேகம்.
11. இந்திய தேசம்.
12. இந்த மான் மயிர் இழந்தால் உயிர் வாழாதாமே?.
13. சீர்கெட்ட நிலை.
14. ரகம் வகுத்துக் கொள்.
17. இலக்கம் / கணக்கில் முக்கியம்.
18. வாழ்.
19. சாப்பிட.
20. மூத்தவனில் சிறியவன்.

**மேலிருந்து கீழ்**

1. ஆபத்து சமயத்தில் உதவுபவன்.
2. இனிமையானது.
3. மருந்து / மருத்துவம்.
4. வழிப்பாதை / சுருக்கு.
5. பன்மைத் தன்மையைக் குறிப்பது.
8. அடிவயிறு
9. கீர்த்தி.
10. மூத்தவனில் மூத்தவன்.
13. கொடைவள்ளல் ஒருவன்.
15.மன்மதன் மனம் கவர்ந்தவள்.
16. வெளியாள் / வேற்றுவன்.
17. சிந்திக்க / நினைக்க.
19. சாப்பிடு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 155

1.வி.செல்வநாயகம்
சிவன்கோவில் வீதி,
புத்தூர்.
2. டிஜீர்த்தனா ஜெயானந்தராசா.
7ஆம் வட்டாரம், சிவநகர்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
3. திருமதி மலர் கனகசிங்கம்
141, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

1. தேனுஜா வாமதேவன்
இல.703,
யோகபுரம்.
2. சத்தியசீலன் விதூசா
குளவிசுட்டான்,
நெடுங்கேணி.
3. திருமதி ரபீக்கா முஹம்மது யூசுப் ஜான்
இலக்கம் 31, கல்லூரி வீதி,
திருகோணமலை.
4. செ.ரமணா
252, யூனியன்குளம், கோணாவில்,
கிளிநொச்சி.
5. சு.பாலமுரளிதரன்
மே/பா சு.சுவாமிநாதன்,
இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.
6. இளநிதி வரதராஜன்
இல.05, ''கஜலஷ்மி''
பிள்ளையார் கோயில் வீதி,
கல்லடி உப்போடை,
மட்டக்களப்பு.
7.எஸ்.வி.ஜெகநாதன்
18 2/5, கொலிங் வூட் பிளேஸ்,
கொழும்பு 06.
8. இ.ஆறுமுகம்
மே/பா த.இராசேந்திரம்,
தொட்டிலடி, சங்கானை.
9. க.கமலேஸ்வரன்
இல.192 , ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
10. பொ.பாலசுப்பிரமணியம்
10 C, கிறகோரி வீதி,
தெஹிவளை.

# ராசி பலன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 11இல் இருப்பது நல்லது. இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். பிரயாணவாய்ப்பு உண்டு. (2,7) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வாகன சுகம் உண்டு. தாய் நலம். சூரியன், புதன் ராசியில் சேர்ந்து இருப்பதால் கல்வியில் ஆர்வம் இருக்கும். அத்துடன் புதுப்புது எண்ணங்கள் உதயமாகும். (9,12)உரிய குரு 6இல் இருப்பதால் பிதாவுக்குக் கூடாது. சயன சுகம் இருக்காது. (10,11)உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். தொழிற்துறை முன்னேறும். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். குரு வழிபாடு செய்யின் தோசம் விலகும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 12இல் இருப்பது நல்லது. இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. தொடங்கும் காரியம் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. (2, 5) உரிய புதன் 12இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டமாட்டார்கள். நாலுக்குரிய சூரியன் 12இல் இருப்பது பலன் செய்யாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கு கூடாதபலன். (7,12) உரிய செவ்வாய் 10இல் இருப்பது நல்லது அல்ல. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். சயன சுகம் இருக்காது. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்காது. பிதாவுக்கு கூடாது. குருவின் இருப்பும் குருவின் பார்வையை ராசி பெறுவதும் நல்ல அம்சம். தோசம் விலகும். நல்ல பலன்கள் நடைபெறும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 11இல் இருப்பது நல்லது. மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் பரவாயில்லை. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாணவாய்ப்பு உண்டு. தாய்க்கும் நல்ல பலன் உண்டு. வாகன சுகம் உண்டு. இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10)உரிய குரு 4இல் கேதுவோடு கூடி இருப்பது தோசம். திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்காது. (8,9) உரிய சனி ராசியில் இருப்பது கூடாது. பிதாவுக்கு கூடாது. மற்றும் மன அமைதி பாதிக்கலாம். (5,12) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. குருவழிபாடு செய்யின் தோசம் விலகும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் கும்பம் முதல் மேடம் வரை சஞ்சரிப்பதால் வாரபிற்பகுதியில் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 10இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 10இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களுக்கும் கூடாது. (5, 10) உரிய செவ்வாய் 8இல் இருப்பது கூடாது. தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்திதராது. (7, 8) உரிய சனி 12இல் இருப்பது நல்லதல்ல. திருமணவாய்ப்பு இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 9இல் இருப்பது நல்ல தல்ல மேலும் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் பலன் செய்யாது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். ஆலய வழிபாடுகள் அமையலாம். (2,11) உரிய புதன் 9இல் பலன் செய்யாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் நன்மையில்லை. நண்பர்களுக்கும் கூடாது. (3,10) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது நல்லது. தொழிற்துறையில் முன்னேற்றம் உண்டு. இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 7இல் இருப்பது கூடாது. பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (6,7) உரிய சனி 11இல் இருப்பது விசேஷம். திருமணபலன் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. எதிரிகள் நண்பராகும் வாய்ப்பு உண்டு.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 8இல் இருப்பது கூடாது. இருப்பினும் 12க்குரிய சூரியனுடன் சேர்ந்து இருப்பது நல்லது. மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் பரவாயில்லை. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தொழிற்துறையில் முன்னேற்றம் உண்டு. சயன சுகம் உண்டு. (2,9) உரிய சுக்கிரன் 8இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4,7) உரிய குரு ராசியில் கேதுவோடு இருப்பது தோசம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (5,6) உரிய சனி 10இல் இருப்பது மத்திமபலன். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவிலகும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 7இல் இருப்பது கூடாது. மேலும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பதும் சரியில்லை. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். பூர்வீக சொத்துகள் சேதமாகலாம். (2,7) உரிய செவ்வாய் ஐந்தில் இருப்பத நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (4,5) உரிய சனி 9இல் இருப்பது அட்டமத்துச் சனியைவிட நன்மை செய்யலாம். வாகன சுகம் மத்திம பலன் தாய்க்கும் மத்திமபலன். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். (9,12) உரிய புதன் 7இல் இருப்பதில் பலன் செய்யாது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. சயன சுகம் இருக்காது. (3, 6) உரிய குரு 12இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகை விலகும்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 4இல் இருப்பது தோசமான நிலை. மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் பிரயோசனம் இல்லை. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லையுண்டு. (2,5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 9இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இளைய சகோதரத்துக்கு கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 6இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. தொழிலுக்கு உரிய சூரியன் 6இல் இருப்பது விசேஷம். தொழிற்துறை முன்னேறும் அரச தொடர்பு உருவாகும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் கேதுடன் இருப்பது தோசம். இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (2.3) உரிய சனி 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (5,12) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது நல்லது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. (7, 10) உரிய புதன் 5இல் இருப்பது நல்லது. திருமணபலன் உண்டு. தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்கும். 9க்குரிய சூரியன் ஐந்தில் இருப்பது கூடாது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. அதிஷ்டம் இருக்காது. குரு, சனி வழிபாடு ஆறுதல் தரும்.

**மகரம்: உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். கையில் பணம் இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 9இல் இருப்பது சிறப்பானது. சயன சுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,11) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது கூடாது. தாய்க்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. நண்பர்களால் செலவு அதிகரிக்கலாம். (5, 10) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது நல்லது. தொழிற்துறையில் முன்னேற்றம் உண்டு. குழந்தைகள் கல்வியிலும் விளையாட்டிலும் ஆர்வம் காட்டுவர். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமணபலன் உண்டு.

**இவ்வார 'ராசிபலன்' 02–05–2005 முதல் 08–05–2005**
**பொ. சந்திரன்**

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு | புதன் சுக்கி சூரியன் | | சனி |
| செவ் | | | |
| | | | |
| | | | குரு கேது |

| | | |
|---|---|---|
| செவ் | சதயம் | ராகு |
| சுக்கிரன் | கார்த்திகை | சூரியன் |
| புதன் | அச்சுவினி | கேது |
| சூரியன் | பரணி | சுக்கிரன் |
| குரு | அத்தம் | சந் |
| சனி | புனர்பூசம் | குரு |

சித்திரை 19 முதல் 25 வரை

சந்திரன் கும்பம் முதல் மேடம் வரை

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1, 12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகும். சயன சுகம் இருக்காது. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (2, 11) உரிய குரு 8இல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (3,10) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது தோசம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (4, 9) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. பெற்றோர் நலம் . வாகன சுகம் உண்டு. 7க்குரிய சூரியன் மூன்றில் இருப்பது நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1, 10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. இருப்பினும் கேதுவுடன் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்கும். (2, 9) உரிய செவ்வாய் 12இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் கூடாது. (4, 7) உரிய புதன் இரண்டில் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. தாய்க்கு நல்ல பலன் உண்டு. திருமணபலன் உண்டு. (11, 12) உரிய சனி 4இல் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. 6க்குரிய சூரியன் இரண்டில் இருப்பது உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். கள்வர் பயம் உண்டு.

# முஸ்லிம்கள் மீதான பேரினவாதிகளின் குற்றச்சாட்டு....

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புபடுத்தி பிரச்சினையை வேறு வடிவில் திசை திருப்புவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர்.

**சூத்திரதாரிகள் யார்?**

சிலை அருகே நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலைப் பொறுத்தமட்டில், அதனை பேரினவாதத் தரப்பினரே திட்டமிட்டு மேற்கொண்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. ஏனெனில், முஸ்லிம்கள் மீது பழியைப் போட்டுவிட்டு, அதன் மூலம் சிலை வைப்பு – பௌத்த விகாரை நிர்மாணம் – சிங்களக் குடியேற்றம் போன்ற தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான முஸ்லிம்களின் அமைதி வழிப் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும்.

பாரிய குண்டுகள் வெடிக்கச் செய்யப்பட்டாலும், புத்தர் சிலைக்கு சிறியளவிலான சேதம்கூட ஏற்படவில்லை. தவிர குறித்த குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடம், படையினரின் இரு முகாம்களுக்கிடையே அமையப் பெற்றிருக்கிறது.

ஆகையினால் குண்டுத்தாக்குதலின் பின்னணியில் நிச்சயமாக முஸ்லிம்கள் இருப்பதற்கு வாய்ப்பே கிடையாது. புத்தர் சிலைகளைத் தகர்ப்பதுதான் முஸ்லிம்களின் நோக்கம் – இலக்கு என்றால் அதன் மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். அதனைவிட குண்டுவெடிப்புக்கு முதல்நாள் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஒன்றிணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது புத்தர் சிலைகள் யாவும் சுக்கு நூறாக உடைத்து நொருக்கப்பட்டிருக்கும் என்பதை விஷமப் பிரசாரம் மேற்கொள்ளும் பேரினவாதச் சக்திகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் இந்தக் குண்டுத்தாக்குதலை மாத்திரம் தூக்கிப்பிடித்துக் கொண்டு முஸ்லிம் சமூகத்தில் ஆயுதக்குழுக்கள் இருப்பதாகப் பேரினவாதிகள் கூச்சலிடுவதானது முஸ்லிம்களைப் பாதிக்கவே செய்யும்.

பௌத்த தேசியவாதத்தில் ஊறித்திளைத்த – பேரினவாதக் கும்பல்களான ஜே.வி.பி., ஹெல உறுமய கட்சியினரால் முஸ்லிம்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்ற அபாண்டமான குற்றச்சாட்டு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இக்குற்றச்சாட்டின் பின்னணியை முஸ்லிம் தலைவர்கள் ஆராய வேண்டும்.

நெல் கொள்வனவு, புதிய அமைச்சர்கள் நியமனம், மின்சாரசபை மறுசீரமைப்பு, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தல், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான இடைக்கால நிர்வாகம், சுனாமி புனரமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு எனப் பல்வேறு விடயங்களில் ஜே.வி.பியினருடன் கொள்கை ரீதியாக மோதிக்கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பொத்துவில் விவகாரத்தில் தலையிட முன்வராமல் மௌனம் சாதிப்பதன் மர்மம் என்ன என்பதையும் முஸ்லிம் தலைவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும்.

**மௌனித்துப்போன அமைச்சர்கள்**

இந்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்களின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் நிறுவனமான முஸ்லிம் காங்கிரஸே முஸ்லிம் ஆயுதக் குழுக்களை வழிநடத்தி வருகிறது என ஹெல உறுமய தெரிவித்திருக்கும் கருத்தையும் இங்கு உன்னிப்பாக நோக்குதல் வேண்டும்.

பொத்துவில் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மாத்திரமே முழுமூச்சுடன் எதிர்த்து வருகிறார். அரசில் அமைச்சுப்பதவிகளை வகித்துக் கொண்டு மௌனிகளாக அடங்கிப்போயிருக்கின்ற தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் அதாவுல்லா, தவிசாளரான பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில், நுஆ தலைவி -- அமைச்சர் பேரியல் அஷ்ரப், செயலாளர் நாயகமான பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் போன்றோர் சர்ச்சைக்குரிய பொத்துவில் பிரதேசத்தை உள்ளடக்கிய அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றபோதிலும் அப்பகுதியை பேரினவாதிகளின் பிடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை.

அதிபேரினவாத சக்திகளான ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியினரிடமிருந்து முஸ்லிம்களுக்கு விடுக்கப்பட்டிருக்கின்ற அச்சுறுத்தலை முறியடிக்கவும், முஸ்லிம்களின் பூர்வீக பூமியைக் காப்பாற்றிக் கொள்ளவும் தூர நோக்குடன் சிந்தித்து செயற்படுவது சகல தரப்பு முஸ்லிம் தலைவர்களினதும் தார்மீகக் கடமையாகும்.


**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம்.ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவதெனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைவு பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

மே 20 – 25 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang, Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

மே 07 - 08 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

மே 10 -15
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி ,யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa. Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# சிவானந்த தபோவன குழந்தைகளின் கல்வி நற்பணிக்கான கலை நிகழ்வும் இறுவட்டு வெளியீடும்



பிரபல ஊடகவியலாளரான வியாசா கல்யாணசுந்தரத்தின் படைப்பான 'அருணோதயம்' இறுவட்டினை துரைச்சாமிச் செட்டியார், சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்களுக்கு வழங்குகிறார்.





சிவானந்த தபோவன பிள்ளைகள் பாடலிசைக்கின்றனர்.

மனஅமைதிக்கான யோகாசன வழிமுறைகள் அடங்கிய 'Yogic Relaxing Techniques' இறுவட்டினை புதிய கதிரேசன் கோவில் அறங்காவலர் சுப்பிரமணியச் செட்டியார் வெளியிட்டு வைக்க, ஆறுமுகம் பெற்றுக் கொள்கிறார். மத்தியில் ஊடகவியலாளர் வியாசா கல்யாணசுந்தரம்.

திருகோணமலை உப்புவெளிப் பிரதேசத்தில் அமைந்துள்ளது இறை குழந்தைகளின் காப்பக மான சிவானந்த தபோவனம்.

கடந்த ஆண்டு இறுதியில் இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தத்தின் போது இது பெரும் அழிவுக்கு உள்ளானது.

தபோவனத்தைச் சேர்ந்த 161 மாணவ, மாணவிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வியைக் கட்டியெழுப்பும் முகமாக கடந்த 17 ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் துரைச்சாமி செட்டியார் தலைமையில் கலை நிகழ்வு ஒன்றை நடத்தியது சனாதனதர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்த நிகழ்வில் முதலாவது நிகழ்வாக சிவானந்த தபோவன சிறுமியரின் இனிமையான பாடல் நிகழ்வு இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து ஆரியபட்டர் பாலமந்திர் மாணவர்களின் யோகாசன கட்டடங்கள் அமைத்துக் காட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வை அடுத்து கம்பவாரிதி இ. ஜெயராஜ் வாழ்த்துரை நிகழ்த்தினார். அவரின் வாழ்த்துரையை அடுத்து ஒலி பரப்பாளரும், சர்வதேச ஊடகவியலாளருமான வியாசா கல்யாணசுந்தரம் அவர்களின் படைப்பான 'அருணோதயம்' இறுவட்டு தொகுதி வெளியிடப்பட்டது. இந்த இறுவட்டு தொகுதி 12 இறுவட்டுக்களை அடக்கியது.

இறுவட்டு தொகுதி விரதங்களின் முக்கியத்துவம் அவற்றின் சிறப்பு, வரலாறு, இந்துக்களின் சாஸ்திரம், அதன் உண்மைகள், பலா பலன்கள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியது.

அத்துடன் மன அமைதிக்கான யோகாசனப் பயிற்சிகளை உள்ளடக்கிய மேலும் ஒரு இறுவட்டு வெளியிட்டு வைக்கப் பட்டது. இது சிரேஷ்ட யோகாசனப் பயிற்றுவிப்பாளரான தில்லைநாதன் ஆனந்தரவியின் படைப்பாகும்.

'மன அமைதிக்கான பயிற்சிகள்' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இந்த இறுவட்டில் உடல் உள உளைச்சல்கள் நீங்கவும், மன அமைதியை ஏற்படுத்தவும், ஆழ்ந்த தூக்கத்தைப் பெறவும் பல வழிகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இறுவட்டு வெளியீட்டை அடுத்து சிரேஷ்டயோகாசன பயிற்றுவிப்பாளரான ரி.ஆனந்தரவியுடன் ஸ்ரீராம் கிருஸ்ரி நடனப்பள்ளி மாண வர்கள் வழங்கிய பஞ்சபூத தத்துவங்களை விளக்கும் யோகானந்த நாட்டியாஞ் சலி நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வு பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்திருந்தது. இந்தநடன நிகழ்வு மிக அருமையாக வடிவமைக்கப் பட்டிருந்தது.

நாட்டியாஞ்சலி நிகழ்வை அடுத்து சிவானந்த தபோவன இல்ல மாணவிகளின் பாடல் நிகழ்வும், அதனைத் தொடர்ந்து இல்ல மாணவிகளின் குழுநடனம் நிகழ்வு இடம்பெற்றன.

இவ் நிகழ்வை அடுத்து அதிஷ்டகுலுக்கல் இடம்பெற்று வெற்றியாளர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்வை சிறப்புற அமைத்த சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம், ஆரிய பட்டர் பாலமந்திர் உறுப்பினர்களும் வியாசா கல்யாண சுந்தரம், தில்லைநாதன் ஆனந்த ரவி ஆகியோரும் பாராட்டப் பட வேண்டியவர்கள்.

இனிய மாலைப்பொழுதில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவிய ஒரு மன நிறைவு.

-நிமல்ஷி-



சிவானந்த தபோவன மாணவியின் ஒரு நடனத் தோற்றம்



'யோகானந்த நாட்டியாஞ்சலி' என்ற யோகமும் பரதமும் இணைந்த ஒரு வித்தியாசமான நடனம்

ஆரியபட்டர் பாலமந்திர் மாணவர்கள் யோகாசன கட்டடங்கள் அமைத்துக் காட்டுகின்றனர்.





சிவானந்த தபோவன இல்லப் பிள்ளைகளின் குழு நடனம்



நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரில் ஒரு பகுதியினர்

# ஆரோக்கியமான குழந்தைகளும் பெண்களின் தாய்மை வயதும்

பிறவி இருதய நோய்க்கு இன்னும் காரணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

சில காரணங்கள் மட்டும் உறுதியாக தெரிந்திருக்கின்றன. கர்ப்ப காலத்தில் தாய் சத்தான உணவை உட்கொள்ளாமல் சத்துக் குறைவு ஏற்பட்டால் குழந்தையின் வளர்ச்சியை குறிப்பாக இருதய வளர்ச்சியைப் பாதிக்கும். வேளாவேளைக்கு சத்தான உணவுசாப்பிட்டு ஓய்வாக இருக்க வேண்டும் என்பதற்காக தான் கருவுற்ற பெண்ணை தாய் வீட்டிற்கு அனுப்பும் வழக்கம் வந்தது.

கர்ப்ப காலத்தில் போலிக்அமில விட்டமின் மிகவும் முக்கியம் என்பதால் இது அதிகமாக இருக்கும் காம்ப்ளக்ஸ் மாத்திரையை தினமும் 400 மில்லிக்கிராம் அளவுக்கு உட்கொள்ள வேண்டும். குழந்தையின் நரம்பு மண்டலம் ஆரோக்கியமாக இருப்பதற்கு போலிக் அமில விட்டமின் மிகவும் அவசியம். அதற்கு அடுத்து இரும்புச் சத்து, ஹீமோகுளோபின் உற்பத்திக்கு தேவை.

இரும்புச் சத்து அதிகமுள்ள எல்லா வகையான கீரை, பால், முட்டை, கோழி, மீன் நிறையச் சேர்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக முருங்கைக்கீரை, முருங்கைக்காய் நிறையச் சாப்பிடலாம். புரதச்சத்தும் வளர்ச்சிக்கு முக்கியம் என்பதால் தினமும் ஏதாவது பருப்பை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். கதிரியக்கம், எக்ஸ்ரே போன்ற கதிர்கள் தாயின் உடலுக்கு செல்லும்போது குழந்தையின் இருதய வளர்ச்சி பாதிக்கப்படுகிறது, குறிப்பாக குழந்தையின் இருதயம் வளரும் முதல் மூன்று மாதங்களில் கதிரியக்க, எக்ஸ்ரே போன்ற பரிசோதனைகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். அனால்ஜிசைட்ஸ் கலந்த வலி நிவாரண மாத்திரைகள், ஆண்டிபயடிக் மாத்திரைகள், சல்பர் கலந்த மாத்திரைகள் இவற்றை கர்ப்ப காலத்தில் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். மதுப் பழக்கம், சிகரெட் பழக்கம் இருக்கும் பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பிறவியிலேயே இருதய நோய் ஏற்படும். இந்த பொருட்களில் 'டெரடோ ஜின்' என்ற பிறவி இருதய நோயை உண்டாக்கும் பொருள் உள்ளது.

முதல் சில மாதங்களில் விபத்து போன்ற காரணங்களால் வயிற்றில் அடிபட்டால் குழந்தைக்கும் அந்த பாதிப்பு இருக்கும்.

தாய்மை அடைந்துள்ள பெண்கள் எந்த மாதிரி மாத்திரை சாப்பிட்டாலும் என்ன சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றாலும் நல்ல அனுபவம் வாய்ந்த டாக்டரிடம் ஆலோசனை மற்றும் அவர்களின் கண்காணிப்பில் மட்டுமே சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கர்ப்ப காலத்தில் தாய்க்கு எந்த தொற்றும் ஏற்படாமல் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக ஜெர்மன் மீசில்ஸ் எனப்படும் தட்டம்மை ஆபத்தானது. இது ருபெல்லா என்ற வைரசால் வருகிறது. இதைத் தடுக்க தற்போது தடுப்பு மருந்துகள் இருக்கின்றன. கர்ப்பம் அடைந்த பெண் இந்த ருபெல்லா தடுப்பு மருந்தை போட்டுக் கொள்வது அவருக்கும் குழந்தைக்கும் பாதுகாப்பானது.



கருப்பையில் இருக்கும்போதே குழந்தையை தாக்கும் நோய்களில் இருந்து குழந்தையை பாதுகாப்பதற்காக கருப்பையில் கருமுட்டையை சுற்றி ஆம்னியாடிக் என்ற திரவம் உள்ளது. இது குழந்தை கருப்பையில் சுற்றி வரும்போது அடிபடாமல் காப்பதற்காக இயற்கையாகவே இருப்பது.

சிலருக்கு மரபியல் காரணங்களால் இந்த திரவம் வழக்கத்தைவிட அதிகமாக இருந்தால் குழந்தையின் இருதயத்தை பாதித்து கோளாறுகளை உண்டாக்குகிறது. தாயின் மரபணுக்கள், தந்தையின் மரபணுக்கள் இரண்டிலும் ஏதாவது பிரச்சினை இருந்தால் அது கருவில் இருக்கும்போதே குழந்தையைப் பாதிக்கும்.

35 வயதிற்குள் கர்ப்பம் தரிப்பது தாய்க்கு பாதுகாப்பானது. 40 வயதிற்கு மேல் கர்ப்பம் தரிக்கும் பெண்ணின் குழந்தைக்கு இருதயக் கோளாறுகள் ஏற்பட நிறைய வாய்ப்புகள் உள்ளது.

இந்தியாவில் ஆண்டுதோறும் ஒரு லட்சத்து 12 ஆயிரம் குழந்தைகள் பிறவி இருதய கோளாறுகளுடன் பிறக்கின்றனர்.

இதில் 50 ஆயிரம் குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது. இதில் மூன்றில் இரண்டு சதவீதம் குழந்தைகளுக்கு இருக்கும் கோளாறுகளை பிறந்த ஓராண்டிலேயே கண்டுபிடித்து விடலாம். ஓராண்டிற்குள் இருதய அறுவைச் சிகிச்சை செய்தால் முழுமையாக வெற்றி கிடைப்பதில்லை.

இருதயத்தில் மேல்புறம் இரண்டு அறைகளும் கீழ் புறம் இரண்டு அறைகளுமாக நான்கு அறைகள் இருக்கும்.

மேலறையில் ஒன்றும் கீழறையில் ஒன்றுமாக இரண்டு தடுப்பு சுவர்கள் இருக்கின்றன.

இந்த மேலே குறிப்பட்ட காரணங்களால் அல்லது மரபியல் காரணங்களால் இந்த சுவர்கள் உருவாகும் போதே கோளாறுகள் ஏற்பட்டு ஓட்டை அல்லது துவாரம் ஏற்படுகிறது.

உயிர் வாழ்வதற்கு பிராண வாயு மிகவும் அவசியம். உடலில் அனைத்து உறுப்புக்களும் பிராணவாயு இருந்தால் தான் ஆரோக்கியமாக இயங்க முடியும்.

இந்த பிராண வாயு உள்ள சுத்த இரத்தம் நுரையீரலில் இருந்த இடது மேலறைக்கு வந்து அதிலிருந்து இடது கீழறைக்குச் சென்று அங்கிருந்து அயோட்டா எனப்படும் மகாதமனி மூலம் உடல் முழுவதும் எடுத்துச் செல்லப்படுகிறது.

அசுத்த இரத்தம் வலது மேலறை வழியாக கீழறைக்கு சென்று பல்மோனரி தமனி மூலம் நுரையீரலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அதில் உள்ள காபனிரொக்சைட் சுத்தம் செய்யப்பட்டு ஒக்சிஜன் கலந்து பழையபடி உடல் முழுவதும் செல்கிறது.

இந்த செயற்பாட்டில் பிறவியிலேயே சில குழந்தைகளுக்கு இருதய இடமாற்றம் (வழக்கமாக இருதயம் இடது பக்கத்தில் இருக்கும்) வால்வுகள், இரத்தக் குழாய்களில் கோளாறு போன்றவை ஏற்பட்டு 'புளூபேபி' எனப்படும் குழந்தையின் உடல் முழுவதும் நீலநிறமாகும் நோய் ஏற்படுகிறது.

எனவே வளமான சந்ததியைப் பெற்றுக்கொள்ள தாய்மைப் பேற்றினை 20 வயது முதல் 30 வயதிற் கிடைப்பட்ட இளப் பிராயத்தில் கர்ப்பம் அடைவதே சிறந்த வழியாகும்.




# சமையலறைப் பராமரிப்பு

எப்படிப்பட்ட சிறிய இடமாக இருந்தாலும் சமைக்கும் இடம் ஒன்று உண்டு. சமையலறையைச் சுத்தமாகப் பராமரிப்பது மிக மிக அவசியம். உடல் உறுப்புக்களில் இருதயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவத்தை உண்டோ, அத்தனை முக்கியத்துவம் நாம் சமைக்கும் அறைக்கும் தரவேண்டும். இருதயத்திற்கு ஒத்துக் கொள்ளாத சில பொருட்களை நாம் சாப்பிடாமல் ஒதுக்கி விடுகிறோம் அல்லவா? அதேபோல் சமையல் அறையில் தேவைக்கு அதிகமான பொருட்களை அங்கங்கே போட்டு வைத்தால் சமையல் அறையின் அழகு கெடுவதுடன், சமைப்பவருக்கு சமையல் செய்ய வெறுப்புத்தான் வரும். எனவே இருப்பதை எளிய முறையில் எப்படி அழகுற அமைக்கலாம் என்று பார்ப்போம்.

சாப்பாடு எளிமையாக இருந்தாலும் அதை பரிமாறுபவர் இனிய முகத்துடன் பரிமாற வேண்டும். சாப்பாடு சமைக்கும் இடம், பரிமாறும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும்.



எனவே, முதலில் உங்கள் சமையல் அறை அல்லது சமைக்கும் இடத்தின் அளவை ஒரு பேப்பரில் குறித்துக்கொள்ள வேண்டும். கதவு, ஜன்னல் போன்ற இடங்களின் அளவை அளந்து மொத்த அளவில் கழித்துக் கொள்ளலாம். மிகுதி இடத்தில் தான் தேவையான பொருட்களை அடுக்க வேண்டும்.

குடும்பத் தலைவி அல்லது பெண்மணி குடும்பத்தின் பல்வேறு வேலைகளை கவனிக்க வேண்டியிருப்பதால் சமையலறை நடக்கும் இடம் சிறியதாக இருக்க வேண்டும். குறைந்த நடையில் அதிகமான பொருட்களை எடுத்து வைக்கும்படியான சுலபமான அமைப்புத் தரப்பட வேண்டும்.

பெரிய சமையலறையோ, சிறிய சமையலறையோ, வசதியுடையதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், நல்ல ஒரு அமைப்பை நாமே ஏற்படுத்திக் கொள்ளலாம். முதலில் எலக்ட்ரிக் பொயின்ட்களில் போதிய சாதனங்களை அடுக்கி விட்டால் மிகுதியாக இருக்கும் இடங்களை சமையல் பொருட்களை வைக்க பயன்படுத்த வேண்டும். மேலும், அந்த இடம் சமைக்க மட்டுமா? அங்கே உட்கார்ந்து சாப்பிடவும் வேண்டுமா என்பதையும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்தபடி பொருட்களை ஒன்றுக்கொன்று இடைஞ்சல் இல்லாதவாறு அடுக்கி வைக்கலாம்.

மிகச் சிறிய சமையலறையாக இருந்தால் ஒரு மூலையில் கை கழுவும் சிங்க், அதையடுத்து சிறிது இடம் விட்டு காஸ் குக்கர் வைக்கலாம். காஸ் குக்கர் பக்கம் சிறிது இடம் விட்டு சமைத்த பாத்திரங்களை சமைத்த சுவடு தெரியாமல் அழகாக பாத்திரங்களுக்கு சரியான மூடி போட்டு அடுக்கி வைக்கலாம். சாப்பாட்டுப் பாத்திரங்களின் மேல் பயன்படுத்திய கரண்டி, அகப்பை போன்றவற்றை அப்படியே வைக்கக் கூடாது. வைத்தாலும் நன்கு கழுவி வைக்க வேண்டும். அப்படியே வைத்தால், கொசு, ஈ போன்றவற்றுக்கு இலவச சாப்பாடு எப்போதும் தயார்!

ஒரு குடும்பத் தலைவி அந்த குடும்பத்தின் நேர்ஸ் போன்று சேவை செய்து குடும்ப நலனில் மிகவும் அக்கறை எடுத்து சுகாதாரத்தைக் காப்பது அவசியமாகிறது.

# தேவையற்ற கவலைகளிலிருந்து விடுதலை பெறுங்கள்



கவலைப்படுவது நமக்கு பழக்கமாகிவிட்டது. 'வேலைக்காரி வரவில்லை', 'குழந்தைகள் வீட்டுப்பாடம் முடிக்கவில்லை', 'உறவினரின் திருமணத்திற்கு அணிய சரியான நகை இல்லை' இப்படி நமக்கு தேவையில்லாத கவலைகள் எத்தனையோ! நாம் ஒரு நிமிடம் சிந்திக்க வேண்டும். கவலைப்படுவதால் வேலைக்காரி வந்துவிடுவாளா, அல்லது குழந்தைகள் வீட்டுப் பாடம் முடித்துவிடுவார்களா, அல்லது நாம் விரும்பிய நகைதான் கிடைத்துவிடுமா? எதுவும் இல்லை! இருந்தும் நாம் கவலைப்படுகிறோம்.

கவலைப்படாமலே இருக்க முடியாதுதான். ஆனால் தேவையில்லாதவைக்கு கவலைப்படாமல் இருக்கலாமே.

சின்ன சின்ன விஷயங்களுக்கு கவலைப்படுவதை தவிர்ப்பது எப்படி? தொடர்ந்து படியுங்கள்.

'வீட்டைச் சுத்தம் செய்யவேண்டும்'

'சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்குப் போக வேண்டும்'

இப்படி செய்துமுடிக்காத பல வேலைகள் நம்மை கவலைப்பட வைக்கும். இது போதாது' என்று இலவச ஆலோசனை வழங்குவோரின் தீராத 'இதை இப்படிச் செய், அதை அப்படிச் செய்யாதே' அப்பப்பா!

அனைவரையும் திருப்திப்படுத்த முடியாது.

மற்றவர்களின் பேச்சு இருந்துகொண்டே இருக்கும், அதற்கு அதிக முக்கியத்துவம் தராமல்; உங்களுக்கு எது தேவை என்பதை முடிவெடுங்கள். மகிழ்ச்சியாக வாழ என்ன தேவை என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் மகிழ்ச்சியாக வாழுவது முக்கியம், அதைத் தவிர்த்து எல்லோரும் போற்றும் பெண்ணாக வாழ வேண்டும் என்று முயல்வதில் பல கவலைகளுக்கு ஆளாகாதீர்கள். மற்றவர் விருப்பப்படி, அவர்கள் எது சரி என்று நினைக்கிறார்களோ அப்படி வாழ்வதால் நிச்சயம் உங்கள் கவலைகள் பெருகும்.

கவலைப்பட ஆரம்பித்தவுடன் உங்களை நீங்களே நிறுத்திக்கொள்ளுங்கள். 'இப்போது நான் கவலைப்படுவதால் என்ன பயன்' என்று யோசித்துப் பாருங்கள். ஒரு பயனும் இல்லை என்று உங்களுக்குத் தோன்றினால் என்ன செய்யவேண்டும் என்பதைச் சிந்தியுங்கள்.

நடந்தவை, நடக்க இருப்பவை ஆகியவற்றைப் பல முறை யோசித்து நேரத்தை வீணாக்கிக்கொள்வதில் எவ்வித பயனும் இல்லை.

மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயம், கவலை ஆகியவற்றை விட்டு உங்களுக்குச் சரி என்று தோன்றினால் மட்டுமே எதையும் செய்யப் பழகுங்கள்.

எதை எப்போதும் செய்யவேண்டும் என்று முடிவெடுக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். இந்த பழக்கங்கள் நீங்கள் தேவை இல்லாமல் கவலைப்படுவதை தடுக்கும். கவலைப் படுவதால் எதையும் சாதிக்க முடியாது.

# 15ஆண்டுகளுக்குப் பிறகு மலையிலிருந்து கீழே இறங்கிய சாமியார்



இந்தியாவின் திருவண்ணா மலையில் அமைந்துள்ள அண்ணா மலையார் மலையில் இருந்து 15 ஆண்டுகளுக்கு பின்னர் சாமியார் ஒருவர் கீழே இறங்கிவந்திருக்கிறார்.

தூத்துக்குடி மாவட்டம் பாங்குணம் என்ற கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம் என்ற சாமியார் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலைக்கு வந்திருந்தார். அங்கு மலையில் இருக்கும் சாமியைத் தரிசிக்கச் சென்றபோது பத்திப்பரவசமாகி அம் மலையிலேயே தங்கிவிட்டார்.

கடந்த 15 ஆண்டுகளாக அண்ணாமலையார் மலையில் தீபம் ஏற்றும் இடத்துக்கு அருகில் அமர்ந்து பக்தர்களுக்கு அருளாசிவழங்கி வந்தார். மலையில் இருக்கும் போது நாள்தோறும் பக்தர்கள் சென்று அவரை வணங்கி வந்தனர்.

பால், தண்ணீர் உள்ளிட்ட திரவ உணவுவகைகளை மட்டுமே கடந்த 15 ஆண்டுகளாக அவர் உண்டு வந்தார். என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் திடீரென சாமியார் மலையிலிருந்து இறங்கி வந்துள்ளார் அவர் தங்குவதற்கென பக்தர்களால் போடப்பட்ட பந்தலில் தங்கியிருந்து பக்தர்களுக்கு ஆசி வழங்கி வருகிறார்.

அவரைக்காண பல மாவட்டங்களில் இருந்தும் அண்டை மாநிலங்களில் இருந்தும் வந்து பெருமளவு பக்தர்கள் குவிந்துள்ளனர். நீண்ட வரிசையாக நின்று இவர்கள் சாமியாரைத் தரிசித்துச் செல்வதாகக் கூறப்படுகிறது.

வெளியூர்களில் இருந்து வருவோரால் கொண்டுவரப்படும் வாழைப்பழம், கற்கண்டு உள்ளிட்ட பொருட்கள் சாமியரை வணங்க வரும் பக்கர்களால் பிரசாதமாக வழங்கப்பட்டு வருகின்றன.

சாமியாரை வணங்கவரும் பக்தர்கள் தங்கி தரிசித்துச் செல்ல வசதியாக விக்னேஷ் பொலிடெக்னிக் என்ற நிறுவனம் தங்குமிட உணவு வசதிகளை வழங்கி வருகிறது.


இப்பொழுது வெள்ளவத்தையில்...



தமிழ் பேசும் மக்களின் தன்மான பத்திரிகைகளான

உதயன்

சுடர் ஒளி

கிளைப் பணிமனை

379 முதலாம் மாடி, காலி வீதி, கொழும்பு-06.

தொ.பே:- 011 4528699, 0714 150300

(ஹோட்டல் சப்பயருக்கு சமீபமாக)

திருகோணமலையில்...

சுடர் ஒளி THE SUDAR OLI · உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த பல்லி மாரச்சி மாவத்தை, கொழும்பு – 14.
011 4734401 – 3, 011 2399666 – 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

EXPOAIR எக்ஸ்போ ஏயார்

your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com



யாழ். நகரில் குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்!
நிகரில்லாத் தரங்கள்!

அழகிய புடவைத் திணுசுகளின்
குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்



கிறீன் பலஸ் எம்போறியம்

நாளைய நாகரிகத்தை நாம் இன்றே அறிமுகப்படுத்துகின்றோம் ஒரு முறை விஜயம் செய்துபாருங்கள் உண்மை புரியும்.

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.



மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்... உங்களின் இக்காலத் தெரிவுக்கு...

குமரகுரு

புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.



குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

KUMARAKURU TEXTILE & FANCY HOUSE

யாழ் சாலை, கிளிநொச்சி · Tel: 021 228 5971 · Yarl Road, Kilinochchi.



இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, மே. 01 ஆம் திகதி வெளியிடப்பட்டது.